கரந்தைப் புலவர் கல்லூரி
வெள்ளி விழா ஆண்டு மலர்.

ஜெயச்சந்திரன் (ஜெ.ஆர்)

தமிழ் வாழ்க!

# கரந்தைப் புலவர் கல்லூரி

## வெள்ளி விழா

ஆண்டு

# மலர்

இளங்கோவடிகள் தமிழ்க் கழகம்




கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

சென்னை-81
M. LITT. DIP. IN LING.

தமிழ் வாழ்க

# கரந்தைப் புலவர் கல்லூரி

( கரந்தைத் தமிழ்ச் சங்கம் )

# இளங்கோவடிகள் தமிழ்க் கழகம்

# வெள்ளி விழா மலர்

*


ஆசிரியரும், வெளியிடுவோரும் ;

*பேராசிரியர் ஜெ. ஆர். ஜெயச்சந்திரன்,*

எம். ஏ. (வரலாறு) : எம். ஏ. (தமிழ்): டி. பி. ஈ. டி.

தலைவர்

இளங்கோவடிகள் தமிழ்க் கழகம்.


**1970**


அச்சிட்டோர் :-

மகாலிங்கம் அச்சகம்,

தஞ்சை.

நன்மா ணவராகும் வண்டர் நனிபயின்று
பன்மாண் கலைத்தேன் பருகுமா-மன்மாண்
கரந்தைத் தமிழ்ச்சங்கக் கல்லூரிப் பூங்காப்
பரந்தொளிர்ந்து வாழியரிப் பார் "

நாவலர், ந. மு. வேங்கடசாமி நாட்டார்

★

## ஆசிரியர் குழு

பேராசிரியர் ஜெ. ஆர். ஜெயச்சந்திரன்,
எம்.ஏ. (வரலாறு) : எம். ஏ. (தமிழ்) : டி. பி. ஈ. டி., முதல்வர்.

வித்துவான் தி. அடிகளாசிரியர்
,, ச. பால்சுந்தரம்
,, சி. கோவிந்தராசன்
,, பி. விருத்தாசலம், பி. ஏ.

★

## இளங்கோவடிகள் தமிழ்க் கழகம்

### செயற்குழு 1969-70

தலைவர் :
பேராசிரியர் ஜெ. ஆர். ஜெயச்சந்திரன்

துணைத் தலைவர் :
வித்துவான் தி. அடிகளாசிரியர்

உறுப்பினர்கள்

இரா. தனபால்ராசு
இரா. கலியமூர்த்தி — செயலாளர்
ந. தனபாலன்
எம். ஆர். கலியபெருமாள்
கோ. லலிதா
ச. ஞானவடிவு — செயலாளர்
அர. ஜோதி
பொ. தமிழ்ச்செல்வி.

"சாகித்ய அக்காதமி" பரிசு பெற்ற
பேராசிரியர்
க. த. திருநாவுக்கரசு அவர்களின்
அன்பளிப்பு.



**தமிழவேள், த. வே. உமாமகேசுவரம் பிள்ளை,** பி. ஏ., பி. எல்.,
முதல் தமிழ்ச் சங்கத் தலைவர்
புலவர் கல்லூரியைத் தோற்றுவித்த செந்தமிழ்க் காவலர்.



கரந்தைப் புலவர் கல்லூரி.



வெள்ளி விழாத் தலைவர்
தமிழவேள், திரு. P. T. இராசன்



முத்தமிழ்க் காவலர்

**திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்**

தலைவர்

27—2—70



பேராசிரியர்

**திரு. அ. கிருட்டினமூர்த்தி,**

M. A., B. L., B. O. L. (Hons)., Major N. C. C

தலைவர்

28—2—70

## பொருளடக்கம்


1) தமிழ் நாடகங்கள் 1
மாண்புமிகு கலைஞர், மு. கருணாநிதி, முதலமைச்சர், தமிழ்நாடு.

2) தமிழில் திறனாய்வு 2
டாக்டர். மு. வரதராசனார், தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்.

3) தமிழும் அறிவியலும் 6
திரு. K. S. மகாதேவன், பி. எசி., எம். ஏ., இணைப்பேராசிரியர் தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி, சென்னை.

4) வரலாற்றாசிரியர் 12
திரு. ந. மு. கோவிந்தராய நாட்டார், பி. ஏ., எல். டி.

5) சிலம்பு சிலம்பியது 18
திரு. சாலை இளந்திரையன், தில்லிப் பல்கலைக்கழகம், தில்லி.

6) இலக்கியம் வலியுறுத்தும் நீதிகள் 24
சித்தாந்த கலாநிதி, உரைவேந்தர், பேராசிரியர் ஔவை சு. துரைசாமி

7) சுந்தரத் தமிழ் 30
திருமதி சாலினி இளந்திரையன்

8) மாதர் அணிகலன் 37
புலவர். பி. விருத்தாசலம். பி. ஏ., பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி.

9) அளபெடை 42
முதுபெரும் புலவர். ச. தண்டபாணி தேசிகர்.

10) மதகுக் கற்கள் காட்டும், மதுராந்தகத்து வட திருச்சிற்றம்பலம் 46
பேராசிரியர், சி. கோவிந்தராசனார்.

11) கரந்தைத் தமிழ்ச் சங்கம் செய்த சில பணிகள் 49
திரு. செ. தனக்கோடி, பி. ஏ., தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

12) கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்வி நிலையங்கள் 52
திரு. ச. சுந்தரம், பி. ஏ., பி. எல்., தாளாளர்: சங்கக் கல்வி நிலையங்கள்

13) மணிவாசகர் கண்ட கண்ணப்பர் 54
திரு. K. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்., தஞ்சை.

14) இளங்கோ வேந்தர் கூறும் இசை, கூத்துக் குறிப்பு 60
பண்ணாராய்ச்சி வித்தகர், குடந்தை ப. சுந்தரேசன்.

15) இளந்தமிழா எழு! 65
பேராசிரியர், ஜெ. ஆர். ஜெயச்சந்திரன், எம். ஏ. (வரலாறு); எம். ஏ. (தமிழ்). டி. பி. ஈ. டி.

16) கம்பமாகவி 70
பாவலரேறு ச. பாலசுந்தரம், பேராசிரியர் கரந்தைப் புலவர் கல்லூரி

17) குழந்தை போன்ற குறள் 78
வித்துவான். திரு. அடிகளாசிரியர்.

**கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின்**

# அடையாளம்

**(குறிக்கோள் விளக்கம்.)**

திருவளர் **தாமரை** நடுவண தாகப்
பெருநில மருதமும், பிறங்குசீர் **சோலை**
முல்லையும், முதிர்ந்த மொய்ம்புசேர் **மலையும்,**
கல்லென் குறிஞ்சியும், கதிரவன் தோன்றும்
**மொய்கடல்** நெய்தலும், முதற்பொரு ளாக
நானிலஞ் சுட்டி; வான்பொருள் **விளக்கும்**
**சுடரோன்** வாய்மையும் தூய்மையும் ஒழுக்கமும்
கடல்பெருங் கல்விப் பரப்பையும் காட்ட,
உலையாத் திறஞ்சேர் கலையா சிரியர்தம்
நிலையினை **மலைகள்** காட்ட, நெடியவான்
சோலையும் **தென்னையும்** தொன்மைசால் சிறப்பொடு
மாணவர் ஓங்கும் மாண்பினைக் காட்ட,
ஆணவ மின்றி அகமலர்ந் தோங்கும்
செவ்வியைத் தாமரை சிறப்பொடு காட்ட,
**பாசடை இலைகள்** நேசங் காட்ட,
**வெண்டா மரைத்தார்** வியனுல கெல்லாம்
ஒற்றுமை சேர உவப்புடன் வளைக்கும்
பெற்றிமை காட்டக், கற்றதன் பயனும்
மக்கள் பணியே மிக்கதென் பதையும்
தாய்மொழி பேணல் தக்கதென் பதையும்
சிந்தையிற் கொண்டு முந்துதல் என்னும்
உயர்குறிக் கோளினை ஒளிபெறக் காட்டும்
**தொண்டு தமிழ்முன் னேற்றத்** தோடு
துலங்குமிக் **கரந்தைத் தமிழ்ச்சங் கத்தின்**
அடையாளம் என்றே அறிகமா உலகே!

**(ச. பா.)**



**திரு. செ. தனக்கோடி,** பி. ஏ.,

தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.



திரு. **ச. சுந்தரம்,** பி. ஏ., பி. எல்.,
தாளாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்வி நிலையங்கள்.



கரந்தைத் தமிழ்ச் சங்க நிறைவேற்றுக் கழகத்தினர்.



இளங்கோவடிகள் தமிழ்க் கழகச் செயற் குழுவினரும், ஆசிரியர்களும்.

# வெள்ளிவிழா மலர்

★

கரந்தைப் புலவர் கல்லூரியில் திருவள்ளுவர் கழகம் என்ற பெயரோடு இயங்கிவந்த மாணவர் சொற்பயிற்சிக்கழகம் 1939 ஆம் ஆண்டு இளங்கோ வடிகள் தமிழ்க்கழகம் என்னும் பெயரைப் பெற்றது. தொடங்கிய காலந் தொட்டு சொற்பொழிவாற்றும் பேராற்றலை மாணவர்கள் பெறும் வகையில் பெருந்தொண்டாற்றிவரும் இளங்கோவடிகள் தமிழ்க்கழகத்தின் வெள்ளிவிழாவை இவ்வாண்டு கொண்டாடுகிறோம்

வெள்ளி விழாவையொட்டி வெளியிடப்பெறும் இம்மலரில் அறிஞர் பெரு மக்களின் ஆய்வுக் கட்டுரைகள் பல இடம்பெற்றுள்ளன பல்வேறு பணிகளுக் கிடையே நம் வேண்டுகோளுக்கிணங்கிக் குறித்த காலத்தில் கட்டுரை வழங்கி யருளிய தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர் களுக்கும் பேராசிரியப் பெருமக்களுக்கும், பெரியோர்களுக்கும் இளங்கோவடிகள் தமிழ்க் கழகத்தின் சார்பாக எம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

குறுகிய காலத்தில் நன்முறையில் இம்மலரை அச்சிட்டுத்தந்த மகாலிங்கம் அச்சகப் பொறுப்பாளரவர்கட்கும் அச்சகத் தொழிலாளர்கட்கும் எம் பாராட்டும் நன்றியும் உரியன.

ஆசிரியர்.

# தமிழ் வாழ்த்து

(வித்துவான் திரு. அடிகளாசிரியன்)

1 எங்கள் தமிழே! நீவாழ்க;
எல்லோ ருக்கும் நீவாழ்க;
திங்கள் முதலாம் முச்சுடர்போல்
தெய்வத் தமிழே! நீவாழ்க.

2 அகமும் புறமும் இனிக்கின்ருய்;
அன்பினை நாளும் வளர்க்கின்ருய்,
முகமும் விழியும் பாவையும்போல்
முதன்மை கொண்ட முத்தமிழே!

3 முன்னே பழுத்த பழம்போன்ற
முதியோ னும்உனை மொழிகின்ருன்;
பின்னே பிறந்த குழந்தைகளும்
பேசிப் பேசிக் குழறியிடும்.

4 அரசன் உன்னைப் பயில்கின்ருன்
ஐயங் கொள்வேன் உரைக்கின்ருன்
பரவும் புலவன் பாடுகிருன்
பாமரன் வாயால் உளறுகிருன்

5 எல்லோ ருக்கும் பொதுமொழியே!
எங்கள் இனிய தமிழ்மொழியே!
பல்லோ ருக்கும் பயன்படும்நின்
பண்பைக் கருதிப் பணிகின்றேன்.



**பேராசிரியர், J. R. ஜெயச்சந்திரன்,**

எம். ஏ. (வரலாறு): எம். ஏ. (தமிழ்): டி. பி. ஈ. டி.

தலைவர்

இளங்கோவடிகள் தமிழ்க் கழகம்.

படி வெளியிடுகிருர்! இங்கு 'ஆழ்கடல்நீர்'! 'ஆழ அமுக்குதல்' ஆகிய தொடர்கள் அறிவியல் நுட்பம் வாய்ந்தவை. நீருக்கு அழுத்தம் (pressure) உண்டு; நாம் எவ்வளவுக்கு எவ்வளவு ஆழத்தில் மூழ்கிச் செல்கிறேமோ, அவ்வளவுக்கு அவ்வளவு அது மிகுதியாக நம்மை அழுத்தும் அஃதாவது, ஆழத்தைப் பொறுத்து அழுத்தம் அதிகமாகும். இவ்வுண்மையினையும் பாஸ்கலே கண்டு கூறியதாக அறிவியல் ஏடுகள் பேசுகின்றன. ஆனல் இங்கு எடுத்துக்காட்டப்பட்ட 'ஆழ்கடல்நீர்' 'ஆழ அமுக்கி முக்கினும் என்ற தொடர் "ஆழத்தைப் பொறுத்து அழுத்தம் அதிகமாகின்றது" என்பதை நன்கு சுட்டுகின்றனவல்லவோ?

**கலிலியோவும் சிவஞான முனிவரும்:—**

கோவிலில் தொங்கிய விளக்கிலே காலம் ஏறி அமர்ந்து ஊசலாடுவதைக் கலிலியோ கண்டார். ஆடுகின்ற விளக்கின் ஒவ்வோர் அசைவும் (Oscillation) ஒரே அளவான காலத்தை எடுத்துக்கொள்வதை உணர்ந்தார். வீடு திரும்பிய அவர் பல சோதனைகள் செய்து நீளம் மிகுந்த பொருள்கள் மெல்ல அசைந்தாடுவதையும், நீளம் குறைவாக உள்ள பொருள்கள் விரைந்து அசைந்தாடுவதையும் கண்டுபிடித்தார். இந்த அடிப்படையில் எழுந்தவைதாம் இன்று கடிகாரமுள்ளின் வேகத்தைக்கட்டுப்படுத்தியபடி அசைந்தாடிக்கொண்டிருக்கும் ஊசலிகள் (pendulums). கடிகாரத்தின் முள் விரைந்து நகரவேண்டுமானல் ஊசலியினைத் திருகி மேலே ஏற்றி அதன் நீளத்தைக் குறைக்கின்றேம்; கடிகாரம் மெல்லச் செல்ல வேண்டுமென விரும்பினல், திருகாணியைத் தளர்த்தி இறக்கி ஊசலியின் நீளத்தை அதிகப்படுத்துகிறேம். நீளத்திற்கும் காலத்திற்கும் உள்ள இந்தத் தொடர்பைத் தமிழ்நாட்டில் வாழ்ந்த ஒரு தமிழ்ப் புலவரும் அறிந்திருந்தார் என்பதை இன்று உலகம் அறியுமா ?

**பெரிய ஊசலும் சிறிய ஊசலும்.**

தமிழ்நாட்டில் ஊஞ்சல் ஆடுவது மகளிரின் சிறந்த விளையாட்டு. இதனல் பெண்பால் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் "ஊசல்பருவம்" என்று ஒரு பகுதி இடம்பெற்றது. இதோ ஒரு காட்சி: நீண்டு தொங்கும் ஊசலிலே தென்குளத்தூரில் எழுந்தருளிய அமுதாம்பிகை அமர்ந்திருக்கிருள். அமுதாம்பிகை மலைமகளின் மாற்றுருவம். அலைமகள் ஒருபுறமும் கலைமகள் ஒருபுறமுமாக நின்றுகொண்டு மலைமகள் இருக்கும் அவ்வூஞ்சலை அசைத்து ஆட்டுகின்றனர். ஆனல் அதைவிட விரைவில் அசைந்தாடுகின்றது மற்றோர் ஊஞ்சல். அந்த ஊஞ்சல் நீளத்தில் குறைந்தது! அதுவே அமுதாம்பிகையின் காதிலே தொங்கும் குழை! அந்தச் சிறிய குழைபோல ஊஞ்சலும் விரைந்து ஆடவேண்டும் என்று விரும்பிய அலைமகளும் கலைமகளும் ஊஞ்சலை 'வலித்து வலித்து' ஆட்டிப்பார்த்தனர்; ஆனல் ஊஞ்சலின் வேகம் அதிகரித்ததாகத் தெரியவில்லை! அமுதாம்பிகை அவர்களின் அறியாமை நோக்கிச் சிரித்தாள். அவர்கள் இருவரும் நாணத்தால் முகம்கவிழ்ந்தனர்! அமுதாம்பிகை ஞாலமுழுவதும் ஒருங்கீன்ற நங்கை. இயற்கைச் சட்டங்களெல்லாம் அவளுக்குத்தானே தெரியும் ? அலைமகளென்ன, கலைமகளென்ன? அவர்கள் கணவராகிய திருமாலும் பிரமனுமே வந்து ஆட்டினலும் ஊஞ்சலின் நீளம் குறைந்தாலொழிய அதன் வேகத்தில் விரைவு காணமுடியாதே! கலிலியோ கோவிலில் ஆடிய விளக்கில் கண்டுகூறிய அதே இயற்கைச் சட்டத்தை வீட்டில் ஆடிய ஊஞ்சலிலும். மகளிர் காதில் தொங்கிய குழையிலும் கண்டு இவ்வாறு கூறியவர் சிவஞான முனிவராவார். அவரைக் கலிலியோ வாழ்ந்த காலத்திற்கு மிகவும் பிற்பட்ட காலத்தினர் என்று சொல்லிவிட முடியாது! அறிவியல் கருத்துக்களைத் தாங்கி மிளிரும் அவர் பாடல் வருமாறு:—

"திங்களொளி காட்டுமுக மீதுலவு நாட்டச்
செழுங்கய லுதைந்தூக்கலாற்
செம்பொனி ழைத்தமக ரக்குழைக ளுஞ்செவிச்
செங்கனக வூசலாடப்
பங்கய விருக்கைமட மாதரது நோக்கியிரு
மாலுயிரு வேமாட்டவும்
ப்ாயுங் கயற்குல மசைக்குமவ் வூசலிற்
பாய்ந்திலதிவ் வூசலென நீள்

அங்கையின் வலித்துநனி யாட்டுதொறு
யரும்புநகை நிலவெழிலினுக் [நில்லா
காங்கவர் முகத்திங்கள் சாயப் புராணமறை
யாகம மளந்தறிவரும்
பூங்கவன் மருங்குகுடி கொண்டவமு தாம்பிகை
பொன்னூச லாடியருளே
பூர்ண மதிக்கருள் புரிந்தகம லாகரீ
பொன்னூச லாடியருளே".

**கலிலியோவிற்குமுன் கபிலர்.**

ஒளியைக் கோட்டம் (refraction) அடையச் செய்வதனுல், தொலேவில் உள்ள பொருளின் உருவத்தை அண்மையில் வந்து தோன்றும் படி செய்யலாம் என்று கண்டவர் கலிலியோ எனச் சொல்கிருேம். வீட்டின் மேல்மாடத்தில் இருந்த கலிலியோ ஒரு நாள் தமது மூக்குக் கண்ணுடியைக் கழற்றித் துடைத்து விட்டுத் தூசி போய்விட்டதா என்று அறிவதற்காக, ஒளிவரும் வழியில் உயாத்திப் பிடித்துப் பார்த்தார். அஃது இரண்டாக மடிக்கும் அமைப்புடன் கூடிய கண்ணுடி ஆதலால், அவர் மடித்து வைத்திருந்த நிலேயில் அதன் ஒரு வில்லே மற்ருெரு வில்லே மீது பொருந்தி இருந்தது. என்ன வியப்பு: தொலேயில் உள்ள ஒரு கோபுரத்தின் உருவம் சிறியதாக அவர் கண்ணுடியில் வந்து தெரிந்தது; இரண்டு கண்ணுடி வில்லேகளுக்குத் (lenses) தொலேவிலுள்ள பொருள்களே அருகில் கொண்டுவரும் ஆற்றல் இருப்பதை அறிந்து கொண்டார்; உடனே ஈயக் குழாய் ஒன்றின் இருகோடியிலும் இரு கண்ணுடி வில்லேகளேப் பொருத்தித் தமது தொலேநோக்கியை (telescope) உருவாக்கி விண்ணியலில் பெரும் புரட்சியைச் செய்துவிட்டார்; ஆனுல், கலிலியோ கண்ட இதே காட்சியை வீட்டு மேல்மாடியும், மூக்குக் கண்ணுடியும் இலலாமல், கி. பி. இரண்டாம் நூற்ருண்டளவிலேயே ஒரு தமிழன் கண்டு கூறியுள்ளான் என்ருல் அதனே ஒப்புக் கொள்ள இன்று உலகம் முன்வருமா?

வள்ளுவரின் சிறிய குறட்பாக்கள் பெரிய பொருள்களேத் தம்மகத்தே கொண்டு காட்டுகின்றன. இதற்கு உவமை தேடிச் சென்ருன் ஒரு தமிழன்; சென்ற வழியிலே சிறியதொரு புல்; அதன் தலேயில் தினேயினும் சிறியதான நீர்த்துளி! நெடுந்தொலேவிலே ஒரு பனேமரம் வானுற ஓங்கி வளம்பெற வளர்ந்து நிற்கின்றது! ஆனுல், என்ன வியப்பு! பெரிய பனேமரத்தின் உருவம் எவ்வளவு அருமையாக அந்தச் சிறிய நீர்த்துளியிலே தெரிகின்றது! அந்த அரிய காட்சியையே வள்ளுவரின் குறளேப் பெருமைப்படுத்தும் உவமையாக அமைத்தான் அத்தமிழன்!

"தினேயளவுபோதாச் சிறு புல்நீர் நீண்ட
பனேயளவு காட்டும் படித்தால்—மனேயளகு
வள்ளேக் குறங்கும் வள நாட வள்ளுவனுர்,
வெள்ளேக் குறட்பா விரி"(திருவள்ளுவமாலே)

இது கபிலர் பாடல். இங்கு ஒரு கேள்வி எழலாம்! கலிலியோ கண்ட கண்ணுடிக்காட்சி தொலேநோககி எழுவதற்குத் துணே செய்தது. ஆனுல் கபிலர் கண்ட இந்தப் "புல்நுனி நீர்க காட்சி"யால் என்ன எழுந்தது என்று எவரும் கேட்க முன்வரலாம்! பொதுவாக இயற்கைப் பொருளின் தன்மையை உணர்த்துவதுதான் அறிவியல! வேண்டிய கருவிகளே அமைத்துக் கொள்ளுதல் பொறியியலே (engineering) ஆகும். அறிவியல் அறிவின் ஆழத்தைப் பொறுத்து வளரும்! தொலேநோக்கி வழியே பாய்ந்த மேல்நாட்டார அறிவு, விண்ணகம் எல்லேயற்று விரிந்துகொண்டு ஓடுகிறது என்ற உண்மையை இருபதாம் நூற்ருண்டில் தான் உணரத் தொடங்கியிருக்கின்றது! ஆனுல், இதே "விரியும் விண்ணகக் கருத்தினே த (expanding universe theory) தமிழகம்,

"அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந்தன்மை வளப்பெருங காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்ருெரு கோடியின மேறபட விரிந்தன"
(திருவாசகம்)

எனற வரிகளால் ஆயிரத்து எழுநூறு ஆண்டுகட்கு முன்னரே அறிந்து உணர்த்தியிருக்கிறது. எனவே,

"மாங்காய்ப் பாலுண்டு
மலேமேல் இருப்பவர்க்குத்
தேங்காய்ப்பா லேதுக்கடி?"

என்று கேட்ட சித்தரின் வழிநின்று "தாமே

அறிந்துவரும் தமிழ்நாட்டில் வாழ்பவர்க்குத் தொலைநோக்கி ஏதுக்கடி என்றுதான் நாம் விடை சொல்லமுடியும்!

### கண்ணுக்கு வழி! காதுக்குத் திரை!

ஒளி, ஒலி என்ற சொற்களுக்கு இடையில் ஒற்றுமை இருப்பதுபோலவே, அவற்றின் இயல்பிலும் பல ஒற்றுமைகள் இருக்கின்றன சிறப்பாக, இரண்டும் அலை அலையாக அசைந்து பரவுகின்றன. இருப்பினும், ஒளிக்கு வழிவிடும் சில பொருள்கள் ஒலியை ஏனோ தடுத்து நிறுத்திவிடுகின்றன! இவ்வுண்மை இன்றுகூட நம்மில் பலருக்குத் தெரிவதில்லை! கண்ணாடிக் கதவு வழியாக அறையினுள் இருப்பவரைப் பார்த்ததும், பெயர் சொல்லி அவரை அழைக்கின்றோம்! ஆனால் நம் பேச்சு அவர் காதுக்கு எட்டுவதில்லை என்பதை நாம் பிறகுதான் அறிந்துகொள்கின்றோம்! ஆனால் ஒளி ஒலி பற்றிய இவ்வுண்மையை நன்கு உணர்ந்த சாத்தனார், (கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்) மணிமேகலையையும், உதயகுமரனையும் பிரித்துவைக்க, அதுவரை எவரும் கையாளாத ஒரு புதுமையைக் கையாண்டு பார்க்கின்றனர்! இருவருக்கும் இடையில் அவர் எழுப்பிய பளிங்குச்சுவர் ஒளிக்கு வழிவிடும்; ஆனால் ஒலியைத் தடுத்து நிறுத்திவிடும்! உதயகுமரன் மணிமேகலையைப் பார்த்தான்; மணிமேகலையும் உதயகுமரனைப் பார்த்தாள்; ஆனால உதயகுமரன் பேசிய ஆர்வமொழிகள் மணிமேகலையின் செவியினைச் சேரவில்லை. மணிமேகலை பேசியிருந்தாலும், உதயகுமரன் கேட்டிருக்கமாட்டான்!

கண்ணுக்கு வழிவைத்துக் காதுக்குத் திரையிடும் இவ்வழகிய மண்டபத்தைச் சாத்தனார் "விளிப்பு அறைபோகாது மெய்புறத்திடுஉம் பளிக்கறை மண்டபம்" என்று சொல்லுகின்றார். சாத்தனார் ஏன் இந்தப் பளிங்குச் சோதனையில் இறங்கினார்? இஃது இன்றும் புலவர்கட்குப் புரியாததொரு புதிராக இருக்கின்றது! இதற்கு விடை இப்படித்தான் கூறமுடியும். சாத்தனார் வள்ளுவர் வழி நிற்பவர்; வள்ளுவர் கூறும் பொருளேயன்றி, அவர் மொழியையும பொன்னேபோல் எடுத்துப் போற்றுபவர்; வள்ளுவர் ஓர் இடத்தில் ஒளியையும் ஒலியையும் பற்றியதொரு கொள்கையை மிகவும் துணிந்து கூறியிருக்கின்றார்.

"கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் [வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில"

என்பதே அது! இவ்வுண்மையையே சாத்தனார் சோதனை வழியாக, நிறுவ முற்பட்டார்! கண்ணும் கண்ணும் உறவாடவிட்டார்! வாய்ச்சொல் பயனில்லாது போகும்படி பளிங்குச் சுவரை எழுபபி வழியடைத்தார். ஆம்! மணிமேகலை உதயகுமரன் காதல் தடைபட்டுவிடவில்லை; வாய்ச்சொற்கள் பயனற்றுப்போன நிலையிலும் அது வளரவே செய்தது; வள்ளுவர் கொள்கை தக்க சோதனைமூலம், அறிவியல் அடிப்படையில் நிறுவப்பட்டுவிட்டது!

### சாத்தனார் விளைவு?

பளிங்குப் பொருளில் ஒளி ஊடுருவும் தன்மையைச் சாத்தனார் கண்டார்; அப்படி ஊடுருவும்பொழுது, ஒளியின் நிறம் மாறுபடுவதை அறிஞர் சி. வி. இராமன் கணடார்! இதனையே அறிவியல் மொழியில் கூறவேண்டுமானால், பளிங்குப் பொருளின் வழியே ஒளி புகுந்து வெளிவருமபொழுது ஒளியின் அலை நீளத்தில் (wave length) மாற்றம ஏற்படுகின்றது என்று இராமன் கண்டு கூறினார் இதனையே நாம் இராமன் விளைவு (Raman's effect) என்று சொல்கின்றோம். உண்மையில் இராமன் விளைவுக்கு அடிப்படையாக இருந்தது சாத்தனார் விளைவு (Sathanar's effect) என்பது தெரிகின்றதன்றோ?

### குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி -

ஓடிக்கொண்டிருக்கும் பொருளுக்கு வழியிலுள்ள தடையை மோதித்தள்ளும் ஆற்றல உண்டென்பதை நாம் அறிவோம். ஆனால் நிலையில் திரியாது நின்றுகொண்டிருக்கும் பொருளுக்கு ஆற்றல் உண்டா? உயரத்தில் தேக்கி வைத்துள்ள நீர் புவிக்கவர்ச்சியின்

ஆற்றலால் வீழ்ந்து செயலாற்றுவதை யாவரும் அறிவார். ஒரு பாறைத்துண்டு தரையில் கிடந்தால் யாரும் அதுபற்றிக் கவலைப்படுவதில்லை. ஆனால் அதே கல் சற்று உயரத்தில் ஒரு சுவரின்மீது இருந்தால் நாம் எச்சரிக்கையாக இருக்கிறோம் ஆனால் மிகவும் உயர்ந்த மலைமுடிகளில் இருக்கும் பாறைக்கற்களைப் பற்றி நாம் என்ன நினைப்பது? அவை தம் எடைக்கும், புவிக் கவர்ச்சிக்கும் இருக்கும் உயரத்திற்கும் ஏற்ப ஆற்றலைப் பெற்றுள்ளன. (l=mgh) அக்கற்கள் நிலையில் திரியாது இருக்கும் வரையில் எவருக்கும் இன்னல் இல்லை. ஆனால் சிறிது நிலைபெயர்ந்தாலோ நிகழ்ச்சி கணநேரம் மட்டுமே நீடித்தாலும் விளைவு சொல்லவும் முடியாத அளவிற்கு மிகுதியாகிவிடும். உயரத்திற்கும் பொருள்களின் தேங்கியிருக்கும் ஆற்றலை நிலையாற்றல் (potential energy) என்று அறிவியலார் அழைப்பர். வள்ளுவர் குன்றின் மீது நிற்கும் கல்லுருண்டைகளைக் கண்டு கண்டு பழகியவர். எனவே ஆற்றல் அற்ற சாதாரண மக்கள் போல் இல்லாமல் சான்றோர்கள் குணமென்னும் குன்றின்மீது நிற்பதை வள்ளுவர் அறிவார். நிலையில் திரியாது அடங்கிய அவர்கள் சிறிது நிலை பிறழ்ந்து வெகுண்டால் விளைவை யாரும் தடுத்துக் காக்க முடியாது என்பதை உணர்த்துகிறார்.

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேனும் காத்தல் அரிது.

என்ற. குறளில் அறிவியல் மணங்கமழ்கின்றது. மேலும் அடுத்தது காட்டும் பளிங்கு, 'வெள்ளத்தனைய மலர் நீட்டம், நிலத்தின் இயல்பால் நீர்திரிந்தற்று' போன்ற வள்ளுவரின் தொடர்களுக்கு விளக்கம் வேண்டுவதில்லை.

### புலவர்க்குப் புலி:—

பிள்ளைத் தமிழில் வரும் 'அம்புலிப்பருவம்' பற்றிப் பேசுகின்ற பேராசிரியர்கள் "அம்புலி புலவர்க்குப்புலி" என்று கூறுவர்! அம்மாவாசையன்று ஞாயிறும் திங்களும் ஒரே திசையில் இருப்பதால் ஒரே காலத்தில் எழுகின்றன என்பது வெளிப்படை. ஆனால் திங்கள் கிழக்காகத் தொடர்ந்து நகர்ந்து கொண்டிருப்பதால் ஞாயிற்றோடு நோக்க ஒவ்வொரு நாளும் 51 மணித்துளிகள் (minutes) தாமதித்தே எழும்; அதேபோல் தாமதித்தே மறையும். எனவே பிறைத் திங்களைப் பற்றிக் கூறுகின்றவர் அதோடு தொடர்புகொண்ட காலத்தையும் வானில் அந்த நேரத்தில் அது இருக்கும் இடத்தையும் நினைவில் கொள்ளத் தவறி விடுதல் கூடாது.

இன்சொல் கூறல், கொடுத்தல், வேறுபடுத்தல், ஒறுத்தல் என்ற நான்கு வழிகளிலும் இத்திங்களுடன் 'சடுகுடு' விளையாட முயன்ற நம் இடைக்காலப் புலவர்கள் சிற்சில வேலையில் இது தங்களையே விழுங்கி விடுவதைக் கண்டு "அம்புலி புலவர்க்குப் புலி" என்று கூறியிருக்கின்றனர். இத்தகைய 'புலி' மூன்றினை ஒரே அடியில் முடிக்க முயன்ற ஒட்டக்கூத்தர் ஓய்ந்து போனதையும் பின் அதைப் புகழேந்திப் புலவர் முடித்துக் கொடுத்துப் புகழ் கொண்டதும் யாவரும் அறிந்ததொரு கதையாகும்!

நாம் இன்று அறிவியலை மணந்து வாழும் காலத்திலேயே வாழ்கின்றோம்! ஆனால் பழங்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் இந்த அம்புலிப் புலியிடத்தில் எத்தகைய நுட்பமாக நடந்து வெற்றி கண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் இங்கு நாம் உணரவேண்டும்.

கோவலன் கண்ணகியோடு பூம்புகாரினின்றும் இரவிலே நீங்குகின்றான். வைகறை நேரம்; ஞாயிறு எழுவதற்கு இன்னும் நாழிகைகள் கழிதல் வேண்டும். ஆனால் மீன்பூத்த வானத்திலிருந்து வெண்மதி நீங்கிச்சென்று மறைந்துவிட்டது இரவின் பிற்பகுதியில் இருள்படர்ந்து நின்ற அக்காலம் வளர்பிறைக் காலம் என்பதை இளங்கோவடிகளார்,

"வான்கண் விழியா வைகறை யாமத்து
மீன்திகழ் விசும்பின் வெண்மதி நீங்கக்
காரிருள் நின்ற கடைநாள் கங்குல்"

என்று எத்துணை நுட்பமாகச் சுட்டிச் சொல்கின்றார்!

இவ்வாறே தேய்பிறை நாளைச் சொல்ல வரும் சிந்தாமணியாசிரியர் இரவின் முற்பகுதியிலே இருள்மண்டிக்கிடந்தாலும் பின்னர் ஏற்றிவைத்த கைவிளக்குபோலக் கீழ்த்திசையில் திங்கள் எழுந்து இருளை அகற்றச் சிறிது நாழிகைக்கெல்லாம் கீழ் வானத்திலே ஞாயிறு கிளர்ந்தெழுந்தது என்ற உண்மையை.

"ஏறனுற் கிருளை நீக்கக்
கைவிளக் கேந்தியாங்கு
வீறுயர் மதியம் தோன்ற
விரைவொடு போயபின்றை
மாறிலாப் பருதிவட்டம்
வருதிரை முளைத்த வாங்கண்"

என்று கூறுகிறார்.

இவ்வாறே முழுமதி நாட்களில் ஞாயிறும் திங்களும் எதிர் எதிராக (diametrically opposite) இருக்கும் என்ற வானநூல் உண்மையை மணிமேகலை ஆசிரியர் பூம்புகாரில் அத்தகையதொரு முழுமதி நாள் மாலைக் காலத்தை வருணிக்குமிடத்து,

"குணதிசை மருங்கில் நாண்முதிர் மதியமும்
குடதிசை மருங்கில் சென்றுவீழ் கதிரும
வெள்ளி வெண்தோட்டோடு
[பொன்தோடாகப்"

புகாரென்னும் பூங்கொடி நல்லாளுக்குப் பொருந்தியிருந்த காட்சியை மிகுந்த காட்சித் திறனுடன் கூறிச் செல்கின்றார்!

**பிறையின் உருவம்:—**

பிறைத் திங்களின் வெளிவிளிம்பு திங்களது உருண்டைப் பகுதியாலானது ஆனால் பிறையின் உள் விளிம்போ திங்களில படிந்துள்ள ஒளிப் பகுதியும் இருள் பகுதியும் ஒன்றாகச் சேருவதாலமைந்தது. பிறையின் வெளி விளிம்பு ஒழுங்காக இருக்கும். ஆனால் உள் விளிம்பு திங்களில் உள்ள மேடு பள்ளங்களுக் கேற்ப, ஒளியும் இருளும் மாறி மாறி நீண்டும் குறைந்தும் படிந்திருப்பதால். அவ்வளவு ஒழுங்காக இராது. இதற்கு நீர் வற்றிக் கொண்டிருக்கின்ற அல்லது நிறைந்து கொண்டிருக்கின்ற வளைந்த கரையுடன் கூடிய ஏரியை உவமையாகக் கூறலாம் அத்தகைய ஓர் ஏரியை உயரமானதோர் இடத்தில் நின்று பார்த்தால் ஏரியின் வளைந்த கரை பிறையின் வெளி விளிம்புபோன்றும், மேடு பள்ளங்களுக்கேற்பத் தண்ணீர் நீண்டும் சில இடங்களில் குறுகியும் இருப்பதால் அமைகின்ற 'நீர் விளிம்பு பிறையின் உள் விளிம்பு போன்றும் இருப்பது தெரியும். இந்த நுட்பத்தை உணர்ந்த நம் புலவர்கள்

"எண்ணாள் திங்கள் அனைய கொடுங்கரைத்
தெண்ணீர்ச் சிறுகுளம்" (புறம்)

என்றும்

"ஏரி வளாவிக் கிடந்தது போலும்
இளம் பிறையே"
(திருநாவுக்கரசர் தேவாரம்)

என்றும் இயம்பி மகிழ்ந்தனர். இருப்பினும் மேலைநாடுகளின் தொடர்பு தமிழ்நாட்டில் ஏற்பட்ட பின்புதான் அறிவியல் இங்கே தலைகாட்டத் தொடங்கிற்று" எனப் பேசுவோரும் இருக்கின்றனர் இத்தகையோர் பற்றி நாம் என்ன சொல்வதற்கு உள்ளது? 'தான் நிலை திரியாத் தண்டமிழ்க் காவிரி'யில் மூழ்குவோருள் சிலர் 'கங்கா ஸ்நானம் செய்கின்றேன்' என்று நிலைதிரிந்து பேசுவதையும் காண்கின்றோம். கங்கையினின்றும் காவிரி வந்தது என்பது இவர் தம் நம்பிக்கை! இமயமும் கங்கையும் உருப்பெறுவதற்குப் பலகோடி ஆண்டுகட்கு முன்பே குடகும காவிரியும தோன்றித் திகழ்ந்திருந்தன என்ற மண்ணியல் (geological) உண்மையை இவர்கட்கு அறிவுறுத்துவோம! அவ்வாறே கபிலரையும் ஔவையாரையும் படித்திருந்தும் தொலை நோக்குக் காட்சியை முதலில் கண்டவர் கலிலியோ என்றும நீர்ப்பொருளைச் சுருக்க முடியாது எனக் கூறியவர் பாஸ்கல் என்றும சாதிப்போர் நிலைக்கு இரங்கித தமிழ் இலக்கியத்தை அறிவியல் கண்கொண்டு காணச் செய்வோம்! கண்ணைமூடிக்கொண்டு உரையாசிரியரைப் பின்பற்றும் வழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைப்போம். 'வளிதொழில ஆண்ட' என்ற தொடருக்கு 'வளிச்செலவனை அழைத்து ஏவலகொண்டவன்' என்னுமல் காற்றின் இயல்பினை அறிந்து தொழிற்படச் செய்தவன்' என்போம். சிலம்பாறு' (மலையாறு) 'நூபுரகங்கை'யாகவும், இரு ஓடையால் நீரூட்டப்பெறும் 'ஈரோடு' 'அர்த்த கபால'மாகவும், ஆகாமல் பார்த்துக் கொள்வோம்!

# வரலாற்றுசிரியர்

திரு. ந. மு. கோவிந்தராய நாட்டார், B.A., L.T.,

தெய்வ மணங்கமழும் நமதருமைத் தீந்தமிழில் நூறாயிரம் பாடல்கள் இயற்றியவர் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் எனத் தமிழ் மூதறிஞர் தெரிந்து கூறியுள்ளனர். இத்திறத்த பெரும் பெரும் புலமை எய்திய இவர்கள் சேக்கிழார் பெருமானைப் "பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ" என அவரைக் குறித்துத்தாம் இயற்றிய பிள்ளைத் தமிழில் பத்தி அழகு ஒழுக எடுத்தியம்பியுள்ளார். இப்பாவலுடன் நில்லாமல்

நாடிய விரிநூல் சொற்றிடு திறனால்
நன்னூலாசிரியன்
நகுபாசுர முதலுரை செய்தலினால்
நவிலுரையாசிரியன்
நீடியபர சமயக்குழி வீழ்ந்தவர் நீப்பப்
போதனைசெய்
நிலையாற் போதகாசிரியனிவை நிகழ்தொறு
நிகழ்தொறும்
ஆடியஞானத்திறனுறலான்
ஞானசிரியனு நீயென்று
ஆன்றோர் பலரும் புகழப்படுபவ
அகிலமெலாஞ்சென்று
கூடிய புகழ்சால் குன்றத்தூரன்
கொட்டுகசப்பாணி
கொற்றச் சேவையர் காவல நாவல
கொட்டுகசப்பாணி

என்ற பாடலில் அவரை நூலாசிரியன், உரையாசிரியன், போதகாசிரியன், ஞானசிரியன் என நால்வகை ஆசிரியனாகக் காரணங் காட்டிப் பாராட்டியுள்ளனர்.

ஈண்டு யான் அவரை ஐந்தாவதாசிரியனாகவும் விளக்க விரும்புகின்றேன். தலைப்பிற் காட்டிய பெயரே அது. பாரித்தெழுதின் அஃதொரு பெருநூலாக விரியுமாகலின் ஒரு கட்டுரையளவில் மிகச்சுருக்கியெழுதுகின்றேன்.

சேக்கிழார்பெருமான் திருத்தொண்டர் புராணத்தை என்னணம் எழுதினார் என்பதனுக்கு விடையே இக்கட்டுரை. மேற்காட்டிய பாடலில் 'விரிநூல்சொற்றிடுதிறனால்' எனவருதலான் திருத்தொண்டர் புராணத்திற்கு முதனூலொன்றுண்டு என்பது பெறப்படும். இதுதான் சுந்தரமூர்த்திநாயனார் திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டர் தொகையாகும் நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதி இதன் சிறுவிரியாகும். இவ்விரண்டினையும் அடிப்படையாககொண்டுசேக்கிழார்பெருமான் தமது புராணத்தை விரித்தெழுதினார் என்பது சாலாது ஏனெனில் இவை பெரியதொரு ஆலிற்குச்சிறியதொரு வித்துப்போன்றனவே. தமதரும் பெரும்காப்பியத்தை உருவாக்கச் சேக்கிழார் பெருமானுக்கு உறுதுணையாயிருந்தவை, மூவர் அருளிய தேவாரம், திருமூலா, சேரமான்பெருமாள், ஐயடிகள்காடவர்கோன், காரைக்காலம்மையார் இவர்கள் இயற்றிய செய்யுட்பாசுரங்கள் ஆகியவற்றுள் இலைமறைகாயாகவும், நேர்முகமாகவும் பரந்துகிடந்த அகச்சான்றுகளே. மூவர் எழுந்தருளிய பதிகள்தோறும் சேக்கிழார்பெருமான் தாமே நேரிற்சென்று அவ்வத்தலங்களை வணங்கி வழிபாடு செய்தும், ஆங்காங்கு நடைபெறும் திருவிழா நடைமுறைகளையும் கல்வெட்டுச் சான்றுகளையும் அறிந்தும் வந்த புறச்சான்றுகளும் அவருக்குப் பெருந்துணையாயின. இவ்வெல்லாவற்றினும் புகுந்தாராயாமல் யான் மூவர் தேவாரங்களிற் காணப்படும் சிற்சில அகச் சான்றுகளையும் புறச் சான்றுகளையும் சுட்டிக்காட்டி இக்கட்டுரையினை முடிக்க முயல்கிறேன்

## திருஞானசம்பந்தர்

இறைவன் இறைவியுடன் எழுந்தருளி ஞானசம்பந்தமாகப்போகும் குழந்தையினுக்குப் பொன்வள்ளத்தில் பாலருத்திய செய்தியினை அக்குழந்தையே

"போதையார் பொற்கிண்ணத் தடிசில்
[பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத்
[தானெனையாண்டவன்"

எனத் தான் அருளிய திருக்கழுமலப்பதிகத்தில் அறிவித்துள்ளது. ஞானபோனகர் காலத்திற்கு ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகள் பின்னர் வாழ்ந்த ஆதிசங்கரர் அம்மையைக் குறித்துத் தாம் இயற்றிய துதி நூலாகிய 'சௌந்தர்யலகரி'யில் தவஸ்தன்யமன்யே' என்று தொடங்கும் எழுபத்தைந்தாம் சுலோகத்தில் அம்மையார் 'திரவிடசிசுவுக்கு'த் தம் பால் உண்பித்தமையையும் அதனால் அச்சிசு அக்காலத்துப் பெருங் கவிகளெல்லாம் மெச்சும் மகாகவி ஆனமையையும் குறிப்பிட்டுள்ளார்.

சிவஞானக்கன்று தான் பாலனும் தன்மையினை மேலும்

கோலமாய நீள்மதிற் கூடல் ஆலவாயிலாய்
பாலனும் தொண்டுசெய்து பண்டுமின்றும்
[உன்னையே
நீலமாய கண்டனே நின்னையன்றி நித்தலும்
சீலமாய சிந்தையில் தேர்வதில்லை தேவரே

மானினேர்விழி மாதராய்வழு திக்குமா
[பெருந்தேவிகேள்
பால்நல்வாயொரு பாலன்ஈங் கிவனஎன்றுநீ
[பரிவெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய இடங்களிற்பல
[அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன் திருவாலவாய்
[அரன்நிற்கவே

எனுமிரு பாசுரங்களிலும் குறிப்பிட்டுளளது.

ஞானக குழந்தை தன் கையினல் தாளம் ஒற்றிப் பாடுதலையுணர்ந்த ஆணடவன் பொற்ருளம் அருளுகின்ருன். இதனை சுந்தரமூர்த்தி நாயனுர்

'நாளுமின்னிசையால் தமிழ்பரப்பும் ஞான
[சம்பந்தனுக்கு உலகவர்முன்
தாள மீந்துஅவன் பாடலுக்கிரங்கும்
[தனமையாளனை

எனக் குறிப்பிடுகின்ருர். திருமறைககாட்டில் மறைக்கதவம் திறக்கவும் அடைக்கவும் தாமும் ஞானசம்பந்தரும் பாடிய திறனை நாவுக்கரசர் திருவாய்மூர்த்திருக்குறுந்தொகையில்

"திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்
உறைப்புப் பாடி யடைப்பித் தாருந்நின்ருர்
மறைக்க வல்லரோ தமமைத் திருவாய்மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடை யாரிவர் பித்தரே"

எனக் குறிக்கின்ருர்.

தம தந்தையாராகிய சிவபாத விருதயர் வேள்வி செய்வான்வேண்டித் தம் ஞானச் செம்மலிடம் ஆயிரம் பொன் கேட்டனர். ஞானசசேய் மறுத்தது. தந்தையாரின் வற்புறுத்தலின்பேரில் குழந்தை இறைவனை இறைஞ்சி ஆயிரம் பொன் பெற்றது. இதனை நாவுககரசர்

மாயிரு ஞாலமெல்லாம் மலரடி
[வணங்கும்போலும்
பாயிருங் கங்கையாளைப் படர்சடை
[வைப்பர்போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த
[கழுமலவூரர்க்கம்பொன்
ஆயிரங் கொடுப்பர்போலும் ஆவடு
[துறையனுரே

என்ற திருவாவடுதுறை திருநேரிசையில குறிப்பிடுகின்ருர்.

பாண்டிமா தேவியாராகிய மங்கையர்க்கரசியார் அழைப்பின்பேரில் திருமறைக்காட்டில் நாவுக்கரசருடன் தங்கியிருந்த ஞானச்செம்மல் அடியாாபுடைசூழ மதுரை நோக்கிப்புறப்பட்டார். நாவுக்கரசர் நாளுங் கோளும் நல்லனவாயிலலையே எனக்கூறினர். ஞானபோனகர் 'வேயுறுதோளிபங்கன்' என்னும் கோளறு பதிகம்பாடிப் புறப்பட்டார். எனினும் நரவுக்கரசர் ஐயுற்றவாறே மதுரையில் ஞானப்பிள்ளையார் தங்கியிருந்த மடத்திற்குத் தீ வைக்கப்பெற்றது. உடனே ஞானப்பிள்ளையார் 'செய்யனே' என்று தொடங்கும திருவாலவாய்ப்பதிகத்தைப்பாடி அத்தீச்செயலுக்குக் காரணமுயிருந்த் பாண்டி மன்னவன்மேல அத்தீயினை ஏவிவிட்டார். மடத்தின் தீ அணைந்தது. பாண்டியனுககுக கொடிய வெப்புநோயுண்டாயிற்று. இப்பதிகத்தின் பதினெரு பாசுரங்களிலும் தீயினை ஏவி

விட்ட செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் முதற்பாசுரம் வருமாறு !

செய்யனே திரு ஆலவாய் மேவிய
ஐயனே அஞ்சலென்றருள் செய்யெனைப்
பொய்யராம் அமணர்கொளு வுஞ்சுடர்
பையவே சென்று பாண்டியற் காகவே.

பையவே என அருளியவதனுல் தீ பாண்டியன் மேல்மாத்திரம் பிடித்தது. வெப்புநோயினை சமணர்களால் தீர்க்கமுடியவில்லை. ஞானப் பிள்ளையார் 'மந்திரமாவது நீறு' என்ற பதிகத்தைப்பாடிப் பாண்டியன் உடல்மேல் திருநீற்றைப்பூசினுர். நோய் நீங்கிற்று. இப்பதிகத்தின் திருக்கடைக்காப்புப் பாசுரம் வருமாறு:

ஆற்றல் அடல் விடையேறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலிநிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித்தென்ன னுடலுற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லார் நல்லவர்தாமே.

பின்னர் ஏற்பட்ட நீர்வாதம, தீ வாதம் இரண்டினும் வெற்றியருளுமாறு இறைவனை வேண்டி ஞானப்பிள்ளையார்

'காட்டுமாவதுரித்து'
'வேதவேள்வியை'

என்ற தொடக்கங்களையுடைய இருபதிகங்களைப்பாடினுர்.

இருவாதங்களிலும் வெற்றிபெற்றமையை 'வாழ்க அந்தணர்' என்று தொடங்கும் பதிகத்தின் பதினென்றும் பாசுரமும், 'களிரிள வளரொளி' என்று தொடங்கும் முழுப்பதிகமும் தெரிவிக்கின்றன. பின்னதன் திருக்கடைக் காப்புப்பாசுரம் வருமாறு:

சிற்றிடை அரிவைதன் வனமுலையிணையொடு செறிதரும்
நற்றிற முறுகமு மலநகர் ஞானசம்பந்தன்
கொற்றவன் எதிரிடை எரியினி லிடஇவை கூறிய
சொற்றெரி ஒருபதும் அறிபவர்துயரிலர் தூயரே

இன்னணமே ஞானச்செல்வர் கொல்லி மழவன் மகள்பிணியைத் தீர்த்தும், ஆண்பனை பெண்பனையாக்கியதும், திருக்கொள்ளம்பூதூரில் பதிகம்பாடிக் காவேரிவெள்ளத்தைக் கடந்து சென்றதும், திருச்செங்குன்றூரில் குளிர்காய்ச்சல் நீக்கியதும், திருமருகலில் பாம்பு தீண்டி இறந்தவனைப்பிழைப்பித்து அவனுக்குத் திருமணம் புணர்ப்பித்ததும், திருமயிலையில் என்பைப்பெண்ணுக்கியதும முதலிய அற்புதச் செயல்களையெல்லாம் அவ்வப் பதிகங்களில் காணலாம்.

—:—:—

## திருநாவுக்கரசர்.

சமண் புகுந்த நாவுக்கரசரை அவர் தமக்கையார் திலகவதியார் வேண்டுகோளின் படி திருவதிகை வீரட்டானத்துறையும் இறைவன் மீட்டமையை அவர் அருளிய 'கூற்றுயினவாறு' என்ற பதிகத்திலும் ஏனைய பல பதிகங்களாலும் அறியலாகும. சமணர் தந்த நஞ்சுகலந்த பாற்சோற்றை உண்டு உயிர்பிழைத்தமையை

துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்திராதே
அஞ்செழுத்தோதில் நாளுமரனடிக்கன்பதாகும்
வஞ்சனைப் பாற்சோறுக்கி வழக்கிலா அமணர்தந்த
நஞ்சமு தாக்குவித்தார் நனிபள்ளி யடிகளாரே.

என்றபாசுரம் அறிவிக்கின்றது. சொல்வேந்தர் கல்லிற்கட்டி கடலில் விடப்பட்டஞான்று அஞ்செழுத்தோதி அக்கல்லே தெப்பமாகக் கரையேறி உய்ந்தமையை அவர் அருளிய 'சொற்றுணை வேதியன்' என்னும் பாசுரமும்

கல்லினோ டெனைப் பூட்டி யமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கவென் வாக்கினுல்
நெலலு நீள்வயல் நீலக்குடியரன்
நல்ல நாமம் நவிற்றியுய்ந் தேனன்றே

என்னும் பாசுரமும் அறிவிக்கின்றன.

சொற்கோவுக்கு இன்னணம் நிகழ்ந்த அற்புதச் செயல்களையெல்லாம் அவருடைய

பற்பல பாசுரங்களில் காணலாகும். மூவரும் அருளிய பதிகங்கள் பலவற்றில் கண்ணப்ப நாயனுர், சிறுத்தொண்டநாயனுர், திருநாளைப் போவார்நாயனுர், சண்டேசுரநாயனுர் முதலியோருடைய அரியசெயல்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.

---

## சுந்தரமூர்த்திநாயனுர்

தமக்கு நிகழவிருந்த வைதிகத்திருமணத்தை இறைவன் ஆவணங்காட்டித் தடுத்தாட் கொண்டதனை சுந்தரர்

"வெண்ணெய்நலலூரில்
அற்புதப்பழ ஆவணங்காட்டியடியனு வென்னை யாளது கொண்ட நற்பதத்தை" என்னும் திருநள்ளாற்றுப் பதிகத்திலும்

"நம்பனே யன்று வெண்ணெய்நலலூரில் நாயினேன்றன்னை யாட்கொண்ட சம்புவே" எனும் திருமுல்லைவாய்ப் பதிகத்திலும், வேறு சில பதிகங்களிலும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறே தமக்குத் தோழனுயிருந்து இறைவன் பரவையாருடனும், சஙகிலியாருடனும் காதல் திருமணம் செய்வித்தமையை

"ஏழிசையாய் இசைப்பயனுய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான் செய்யுந் துரிசுகளுக்குடனுகி
மாழையொண்கண் பரவையைத் தந்தாண டானை மதியிலலா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என்னூரூர் இறைவனையே"

"வங்கமலி கடல்நஞ்சைவானவாகள் தாமுய்ய
நுங்கியமு தவர்ககருளி நொய்யேனைப் பொருட்படுத்து
சங்கிலி யோடெனைப் புணர்த்த தததுவனைச் சழக்கனேன்
எங்குலக்கப் பிரிந்திருககேன் என்னூரூர் இறைவனையே

எனும் பாசுரங்களில் அறிவித்துள்ளார்.

சுந்தரர் இவ்வாறு மணாளனுனபிறகு தமக்கு வேண்டுவன இன்னின்னவெனு, திருநாகைக் காரோணத்திருப்பதிகத்தில் குறிப்பிடுகின்ருர் இப்பதிகத்தின் இறுதிப் பாசுரம் வருமாறு!

பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கும் எனக்கும்
பற்றுயபெருமானே மற்ருரை யுடையேன்
உண்மையத்த வுமக்கடியேன் குறைதீர்க்க வேண்டும்
ஒளிமுத்தம் பூணுரம் ஒண்பட்டும் பூவும்
கண்மயதத கததூரி கமழ் சாந்தும் வேண்டும்
கடல்நாகைக் காரோணமேவியிருந் தீரென்
றண்மயத்தா லணிநாவ லாரூரன் சொன்ன
அருந்தமிழ் களிவை வல்லார் அமருலகாள் பவரே

திருவொற்றியூர் கோயிலில் மகிழ மரத்தடியில சங்கிலியாருக்குச்செய்து கொடுத்த சூளை மீறித்திருவாரூர் நினைவுடன் தம்பிரான் தோழர்திரும்புங்காலை இறைவன் அவருடைய இருகணகளையும் ஒன்றன்பின் ஒன்ருக மங்கச் செய்தார்

இந்நிலையில் சுந்தரர் பாடிய பாடல்களில் நகை, இளிவரல், அழுகை ஆகிய மூவகைச் சுவைகளும் அமைந்திருத்தலைக்காணலாகும் அவற்றில இருபாசுரங்கள் கீழ்வருவன:

மகத்திற் புக்கதோர் சனியெனக் கானுய் மைந்தனே மணியே மணவாளா
அகத்திற் பெண்டுகள் நானென்றுசொன்னுலமையேற் போகுருடா எனத்தரியேன்
முகத்திற் கண்ணிழந்தெங்ஙனம் வாழ்கேன் முக்கணு முறையோ மறையோதீ
உகைக்குந்தண்கடலோதம் வந்துலவு மொற்றியூரெனு மூருறைவானே.

மான்றிகழுஞசங்கிலியைத் தந்துவருபயன்கௗெலலாம
தோன்றவருள் செய்தளித்தாயென்றுரைக்கவுலகமெலாம
ஈன்றவனே வெண்கோயிலிங்கிருந்தா யோவென்ன
ஊன்றுவதோர் கோலருளி யுளேர்ம்போகீரெனருனே.

திருவாரூரில் பரவையுடன் இல்லறம் நடாத்துதற்கு நெல், பொன்முதலியபொருள்க

ளெல்லாம் வேண்டுமே. இவற்றை யெல்லாம் சுந்தரர் இறைவன்மேல் பதிகங்கள் பாடியே பெறுகின்ருர். இவற்றை யருளும் போதும் இறைவன் தன் தோழருடன் நகைச்சுவை மிளிரும் விளையாடல்கள் புரிகின்ருர் திருமுதுகுன்றத்தில் பொன் கொடுத்து அதனை மணிமுத்தாநதியிற் போட்டுத் திருவாரூர் திருக்குளத்தில் எடுத்துக்கொள் என்றியம்புகினரு்ர். குளத்தில் பொன் அகப்படவில்லை. கரையில் நின்ற பரவை 'பொன்னை ஆற்றிற் போட்டுக் குளத்தில் தேடுவார் உளரோ'' என்று சொல்லி நகையாடுகின்ருர். உளம நொந்து ஒரு பதிகம் பாடினுர். பொன் அகப் பட்டது. இறைவன் விருப்பப்படி சேரமான் பெருமாள் நாயனுர் சுந்தரருக்குப் பொன்னும் பிறபொருள்களும் வழங்கினுர். இவற்றைப்பல ஆட்கள் எடுத்துவர சுந்தரர் சேரநாட்டி விருந்து திரும்பிவரும்போது திருமுருகன் பூண்டிக்கருகில் இறைவன் கட்டளையால் திருடர்கள் தோற்றத்தில் பலர் வந்து ஆட்களையடித்துப் பொருள்களை யெலலாம் கொள்ளை கொள்கின்றனர். இக்காலை இறைவனை ஏசி ஒருபதிகம் பாடிச் சுந்தரர் பொருள்களைப் பெறுகின்ருர். இப்பதிகத்தின் பாசுரங்களில் ஒன்று:

வில்லைக்காட்டி வெருட்டிவேடுவர் விரவலாமை சொல்லிக்
கல்லினு லெறிந்திட்டு மோதியுங் கூறை கொள்ளுமிடம்
முல்லைத்தாது மணங்கமழ் முருகனபூண்டி மாநகாவாய
எல்லைக் காப்பதொன்றில்லை யாகில் நீ ரெத்துக்கிங் இருந்தீரெம் பிரானீரே.

குண்டையூர்கிழார் என்பவர் சுந்தரருக்கு வேண்டிய நெல் முதலியவற்றைக் கொடுத்து வந்தார் இஃதுமிறைவன் கட்டளையே நெல் மூட்டைகளைத் தூக்கிவர ஆட்களை கிடைக் காமையால் சுந்தரர் ஆட்கள் கொடுக்குமாறு இறைவனை வேண்டிப்பதிகமொன்று பாடினுர் பாசுரங்களில் ஒன்று வருமாறு

நீளநினைந்தடியே னுமைநித்தலும் கைதொழுவேன்
வாளனகண் மடவா ளவள்வாடி வருந்தாமே
கோளிலி யெம்பெருமான் குண்டையூர்ச்சில நெலலுப்பெற்றேன்
ஆளிலையெம்பெருமான் அவையட்டித்தரப் பணியே.

முதலையுண்ட பாலனை அழைத்தசெய்தியை திருப்புக்கொளியூர் அவிநாசிப் பதிகத்தால அறியலாம். இப்பதிகத்தில் ஒரு பாசுரம் இறைவனுக்குக் கட்டளையிடுவது போன்றுள் ளது. பாசுரம் வருமாறு:

உரைப்பா ருரையுகந் துள்கவல் லார்தங்கள் உச்சியாய்
அரைக்கா டரவா ஆதியு மந்தமு மாயினுய்
புரைக்காடுசோலைப் புக்கொளியூர் அவிநாசியே
கரைக்கான் முதலையைப் பிள்ளைதரச்சொலலு காலனையே

சுந்தரர் வரலாற்றில் இன்னணம் வரும் அற்புத நிகழ்ச்சிகள் இன்னும பலப்பல. விரி வஞ்சி இத்துடன் நிறுத்துகின்றேன்.

கற்பனையாக வரும் வருணனை முதலிய வற்றை நீக்கிப் பார்க்கின் சேக்கிழார் பெருமான் மூவர் தேவாரங்களையும் ஏனைய சான்றுகளையும் துருவியாய்ந்தே திருத் தொண்டர் புராணத்தை இயற்றினுர் என்பது பெறப்படும். ஆகலின் அவர் நாயன்மார்களைப் பற்றி எழுதியவனைத்தும உண்மை வரலாறு களாம். புராணப்பொய்க்கூற்று என்று கருது கின்றவர் தேவாரஙகளையும் திருத்தொண்டர் புராணத்தையும் ஒப்புநோக்கிக் கற்றறியாதவர் என்று கோடல் வேண்டும். எக்காலத்தும் பிறரெவராலும் செய்யமுடியாத செயறகரிய வற்றை செய்தவர் இறைவன் திருவருளை முற்றவும் பெற்ற நற்றவத்தோர்களாகிய மூவரும அவர்களையொத்த பெரியார்களுமே யாவர். தேவாரம் திருவாசகம் போன்ற பத்திச்சுவை ததும்பும் நூல்கள் வேறெம மொழியிலும் இல்லையென எல். டி. பார்நெட் (L. D. Barnett) என்பார் இந்தியாவின் இருதயம் (Heart of India) என்னும் தனது நூலில் எழுதியுள்ளார்.

நாயன்மார்களுடைய பத்தியுறைப்பில் ஈடுபாடுகொண்டு அவர்கள் வாழ்வில் இரண்டறக் கலந்து சேக்கிழார்பெருமான் தமதரும் பெரும் காப்பியத்தை ஆக்கியுள்ளார். இதனாலன்றோ மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இக்கட்டுரையின் தோற்றுவாயில் யான் எடுதது்க் காட்டியுள்ளவாறு சேக்கிழார் பெருமானின் பெருமையினைப் போற்றிப் புகழ்ந்துள்ளார். சேக்கிழார் புராணம் இயற்றியுள்ள உமாபதிசிவமும் சேக்கிழார்பெருமானைப்பற்றி, 'தேவுடனே கூடிய சொற்செழுந்தமிழோர் தெரிநதுரைத்த' எனக்கூறியுள்ளார். யான் 'கண்ணுதல் நின் கால்விளையாட்டு' எனப் பெயரிய எனது நூலில 'தமிழன்னை தன்சரிதம கூறுதல்' என்ற அகவற்பாவில், சேக்கிழார் பெருமானைப்பற்றி

உறுபற் றொழித்திறை பற்றி யுய்ந்த
அறுபத் துமூவர் சரிதமாய்ந் துரைத்தான்
பத்திச் சுவைததும பும்பசுந் தமிழ்ச்சொல்
தித்திக் கச்செய்யுளடிசீ ரசைதொறும்
சேக்கிழான் என்னும செம்மல் அவனருள்
வாக்கினால் உய்வீர் என்னரும் மைந்தரே

என விம்மிதத்துடன் விதந்துள்ளேன்.

எல்லாம்வல்ல இறைவன் பெருமையினையும் அவன் தன்னடியார்களுக்கு அருளும் முறையினையும் இத்தகைய இனனவாறு என்று எம்மால் எடுததியம்பல் ஒண்ணாது வாக்கு வன்மையால, காரண காரியங காட்டும் ஆராய்ச்சியால் நிறுவுவதுமியலாது கோள்களாலும், முன்னைய நம வினைகளாலும் நமக்கேற்படும் அல்லல்களை அகற்றி நாம் நல் வாழ்வு வாழ்ந்துய்வதற்கு இறைவனுடைய இணையடி மலர்களை நித்தலும் மனமொழிகளால. இறைஞ்சுவதே நமக்கேற்பட்ட ஒரே வழியும் கடமையுமாகும். இதனைக் கீழ்க்கொடுத்துள்ள கலைஞானக்கன்றின் பாசுரங்களால தெளியலாம்;

வெந்தசாம்பல் விரையெனப் பூசியே
தந்தை யாரொடு தாயிலா தம்மையே
சிந்தி யாஎழு வார்வினை தீர்ப்பரால்
எந்தை யாரவர் எவ்வகை யார்கொலோ ?

ஆட்பா லவர்களுக் கருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான புகில்அள வில்லை கிளக்க வேண்டாம்
கோட்பா லனவும் வினையுங் குறுகாமை எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின் றிவை கேட்கதக்கார்.

ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர் விட்டுளன் எங்கள் சோதி
மாதுக்கம் நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்துசார் மின்களே.

ஆகலின் நாம் நமக்கெய்ப்பில் வைப்பாய்க் கிடைத்துள்ள தேவாரம் திருவாசகம் ஆகிய நூல்களையும் திருத்தொண்டர் புராணத்தையும் பத்தி சிரத்தையுடன் படித்தறிந்து யான் எனதென்னும் இறுமாப்பின் நீங்கி, இருவினையொப்பாகிய திறனறிந்து மாயை மயக்கொழிந்து அவனருளாலே அவனருளுக்கு உடைமையாளராகிக் கடைத்தேறுவோமாக.

# சிலம்பு சிலம்பியது

திரு. சாலை இளந்திரையன்,
தில்லிப் பல்கலைக் கழகம், தில்லி.

தமிழின் முதற்காவியமான சிலப்பதிகாரம் எப்போது தோன்றியது என்னும் கேள்விக்கு, வரையறுத்த முடிவான ஒரு பதில் இன்னும் சொல்லப்படவில்லை. கி. பி. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று ஒரு சாரார் சொல்லுகிறார்கள். இவர்கள், இலங்கை அரசன் கயவாகுவின் காலத்தைக் கொண்டு, அவனைக் கண்ணகி விழாவுக்கு அழைத்திருந்த சேரன் செங்குட்டுவன் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு என்று முடிவு செய்கிறார்கள். எனவே சேரன் செங்குட்டுவனின் தம்பியாகிய இளங்கோவடிகள் சிலம்பை இயற்றிய காலமும் அதுவேயாக வேண்டும் என்பது இவர்களின் கருத்து. மற்றொரு சாரார், "இளங்கோவடிகள் சேரன் செங்குட்டுவனின் தம்பி என்பதற்குப் போதிய ஆதாரம் ( புறச்சான்றுகள் ) இல்லை" என்றும், சிலப்பதிகார மொழிநடை, அதில் வரும் புராணக் கதைகள் முதலியவைகளைக் கொண்டு பார்த்தால், அது பக்தி இயக்கக் காலத்தின் உச்சக்கட்டமாகிய கி பி 7 அல்லது 8-ம் நூற்றாண்டைச் சேர்ந்தாகவே தோன்றுகிறது" என்றும் கூறுகிறார்கள். ஆனால், சிலப்பதிகாரத்தின் பாத்திரச் சித்திரிப்பு முறை, அதில் வருணிக்கப்படும் தமிழ்நாட்டின் வாழ்க்கை முறைகள், சங்க இலக்கியத்துக்கும் பிற்காலக் காவியங்களுக்கும் இடைப்பட்டதாகச் , சிலப்பதிகாரத்தில் கையாளப்படும் கதைப்பாணி ஆகியவைகளை ஊன்றிக்கவனித்தால், இது சங்ககாலத்தை அடுத்துத் தோன்றியிருக்கலாம் என்னும் எண்ணமே உண்டாகிறது.

— 1 —

பிற்காலக் காவிய இலக்கணம். "காவியத்தின் நாயகன் தன்நேர் இல்லாத்தலைவனாக இருக்கவேண்டும்" என்ற கருத்துக்குக் "குற்றம் என்பதே புரியாத இலட்சிய மனிதன் " என்று பொருள் விரித்தது இந்த விரிப்பு, "மனிதன் எத்தனை உயர்ந்தவனாக இருந்தாலும், அவன் ஏதாவது ஒரு வகையில் குறை உடையவனே" என்னும் நேரான உண்மையை மறைத்து விட்டது. அதனாலேதான், " தன் சாதனைகளால் பிறரை விடச் சிறப்புற்றவனே கதைத் தலைவன் " என்னும் எதார்த்த நிலை உண்மை மறைந்து போக, "குற்றம் குறைகளே இல்லா மனிதனே காவியத்தலைவன் " என்னும் செயற்கைத்தன்மை காவியங்களை நிழலிட்டு விட்டது.

## தலைமகன் கோவலன்

தமிழக இலக்கிய உள்ளங்களில் இந்த நிழல் விழுவதற்கு முற்பட்ட காலத்திய படைப்பாகக் காண்கிறது சிலப்பதிகாரம் :

அமரர்க்கு அரசன் தமர்வந்து ஏத்த,
கோநகர் பிழைத்த கோவலன் தன்னொடு,
வான ஊர்தி ஏறினள் மாதோ,
கானமர் புரிகுழல் கண்ணகி ..

கண்ணகி விண்நாடு அடைந்த செய்தியைக் கூறும் இப்பகுதியில் . (23 : 197 — 200) கோவலனையும் பார்க்கிறோம். அவன் ஏற்கனவே வானுலகம் சென்று—தன் மனைவியை அழைப்பதற்காக— அமரர்க்கு அரசன் தமரோடு, வான ஊர்தியில் இங்கே வந்திருக்கிறான்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன், வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும் " என்பது அக்காலத் தமிழ்க் கருத்துரை. கதைத் தலைவியின் கணவனும் கதையின் நாயகனும் ஆகிய கோவலன் தேவர் குழாத்துள் சேர்ந்தான் (19 : 66) என்று வேறோர் இடத்திலும் சொல்லுகிறார் கதை ஆசிரியராசிய அடிகள். சொல்லவே, கோவலனும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவருள் ஒருவன் ' என்று அவர் ஏற்றுக்கொண்டார் ஆகிறது.

கோவலன் வாழ்ந்த வாழ்வு நமக்குத்தெரியும்; சிலப்பதிகாரம் அதை வெகு அழகாகச் சித்திரிக்கிறது : கண்ணகியை மிக விரும்பி அவளோடு சில ஆண்டுகள் வாழ்ந்தான், கோவலன்; மாதவியிடம் ஆசை ஏற்பட்டதும் கண்ணகியை அடியோடு மறந்து விட்டான்.. சென்று சேர்ந்த மாதவியோடும் அவன் நிலையாக வாழவில்லை; அவளைப் பிரிந்து கண்ணகியிடம் வந்த பின்னும், அவன் அமைதியான வாழ்வுக்கு அடிகோலிக் கொள்ளவில்லை. எதிலும் அவசரம், உணர்ச்சிமயம்—இவைகளே அவன் இயல்புகள். இந்த இயல்புகளே காற்றாக, எற்றுண்டு திரிந்த ஒரு சருகாகவே காட்சியளிக்கிறான் கோவலன்.

ஆனால், அவனைப் பிடர்பிடித்து உந்திக் கொண்டே இருந்த இந்த வகையான வாழ்விலும் அவன் சில உயர்குணங்களை வெளிப் படுத்தியுள்ளான்; சாதனைகளையும் புரிந்திருக்கிறான்: மாதவி மூலம் தனக்குப் பிறந்த பெண் குழந்தைக்குப் பெயர் வைக்க வேண்டிய கட்டத்தில், தன் குல முன்னோன் ஒருவனைக் காத்த மணிமேகலைத் தெய்வத்தின் பெயரை நினைவுகூர்ந்து தன் குழந்தைக்கு அவன் சூட்டுவது (15 · 29 — 37) அவனுடைய நன்றி உணர்வைக் காட்டுகிறது. மனைவியின் மேல் குற்றஞ் சுமத்தி. அவளை விட்டுப் பிரிந்து போன பார்ப்பான் ஒருவனுக்குப் பெரும் பொருள் கொடுத்து, இவ்விருவரையும் இல்லற நல்வழிப்படுத்திய செயல் ( 15 . 54 — 75 ) கோவலனின் அருள்நெஞ்சைக் காட்டுகிறது. தானம் வாங்கவந்த ஓர் அந்தணனை மதம் கொண்ட யானை பிடித்துக் கொண்ட போது, தன் உயிரையே பணயம் வைத்து அவனைக் கோவலன் மீட்ட செய்தி ( 15 . 42 — 53 ) அவனுடைய தீரத்தையும் தியாக உள்ளத்தையும் காட்டுகிறது

பத்தினி ஒருத்தி படிற்றுரை எய்த
மற்று அவள் கணவற்கு வறியோன் ஒருவன்
அறியாக் கரிபொய்த்து அறைந்து(ன)ணும் பூதத்துக்
கையகப்படலும்,

கூட்டத்தில் நின்ற கோவலன் ஓடிச்சென்று, "என் உயிர் கொண்டு ஈங்கு இவன் உயிர்தா" என்று வேண்டித், தன் உயிர் கொடுத்துப் பிறன் ஒருவன் உயிரை மீட்க அவன் முன் நின்ற நிகழ்ச்சி [ 15 : 76 — 90 ] அவன் உள்ளத்தில் பொங்கிய இரக்க உணர்ச்சியைக் காட்டுகிறது.

மனைவியைப் பிரிந்து அவளுக்குத் தனிமைத்துயர் தந்தவன், அன்புகொண்ட மாதவியின் ஒழுக்கத்திலேயே ஐயங்கொண்டு அவளைத் துறந்தவன் என்றெல்லாம் எண்ணி வருகிற நாம்—இந்த நிகழ்ச்சிகளைப் பற்றிக் கேள்விப்படும்போது, " எவ்வளவு நல்லவன்" என்கிறோம். இதே உணர்ச்சியில்தான் அவனை வானுறையும் தெய்வத்துள் வைக்கிறார் இளங்கோஅடிகள்.

" குணநாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல் " என்னும் கணக்கிலேயே மனிதனைக் கணிக்கவேண்டும் என்கிற எதார்த்த நோக்கே சிலப்பதிகாரத்தை ஆள்கிறது என்பதற்குக் கோவலனின் பாத்திரப்பணபே போதிய சான்று,

## தலைமகள் கண்ணகி

"ஒரு மாமணியாய் உலகிற்கு ஓங்கிய திருமாமணி" யாக உயர்த்தப்படும் கண்ணகியையும் இவ்விதமே [குறையும நிறையும் உடையவளாகவே] சித்திரிக்கின்றார் அடிகள் கணவன் தன்னை விட்டுப் பிரிந்த போது, பிரிவையும் பிறரின் பரிவையும் தாங்கிக் கொள்ளும் கண்ணகி அந்த உறுதி படைத்தவள் போலக் காணப்படுகிறாள்; ஒரு தவசிக்குரிய பற்றற்ற உள்ளமுடையவளாகவே அவளை அங்கே காண்கிறோம். ஆனால், " அவளும் பெண்தான், அவளுக்கும் கணவனோடு வாழ்வதிலும் அவனுக்கு இன்பம் சேர்ப்பதிலும் தான் இன்பம் " என்பதைப் பின்னால் வரும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் மெய்ப்பிக்கிறது. மாதவியை விட்டு வந்த கணவனை இனி எப்போதும் தன்னுடனேயே வைத்துக்கொள்ள வேண்டும் என்று அவள் கருதுவதும்; ' மனைவிக்குரிய கடமையில் நாம் தவறிவிட்டோம். இனி அப்படி நடந்துவிடவே கூடாது.' என்று

நினைத்தவள் போல அவள் செயற்படுவதும் அந்த நிகழ்ச்சிகளிலெல்லாம் பளிச்சிட்டுத் தெரிகிறது.

மதுரைக்குப் போவோம் என்று கோவலன் சொன்ன போது கண்ணகி மறுமொழியே கூருமல் எழுந்து உடன்செல்கிருள். இது வரை இருந்தது போல இல்லாமல், இனி எந்த நிலையிலும் தன வாழ்வு கோவலனின் வாழ்வோடுபின்னிப் பிணைந்து இயங்கவேண்டும் என்று புதிதாக அவள் மேற்கொண்டிருந்த உறுதியே இதற்குக்காரணம். முன்பு அவ்வாறு இல்லாததாலேதான் தன்னுடைய இன்பமும் தன் கணவனின் வாழ்வும் சிதைந்தன என று பரிசீலித்து உணர்ந்தாலேயே அவள் இந்தப் புதிய உறுதியை மேற்கொண்டிருக்க வேண்டும்.

இதன் தொடர்ச்சியை மதுரை ஆயர் சேரியில் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியில் காண்கிருேம்: கோவலனையும் கண்ணகியையும ஆயாகுல மாதரி தன் வீட்டுக்கு விருந்தினராக அழைத்துச் செல்லுகிருள். வீட்டுககாரர்கள் ஆககிப படைக்கும் விருந்தை இவர்கள் ஏற்று உண்பதே முறை. ஆனுல் கண்ணகியோ, 'பாத்திரம பண்டங்கள் மட்டும் கொடுங்கள், நானே சமையல் செய்கிறேன" என்று (16: 16 — 21) குறிப்பாக மற்றவர்களை விலக்கி, தானே தன் கணவனுக்குச் சமையல செய்து பரிமாற ஏற்பாடு செய்து கொள்ளுகிருள். "எந்த நிலையிலும் மனைவியின் உரிமையை இழந்துவிடககூடாது." என்று அவள் (பழைய அனுபவங்களின் மூலம்) கற்றிருந்த பாடமே அவளை விருந்தின் மரபுகளையும் கூட மீறச் செய்திருக்க வேண்டும்.

## கதையிலே பிறர்கள்

முதன்மைப் பாத்திரங்களான இவர்கள் மட்டுமின்றித் துணைப்பாத்திரங்கள் பலரும் கூட, குறைகளும நிறைகளும் உடையவர்களாகவே படைக்கப்படுகிருர்கள். மன்பதைகாக்கும் தென்புலம் காவலிற் சிறந்திருந்த பாண்டியன் குற்ற வழக்கைத் தானே விசாரிக்க வேண்டிய கடமையை மறந்து, ஊர்காப்பாளரிடம் அப்பொறுப்பை ஒப்படைத்து விடுகிருன். இந்தச் சிறுதவறு, கோவலனின் உயிரைத்திருடிய, பெருந்தவருக முடிந்து விடுகிறது. தான் செய்த தவற்றுக்கு வருந்தித் தன் உயிரையே விடுவதன் மூலம் பாண்டியனும் வானுறையும் தெய்வத்துள் (29 : 10) வைக்கப்படுகிருன்

கண்ணகியின் சிறப்பைக் கேள்விப்பட்டு அவளுக்குச் சிலைஎடுக்க விரும்பும் சேரன் செங்குட்டுவன், அக்கல்லை இமயத்தில் எடுத்துக் கங்கையில் நீராட்டுவது (25 : 122 140) என்று முடிவு செய்கிருன். கனக-விசயர்கள் தமிழ்வீரத்தைப் பழித்தார்கள் என்ற செய்தி கேட்டதும், அவர்களின் தலையிலேயே அந்தக் கல்லை ஏற்றிவருவது (26 13-18) என்று சூளுரைக்கிருன்; அவ்வாறே (27:1-4) செய்யவும் செய்கிருன். அதனேடும் அமையாது, சிறைப்பட்ட கனக விசயரை வேடிக்கைப் பொருளாக்கி, அவர்களைச் சோழனுக்கும் பாண்டியனுக்கும் காட்டி வருமாறும் பணிககிருன்!

மனிதரையே காட்சிப் பொருளாக்கும் இதனைச் சிறந்த வீரம் என்ரே, உயர்ந்த மனிதப்பண்பு என்ரே சொல்லமுடியாது. ஆனுல், இந்தக் குறைபாடுகளுக்கு உரிய சேரனே, அந்த அரசர்களை விடுவித்துத் தனக்கு இணையான அரச விருந்தினர்களாக ஏற்றுக்கொள்ளுகிருன் என்ற செய்தியும் சிலப்பதிகாரத்திலேயே (28:195-202) வருகிறது.

வீரத்தின் பெயரால், போரின் மரபுகளையும மனிதப் பண்பின் வரம்புகளையும் மீறிவிடும் அரசர்களையும் அவர்களைத் திருத்தும் புலவர்களையும் சங்கஇலக்கியத்திலே பார்க்கிருேம் தங்களுக்கும் பிறருக்கும் மிக வேண்டியவர்களான (தகுதி மிக்கவர்களாக) பெரியோர்களிடமும் பராமுகமாக இருந்து, அதனுல, அவர்களின் "கோபச் சொல்மாலை" களைப் பெறுகின்ற மன்னர்களையும் புறநானூறே நமக்குக் காட்டுகிறது. ஆனுலும், பின்னர் திருந்திய அந்த மன்னர்களின் புகழ்களையும் அந்த இலக்கியம் போற்றியே பேசுகிறது.

செயற்கரிய செய்யும் மனிதர்களிடமும் குறை உண்டு என்னும் நோக்கில் பார்க்கின்ற இந்தப் பாணியையே சிலப்பதிகாரம் பின்பற்று கிறது. "குற்றம் குறைகளே இல்லாதவன் தான் கதையின் நாயகன் என்னும் (இலக்கிய) மரபு தமிழகத்தில் தோன்றுவதற்கு முன்பே சிலப்பதிகாரம இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்பதற்கு இந்தப் பாத்திரப்படைப்பு நோக்கு ஒரு முக்கியமான சான்ருக அமைகிறது.

— 2 —

கதை என்ற வகையில் சிலப்பதிகாரம் மிகச் சிறிய அளவினதே; அதை வளர்த்துச் செல்லும் பாத்திரங்களும் மிகச் சிலரே. ஒரு சிறிய விதையைப் பொதிந்துகொண்டு பெரிய கனி ஒன்று உருவாவது போல, இந்தச் சின்னஞ்சிறிய கதையைச் சுற்றி அக்காலத் தமிழகத்தின் வாழ்வு முழுவதுமே இக்காவியத் தில் சித்தரிக்கப்படுகிறது; ஏன், அக்காலத்திய இந்திய இலங்கைச் சூழல்கூட அங்கங்கே எட்டித் தொடப்படுகிறது.

## திணைத் தமிழ் வாழ்வு

இவ்வாறு சித்திரிக்கப்படும் சமுதாயச் சூழ்நிலை பிற்காலக் காவியங்களினின்று முற்றி லும் வேறுபட்டிருப்பதும பழைய தொல்காப் பிய இலக்கணங்களோடு நெருங்கிய தொடர்புடையதாக அமைந்திருப்பதும் சிந்தனைக்கு உரியது. குறிஞ்சி, முல்லை, மருதம் நெய்தல் பாலை என்னும் ஐந்து நிலங்களுக்கு உரிய மக்களும் தத்தம் திணைகளுக்குரிய பழக்கவழக்கப் பண்பாடுகள் தனித்துத் தோன்றுமாறு சித்திரிககப்படுகிருர்கள். அவர்கள் அனைவரையும் ஒரு குடைக்கீழ்க் கொண்ட ஆட்சிகள் விரிந்திருந்தாலும் அவர்கள் வெவ்வேறு வாழ்க்கை முறைகளை உடைய (சங்ககாலத்த)வர்களாகவே சித்திரிக்கப்படுகிருர்கள். அதாவது, நாடு முழுவதையும் அளாவிய பொதுப் பழக்க வழககங்கள், பொதுவழிபாட்டு முறைகள் பொதுவாழ்க்கை நோக்கம் முதலியன தோன்றியிராத ஒரு காலக்கட்டத்தைச் சித்திரம் செய்கிறது சிலப்பதிகாரம்.

## இறைவழிபாடுகள்

காவிரிப்பூம் பட்டினம் மாபெரும் வாணிப வளர்ச்சியையும் செயற்கைப்பொருள் உற்பத்திச்சிறப்பையும் சித்திரிக்கிறது. அங்கே எத்தனையோ தெய்வங்களுக்குக் கோயில்கள் உள்ளன. இந்திரவிழா என்னும் ஒரு நிகழ்ச்சி குறிப்பிட்ட நாளில் தொடங்கி, குறிப்பிட்ட சம்பிரதாயங்களோடு குறிப்பிட்ட நாளில் முடிவடைகிறது. இன்ன தெய்வத்திற்கு ஆண்டின் இன்னநாளில் விழா எடுக்க வேண்டும் என்னும் நிறுவன வழிப்பட்ட (INSTITUTIONALISED) சமய வழிபாட்டு முறையைக் காவிரிப்பூம்பட்டினத்தார் பின் பற்றுகிருர்கள்.

பாலைநிலக்காட்சி (வேட்டுவவரி) சமய வழிபாட்டைப் பொறுத்தவரையில் இதற்கு முற்றிலும் வேறுபட்ட (அந்த நிலமக்களுக்கே உரிய) ஒரு நடைமுறையைக் காட்டுகிறது: அங்கே தெய்வ வழிபாட்டுககு என்று முன்ன தாக நாள் குறிக்கப்படவில்லை; இன்னநாளில் தான் கொற்றவையை வழிபடுவது என்ற கட்டுப்பாடும் இருந்திருப்பதாகத்தெரியவில்லை திடீரென ஒருநாள், வேட்டுவச் சாலினி (சாமியாடி),

தெய்வ முற்று மெய்ம்மயிர் நிறுத்துக்
கைஎடுத்து ஓச்சிக் கானவர் வியப்ப,......
.. 'கலையமர் செல்வி கடன் உணின் அல்லது
சிலையமர் வென்றி கொடுப்போள் அல்லள்!'

என்று எச்சரித்து, "வெற்றி வேண்டுமானல் உடனேயே கொற்றவைக்குக் கொடை கொடுங்கள்!" என்று அறிவிக்கிருள். அங்கேயே, உடனேயே, வழிபாடு தொடங்கி விடுகிறது சாலினி தெய்வமுற்று நின்று இவைகளைக் கூறியதைக்கேட்டுக் கானவரே வியக்கிருர்கள். அதாவது. அவர்களின் தெயவம், தான் நினைத்த நேரத்தில் வந்து தனக்கு வேண்டியதைக்கேட்கிறது; பட்டி னத்து தெய்வமபோல, இவர்கள் முன்பே குறித்துவைத்த தேதியில் வரவில்லை.

மதுரைப் பட்டினத்தின் ஒரு பகுதியாகிய ஆயர்சேரியிலும் இறைவழிபாடு நடக்கிறது.

அங்கே, துன்பம் வருவதற்கான அறிகுறிகள் தோன்றியதும் வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்து விடுகிறார்கள்; வெள்ளிக்கிழமையா செவ்வாய்க் கிழமையா என்று கூடப்பார்க்கவில்லை. (பிற் காலத்தில், கிராமச் சிறு தேவைகளுக்குக்கூட வழிபாட்டு நாட்கள் வெவ்வேறாகக் குறிக்கப் பட்டு அவை இப்போதும் கடைப்பிடிக்கப்பட்டு வருவது இங்கே ஒப்பு நோக்கத்தக்கது ..)

## கண்ணகி கோயில்

குன்றக்குறவர்களின் வழிபாடும், இப் படியே, நினைத்த மாத்திரத்தில் நினைத்த இடத்தில் தொடங்கி விடுகிறது. வேங்கை மரத்தின் நிழலில் நின்ற கண்ணகியை வான வர்கள் வந்து அழைத்துப் போனார்கள். அதைக்கண்ட குறவர்கள் அவள் நின்ற (வான் சென்ற) அந்த இடத்தையே கோயி லாக்கி அவளையே தெய்வமாக்கி விட்டார்கள்:

சிறுகுடி யீரே! சிறுகுடி யீரே!
தெய்வங் கொள்ளுமின் சிறுகுடி யீரே!
நிறங்கிளர் அருவிப் பறம்பின் தாழ்வரை
நறுஞ்சினை வேங்கை நன்னிழற் கீழ்ஓர்
தெய்வங் கொள்ளுமின் சிறுகுடி யீரே!

இதை கண்ணகிக்குத்தான் சேரன் செங்குட்டு வனும் கோயில் எடுக்கிறான். ஆனால், அந்தத் தெய்வத்தைக் கோயிலில் எழுந்தருளச் செய்யு முன், அங்கே எத்தனை சடங்குகள் சம்பிர தாயங்கள்! குன்றக்குறவர்கள் கண்ணகியைக் கண்ட இடத்திலேயே, கல்லையோ மண்ணையோ பிடித்து வைத்து, அதையே கண்ணகித் தெய்வமாக்கி விட்டார்கள். சேரனோ, எந்த மலையில் கல்லெடுத்து எந்த ஆற்றில் நீராட் டலாம் என்று ஆலோசிக்கிறான்; அந்தக் கல்லை யார், எந்த விதத்தில் நீராட்ட வேண்டும் என் பதுகூட அங்கே வரையறுக்கப்பட்டுள்ளது. மற்றவர்கள் தொட்டால் அந்தக் கல்லில் தெய்வம் வராது என்பது வரையறைச் சமயத் தின் கோட்பாடு. செங்குட்டுவன்,

கங்கைப் பேர்யாற்றுக் கரையகம் புகுந்து
பாற்படு மரபின் பத்தினிக் கடவுளை
நூற்றின் மாக்களின் நீர்ப்படை செய்து.
வஞ்சிமாநகருக்குக் கொண்டு வருகிறான். வந்தபின்,

மேலோர் விழையும் நூல்நெறி மாக்கள்
பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டத்து
இமையவர் உறையும் இமையச் செவ்வரைச்
சிமையச் சென்னித் தெய்வம் பரசி,
கைவினை முற்றிய தெய்வப் படிமத்து
வித்தகர் இயற்றிய விளங்கிய கோலத்து
முற்றிழை நன்கலம் முழுவதும் பூட்டி.
பூப்பலி செய்து காப்புக் கடைநிறுத்தி,
வேள்வியும் விழாவும் நாள்தொறும் வகுத்து,
கடவுள் மங்கலம் செய்கஎன ஏவினன்.

இத்தனை காரியங்களும், சமய நூல்கள் வகுத் துரைத்த முறைப்படி நடைபெறுகின்றன. கோயில்எழுப்பு, வழிபாடு ஆகிய இரண்டிலும், தமிழகத்துக்குள்ளேயே இருந்து வந்த பெரிய வேறுபாட்டை இவ்வாறு (இரண்டு வேறு காட்சிகளின் மூலம்) சொல்லோவியம் செய் கிறது சிலப்பதிகாரம்.

இந்தச் சொல்லோவியங்களின் வாயிலாக நாம் அறியும் செய்தி என்ன? சிலப்பதிகாரக் கதை நடைபெறும் காலத்தில், நிறுவன வழிப் பட்ட சமயமும் இருந்தது; அவ்வழிப்படாமல், ஒவ்வொரு நிலத்துக்கும் உரிய தெய்வங்களைப் பழைய எளிய முறையில் வழிபடும் முறையும் இருந்தது. முன்னது பட்டணங்களில் நில வியது; பின்னது கிராமங்களில் நிறுவியது. நிறுவனவழிச் சமய வழிபாட்டுமுறை கிராமிய மக்களை ஒருசிறிதும் பாதித்திருக்கவே இல்லை. அதாவது நிலத்துக்கு நிலம் வேறுபட்ட சங்க காலச் சமுதாய அமைப்பையும், பெரிய பட்டணங்களிலே மட்டும் அதினின்று மாறு பட்டிருந்த (புதிதாகப் புகுந்திருந்த) ஒரு வாழ்க்கை முறையையும் சிலப்பதிகாரம் நமக் குக் காட்டுகிறது

— 3 —

மற்றொரு விதத்திலும் சிலப்பதிகாரம் சங்ககாலத்துக்கும் சமய எழுச்சிக் காலத்துக் கும் இடைப்பட்டதாகத் தோன்றுகிறது. சங்க இலக்கியம் முழுவதுமே ஒருணர்ச்சி, ஒரு

நிகழ்ச்சிப் பாடல்களாக அமைந்திருக்கிறது. ஒவ்வோர் அரசனைப் பற்றியும் பப்பத்துப் பாடல்கள் பாடிய பதிற்றுப்பத்தும் கூட, எந்த ஓர் அரசனின் வாழ்க்கையையும், முறையாகவும் தொடர்ச்சியாகவும் கூறவில்லை; ஒரு நாட்டின் பல்வேறு பகுதிகளையும் மக்களையும் ஊடுருவி நிற்கும் ஆற்றுப்படைகளும் கதை இலக்கியமாக உருவாகவில்லை.

பின்னால் வந்தவற்றுள், நீதிநூல்கள் நீங்கலாக உள்ள ஏனைய எல்லாம், ஏதாவது ஒரு வகையில் கதை தழுவிய செய்யுட்களாகவே உள்ளன. பழைய அக இலக்கியப் பாணியில், ஒவ்வொரு துறைக்கும் தனித்தனிப் பாடல் பாடிய பிற்காலக் கோவை கூட, அதை ஒரு முழுமையான வாழ்க்கைக் கதையாக்கிக் காட்டவே முயன்றிருக்கிறது

சமய நம்பிக்கைகளும் பேரரசுகளும் சிலப்பதிகாரத்திலேயே சொல்லப்பட்டாலும், அவற்றுள் இயற்கையை மீறிய அற்புதத்தனங்கள் மிகுதியாக வலியுறுத்தப்படவில்லை பிற்காலத்தில் தோன்றிய அவதாரக் கற்பனை எந்தப் பாத்திரத்துக்கும் ஓர் இலட்சியத் தன்மையை (குற்றமே இல்லாத தன்மையை) ஏற்றியது; அரசன் தெய்வத்தின் பிரதிநிதி என்ற கொள்கையும் அவன் தவறே செய்யமாட்டான் என்ற நம்பிக்கையை உண்டாக்கியது. இந்த இரண்டுமே சிலப்பதிகாரத்தில் இடம் பெறவில்லை.

## முடிவுரை

இவை அனைத்தையும் ஒன்று சேர்த்துப் பார்க்கையில், சிலப்பதிகாரம், பல வகையான சமய நம்பிக்கைகள் பெருகித் தமிழ்வாழ்வே பெரியமாறுதல்களுக்கு உட்பட்ட கி.பி. நாலாம் ஐந்தாம் நூற்றாண்டுகளுக்கு முந்திய தமிழகத்தைச் சித்திரிக்கிறது என்றும், கதை தழுவிய இலக்கியத்தை இதுவே தமிழில் தொடங்கி வைக்கிறது என்றும், தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்ககால முறையை ஒட்டிய எதார்த்த நிலைப் படப்பிடிப்பைக் கையாண்ட கடைசி நூல் இதுவே என்றும் கொள்வதில் தவறு இல்லை.



# இலக்கியம் வலியுறுத்தும் நீதிகள்

சிந்தாந்த கலாநிதி, உரைவேந்தர்,
பேராசிரியர் ஔவை. சு. துரைசாமி,

கல்வியால் பெருமிதமும் புலமையுணர்வால் இன்பமும் உண்டாகும் என்பர் தொல்காப்பியர். கல்விப் பெருமிதமும் புலமைப் புலனுணர்வும் உருவாக இருப்பது இலக்கியம்; மேலைநாட்டு ஆங்கிலேயர், இனிது பொழுது போக்குதற்கு உதவுவது இலக்கியம்; அதனை நீதிகளாலும் அறக்கொள்கைகளாலும் நிரப்புவது சிறப்பன்று என்று கருதுவர்.

இயற்கைக் காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் சொல்லுருக் கொடுத்துக் கற்பனைகளால் வண்ணம் தீட்டிக் கற்போர் மனத்திற்கு உவகைச் சுவையை ஊட்டுவது இலக்கியத்தின் அமைப்பும் நோக்கமுமாகும் என்பதை நம் நாட்டவர் பொருளாகக் கொள்ளவில்லை. உலகமும் அதன் கண் உள்ள பொருள்களும் அவற்றிடை நிகழும் காட்சிகளும் யாவும் இலக்கியமே.

உலகியல் வாழ்வே இலக்கியம் என்பர். அவ் வாழ்வை உள்ளவாறே சுருக்கியும் பெருக்கியும் சொல்லால் அழகுறப் பாடுவதும் உரைப்பதும் இலக்கியமெனப் பழந்தமிழ் மக்கள் எண்ணினர். அவற்றைக் கற்பனையால் உரு நிறைத்துப் புனைந்துரையால் அழகமைத்துச் சொல்லொளிய இசை கூட்டி எழுதப் படுவதையே சிறந்த இலக்கியமாகக் கருதினர்.

உலக வாழ்வில் மக்களுயிர் அறம், பொருள் இன்பங்களைப்பெற்று மலமாசு நீங்கி அறிவு விளக்கம் பெறுகிறது; அதனைக் கருத்தாகக் கொண்டது இலக்கியம் என்பர் தமிழர்.

அதனால் தான் வாழ்வாங்கு வாழும் உலக வாழ்வே ஒருவனைத் தெய்வமாச்கும் நலமுடையது என்பாராய்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

வையகமும் வையத்து வாழ்வும் அறம் பொருள் இன்பம் என்ற பொருள்களால் நிறைந்தவை. இந்த வாழ்வுதான் இலக்கியத்தின் உட்பொருள்; கருப்பொருள். அறம் பொருள் இன்பங்களின் கலவையான வாழ்வை இலக்கிய உருக் கொள்ளும் போது அதன் கண் இன்பமேயன்றி அறமும் பொருளும் இருந்தே தீரும். அதனால் நூல்களின் பயன் கூறவந்த அறிஞர் "அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே" என அறிவுறுத்தினர். இக்கருத்தைப் புறக்கணித்து இன்ப நுகர்ச்சி யொன்றே இலக்கியத்தின் பயன் என்ற கருத்து நம் நாட்டுக் கல்வியாளர் உள்ளத்தில் தோய்ந்து நின்றதனால், கல்வி பயிலும் மாணவர்கள் உள்ளத்தில் ஆழச் சிந்திக்கும் ஆற்றலை வளர்க்கும் இலக்கியப் பயிற்சி இடம் பெறாமல் போய்விட்டது. அறிவறிந்த அறத்தையும் சிறந்த பொருளையும் நிலைத்த இன்பத்தையும் நாடவேண்டிய இளமையுள்ளம், அறத்தைக் கைவிட்டுப் போலிப் பொருளையும் பொய்யின்பத்தையும் தேடி அலைகிறது.

நிலைமை இன்னும் கெடவில்லை. அறிவறிந்த அறத்தையும் சிறந்த பொருளையும் நிலைத்த இன்பத்தையும் தன்னகத்தேகொண்ட இலக்கியங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஆழ்ந்து பயில வேண்டும்; இன்பத்தை நுகர்ந்து பொருளை உட்கொண்டு அறத்தைச் செயலிற் கொணர வேண்டும்.

இலக்கியங்கள் தம்மைப் படித்து இன்புறுவோரைச் சும்மா விடுவதில்லை. தாம் பெற்ற இன்பத்தைப் பிறர்க்கு விளக்கியுரைத்து அவரையும் இன்புறுத்தத் தூண்டும். இலக்கியம் ஒன்றைப் படிப்பவன் இனிய பகுதியைப் படித்து மகிழும்போது அதனைப் பிறருக்கும் சொல்லி மகிழ்வதை நாம் பலகாலம் பார்க்கின்றோம். கற்ற மக்களுக்கு இது இயல்பாக இருப்பதைத் திருவள்ளுவர்,

"தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்"

என்று கூறுகிறார்.

இதனால் இலக்கியமானது படிக்கின்ற தனக்கும் படித்துரைக்கக் கேட்பவர்களுக்கும். இன்பம் தருவதை அறிகிறோம்; இதுபோலவே தனக்கு வேண்டிய அறத்தையும் இலக்கியம் உணர்த்துவதைப் படிப்பவன் அறிகிறான்.

சங்க இலக்கியங்களில் ஒன்றான பத்துப் பாட்டினுள் குறிஞ்சிப்பாட்டு நங்கையொருத்தி தன் மனமொத்த நன் மகன் ஒருவன்பால் காதல் கொண்டு இருவர்க்கும் இடையில் உண்டான தொடர்பை யார்க்கும் சொல்லாமல் தன் மனத்திற்குள்ளேயே மறைத்து மெலி கின்றாள்; தாய் உண்மையறியாமல் வருந்து கிறாள். நங்கையின் தோழி அதனை அவள் பெற்றோர்க்குத் தெரிவியா தொழியின் வரும் தீங்கை நினைந்து அவள் தாய்க்கு மெல்ல வுரைக்கின்றாள்.

"முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை
நேர்வரும் குரைய கலம்கெடின் புணரும்;
சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல்
ஆசறு காட்சி ஐயர்கரும் அந்நிலை
எளியவென்னார் தொன்மருங் கறிஞர்"

என உரைக்கின்றாள். பொன்னும மணியும் கொண்டு செய்த அணிகலம் கெட்டுடைந்தால மீளச் செய்து கொள்ளலாம்; ஒருவருடைய குணமும் மதிப்பும் இயல்பும் கெடுமானால் பழையபடி மதிப்புப் பெற முடியாது என்ற கருத்தை மனத்தில் கொள்ளும்போது படிப் பவனுக்கே ஓா உணர்ச்சி தோன்றித் தன் மதிப்பையும் பண்பையும பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று ஊக்குகிறது.

கலித்தொகையில் ஒரு பாட்டில் உறங்கிய யானை யொன்று தன்னை வேங்கைப் புலி ஒன்று தாக்க அதனோடு போர் செய்ததாகக் கனக்கண்டு விழித்தெழுந்து வருகிறது. எதி ரில் வேங்கை மரமொன்று மலர்ந்து புலியின் நிறங்கொண்டு தோன்ற, யானை சினங் கொண்டு தாக்கி முறித்துக்கீழே தள்ளிவிட்டுப் போகிறது. பின்பு அவ்வழியே வரும்போது வீழ்ந்து கிடப்பது மரம் என்றும் அதனைப்பாரா மல தாக்கியது குற்றம் என்றும் எண்ணி, நாணம் உற்று, அதனைக் காண விரும்பாமல் தலைகுனிந்து செல்லுகிறது அந்த யானை. இதனைக் கூறுகின்ற பாட்டின்,

"கனவில் கண்டு கதுமென
புதுவ தாக மலர்ந்த வேங்கையை
அதுவென உணர்ந்து அதன் அணிநலம் முருக்கிப்
பேணுமுன்பின் தன் சினம் தணிந்து
காணும் பொழுதில்நோக்கல் செல்லாது
நாணி இறைஞ்சும்"

என்ற பகுதியை படிக்கிறவன் இது தனக் கொரு பாடம் எனக் கருதுகிறான்; பொருந்தாச் சினத்தால் திருந்தாச் செயல் செய்வது நம்மை வெட்கித் தலைகுனியச் செய்யுமெனத் தெரிந்து கொள்கிறான்.

நற்றிணை என்ற நூலில் கணவனோடு மனைக்கண் இருந்து அறம் புரிந்தொழுகும மங்கை யொருத்தி, மழைக்காலத்து மாலைப் பொழுது இருளும் குளிரும் மிகுத்து வருவது காண்கிறாள்; அவள் கணவன் கடமை காரண மாக வெளியூர் சென்றிருக்கிறான். குளிர் மாலை யிருட் காலம் அவளைத் தன் கணவனை நினைக் கச் செய்கிறது. நினைககின்றவள நெஞ்சில் ஓர் எண்ணம் எழுகிறது. இதே மாலைப் பொழுது தன் கணவன் உள்ளத்தில் என்னை நினைக்கப்பண்ணுமானால் அவர் மேற்கொண்ட கடமைப் பணி குறைபட்டுப் போம்; ஆள் வினைத் திறமையில்லாதவன் எனப்பலரும் பழித்து இகழ்வரே என்ற கருத்து விளங்க,

"ஐது வந்து இசைக்கும் அருளில் மாலை
ஆள்வினைக்கு அகன்றோர் சென்ற நாட்டும்
இனையவாகித் தோன்றின் வினைவலித்து
அமைதல் ஆற்றலர் மன்னே" என
மொழிகிறாள்.

இப்பாட்டைப் பெண்ணொருத்தி படிப்பாளா யின், தன் கணவன் தனக்குரிய கடமையை

நன்கு ஆற்ற வேண்டும்; அதனால் பலரும் பாராட்டத் தன் குடும்பம் செல்வமும் புகழும் பெற்றுச் சிறக்கும் என எண்ணுவாளன்றோ?

சேரமான் கணைக்காலிரும்பொறை சோழன் செங்கணானோடு போர் செய்து அவனால் பிணிப்புண்டு சிறைப்படுகிறான். சிறையில் அவனுக்குத் தண்ணீர் வேட்கை உண்டாக நீர் கொண்டு வருமாறு சிறைக் காவலரிடம் சொல்லுகிறான். காவலர் சிறிது காலம்கழித்துக்கொண்டு வருகிறார்கள். அவர்களின் செயல் இரும்பொறையின் மனவுணர்ச்சியைத் தொடுகிறது. "நண்பரல்லாத பிறரிடத்தும் சென்று இரந்து வயிற்றுத் தீயைத் தணித்துக் கொள்ளட்டும் என்று எத்தகைய பெற்றோரும் பிள்ளைகளைப் பெறுவதில்லை. தாம் இரந்து உண்டாலும் தம் பிள்ளை உயர்ந்து பிறர் பசியைக் களையக் கூடிய பெருமை பெறவேண்டும் என்றுதான் நினைப்பார்கள் என்ற கருத்தமைய

"கேளல் கேளிர் வேளாண் சிறுபதம
மதுகை யின்றி வயிற்றுத் தீத்தணியத்
தாம் இரந்துணணும் அளவை
ஈன் மரோ இவ்வுலகத்தானே"

என்று பாடி வைத்துவிட்டு உயிர் விடுகின்றான். இதைப் படிப்பவர் தாமும் மானவுணர்வுடையராய்ப் பிச்சையெடுத்தேனும் வயிறு வளர்க்கலாம் என்ற எண்ணமில்லாதவராய் வாழ முயல்வார்களே தவிர வேறு நினைவு கொள்ளார்.

சிலப்பதிகாரத்தில் கண்ணகியும் கோவலனும் கவுந்தி அடிகளுடன் சீரங்கத்தின் வழியாகக் காவிரியைக் கடந்து அதன் தென்கரையில் நின்ற பூம்பொழிலில் தங்கியிருக்கின்றனர். அவர்களை நோக்கிப் பரத்தை யொருத்தியும் பரத்தன் ஒருவனும் வருகிறார்கள். அவ்விருவரும் கோவலனையும் கண்ணகியையும் பார்த்து வியந்து கவுந்தியை நோக்கி "காமனும் இரதியும் போலும் இவர் யார்?" எனக் கேட்கின்றனர். காமனும் இரதியும் தேவர்கள்; இவர்கள் என் மக்கள்; மனித இனத்தவர் என்று கவுந்தியடிகள் வெடிப்பாகச் சொலிப் "பக்கம் நீங்குமின்" எனச்சொல்லுகிறார். நீங்காமல் அப்பரத்தையர் நின்று மனத்தில் பதற்றம் கொண்டு "உன் மக்கள் என்று சொல்லுகிறாய்; ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர் கணவனும் மனைவியுமாவரோ, கற்றறிந்தவராக இருக்கின்றீர்களே" என்று வினவுகிறார்கள்; இந்த உரையாடலைக் கண்ணகியும் கோவலனும் பார்க்கின்றார்கள். கவுந்தியடிகட்குச் சினம் உண்டாகிறது. கண்ணகியை இகழ்கின்றார்கள் போலும் என நினைந்து "முள்ளுடைக்காட்டில் முதுநரி ஆகுக எனச் சபிக்கின்றார்; அவர்கள் நரியுருவாகி ஊளையிடுகிறார்கள். அது கண்ட கண்ணகியும் கோவலனும் மனம் நடுங்கி, அவர்களுக்காக இரக்கம் மிகுந்து, "அன்னையே, நெறியில் நீங்கியோர் நீரல கூறினும் அறியாமை என்று அறிதல் வேண்டும்" என்று மொழிந்து சாப விடை தருமாறு வேண்டுகிறார்கள். இப்பகுதியைப் படிக்கும்போது நமது மனம் அசைவற்று நின்று விடுகிறது. கண்ணகி கோவலர் உரையில் உயர்ந்த பண்பாடு விளங்கித் தோன்றுவது கண்டு உள்ளம் இன்புறுகிறது. கவுந்தியடிகளின் வெடித்த சொல் தானே பேச்சினை வளர்த்தது என்றொரு எண்ணமும் நம் மனத்தில் எழுகிறது. ஆனால், பரத்தரின் தோற்றம் கவுந்தியடிகட்கு அருவருப்பை உண்டு பண்ணியதையும் அதனால் அவள் "பக்கம் நீங்குமின்" என்று பரத்தையர்க்குச் சொன்னதையும் நினைக்கும் போது கவுந்தியடிகளிடம் நன்மதிப்புண்டாகிறது; வம்பப்பரத்தரே வாய் வாளாது குற்றப்படுவதை அறிகிறோம். இந்நிலையில் கோவலனும் கண்ணகியும் கூறியது 'இவர்கள் நெறியின் நீங்கியவர்; நீரல்லவே கூறுவர்; காரணம் அவர்களது அறியாமை; அதனை நினைந்து அருள் புரிக' என்று சொல்லுவது நன்மக்கட்கு அமைய வேண்டிய பண்பாடு இது என்ற கருத்துப் பசுமரத்தறைந்த ஆணி போல மனத்தில் பதிகிறது; வாழ்க்கைக்கு அறவுரையாக அமைகிறது

மணிமேகலையைப் படிப்பது ஏனைய இலக்கியங்களை விட எளிதாகும்; அதன் சொன்னடை எளிய சொற்களால் இயன்று

ஆற்றுநீர் ஓட்டம் போல அமைந்திருப்பது மணிமேகலையின் அழகில் மையலுற்றது காரணமாக நடைபெற்ற நிகழ்ச்சிகளால் உதயகுமரன் விஞ்சையன் ஒருவனால்கொல்லப் படுகிறான் அச் செய்தி வேந்தனுக்குத் தெரி கிறது; அவ்வேந்தன் உதயகுமரனுக்குத் தந்தையாவன், மணிமேகலை காரணமாகத் தன் மகன் கொலையுண்ட செய்தியை வேந்தன் அறிந்து பேசுகின்ற பகுதி படிப்பவர் மனத் தைப் பிணித்துச் சிந்தனையிற் செலுத்தும் சிறப்புடையது

மணிமேகலைபாற் காதலுற்று மையல் கொண்டு ஒழுகிய செய்கைகளைத் தக்காருடன் கூடி ஆராய்ந்து தெளிகின்ற வேந்தன் தன் மகன் பால் குற்றம் இருப்பது உணர்கிறான்; குற்றம் செய்தாரை ஒறுப்பது ஆளும் அரசன் செயல்; ஆளப்படும் மக்கள் அச் செயலை மேற் கொள்வது தக்கதன்று என நினைத்து,

'யான் செயற்பாலது இளங்கோன் தன்னைத்
தான் செய்ததனால் தகவிலன் விஞ்சையன்''

என்றுரைக்கின்றான். இதனைப் படிக்கும் போது ஆளப்படும் மக்கள் உள்ளத்தில் இந்த உணர்வு நன்கு பரவி நிலைபெறுமாயின், நாட்டில் கலக்கமும் பூசலும் உயிர்க்கொலையும் நிகழ இடமிராது என்ற கருத்துத் தோன்றி குடிமைப் பண்பை நினைவுறுத்துவது காண்கி றோம்

அந்நிலையில் வேந்தன் உள்ளத்தில் வேறோர் உணர்வு தோன்றி வியப்பை உண்டு பணணுகிறது. அரசர் குடியின் வரலாற்றை அவன் எண்ணுகிறான்; மனுச் சோழன் தன் மகன் செய்த குற்றத்துக்காக அவனைத தானே தன் தேர்க்காலில் கிடத்திக் கொன்றது நினைவில் எழுதலும உள்ளத்தில் மான உணர்வும் பெருமிதமும் நிரம்பி விடுகின்றன. மகன் விஞ்சையனால் கொலையுண்டது அவனுக்கு அருவருப்பை உண்டாக்குகிறது அதனால்,

மகனை முறை செய்த மன்னவன் வழி ஓர்
துயர் வினையாளன் தோன்றினன் என்பது
வேந்தர் தம் செவி உறுவதன் முன்னம்
ஈங்கிவன் தன்னை ஈமத்து ஏற்றுக

என்று கட்டளையிடுகிறான்.

இதனோடு அவன் "கணிகை மகளையும் காவல் செய்க" என்று சொல்லி மணிமேகலை யைச் சிறையில் இடுகிறான். படிக்கும் நெஞ் சில் இது ஆராய்ச்சியைத் தூண்டுகிறது. மணிமேகலை குலமகளாயின் அவனது அழகு மகன் மனதை மயக்கியிராது; கணிகை மகளா தலால் தன்மகன் மனத்தை மையலுறுவித்துக் கொலைக்குள்ளாக்கிற்று என்று கருதுவது புலப்பட, மணிமேகலை எனப்பெயர் கூறாமல் 'கணிகைமகள்' என்று சொல்லுகிறான். மேலும் அவளை வெளியே நகரத்தில் உலவவிடின் நகர மக்கள் அவளது அழகைப் பழித்து அவளுக்கும் தீங்கு செய்வரென நினைந்து, "கணிகைமகளை யும் காவல் செய்க" என்று பணிக்கின்றான். இதனைப் படிப்பவரும் கேட்பவரும் அரசு முறையின் அருமைப்பாட்டை மனங்கொண்டு வாழ்வாங்குவாழும் வாழ்வினராவர் என்று அறியலாம்.

இவ்வாறே இடைக்காலத்தில் தோன்றிய திருத்தக்கதேவர், கொங்குவேளிர், சேக்கிழார், கம்பர், கச்சியப்பர் முதலியோர் வழங்கியுள்ள இலக்கியங்கள் படிப்பவர் உள்ளத்தைப் பண்படுத்தும் பாங்கில் அமைந்துள்ளன.

சீவக சிந்தாமணியில் சச்சந்தன் தன் மனைவி விசயையிடம் தன்பால் நிலவிய கழிகாதல் வயப்பட்டு அரசைத்தன் அமைச்சன் கட்டியங்காரனிடம் வைக்கின்றான். அவனும் அரசையேற்று ஆட்சிபுரியத் தொடங்கிவிடு கிறான். சச்சந்தன் கழிகாமக்கடலில் வீழ்ந்து கருத்தழிந்திருக்கிறான். அந்நிலையில் நிமித்திகன் என்ற அமைச்சன் அரசனைக் கண்டு "அரசே, நீ ஒருவன் மேல் கொற்றம் வைப்பின் நிலம் திரு நீங்கும்" என்று அறிவுறுத்துகிறான். அவனுக்குச் சச்சந்தன் உரைப்பது படிப்பவர் மனத்தை இரக்கததில் ஆழ்த்துகிறது.

"எனக்கு உயிர் என்னப் பட்டான்
என்னலால் பிறரை இல்லான்;
முனைத்திறம் முருக்கி முன்னே
மொய்யமர் பலவும் வென்றான்;
தனக்கு யான் செய்வ செய்தேன்
தான் செய்வ செய்க; ஒன்றும்
மனக்கு இன்னுமொழிய வேண்டா
வாழியர் ஒழிக என்றான்"

நிமித்திகன் நல்கிய அறிவுரையைச் செவியில் வாங்கிய சச்சந்தன் கட்டியங்காரனிடம் கொண்ட நம்பிக்கையை பெரிதும் நினைத்து 'எனக்கு உயிர் எனப்பட்டான் என்னலால் பிறரை இல்லான்' ஒன்று பேசுவது கெடுமதி அறிவுக்கண்ணை மறைப்பது தோன்றிப் படிக்கின்ற நம்மை மருட்டுகிறது' மேலும் பேசுகின்ற சச்சந்தன் தனக்கு யான் செய்வ செய்தேன், தான் செய்வ செய்க' என்று சொல்லுவதும் ஒன்றும் மனக்கின்னு மொழியில் வேண்டாமென்று மேலும் அறிவுரை பெற மறுப்பதும் கெடுவோா கெடுந் திறம் இவ்வாறு எனப்படிப்பவா அறிவுக் கண்களை விழிக்கச் செயகின்றன.

சேக்கிழாருடைய பெரிய புராணத்தில நம்பியாரூரர் திருவாரூரில் பரவையாரைக் கண்டு காதல் கொண்டு கையறவு படுகின்றார். அவர்க்குக குளிர்ச்சி தரும் பொருள்கள் பலவும் வெப்பத்தைச் செய்வதாக உள்ளன. மாலைப்போதில் தென்றல வீசுகிறது. அதுவும் ஆரூராருக்கு வெப்பத்தையே தருகிறது. அந்நிலையில் அவரது நல்லறிவு காரண காரிய ஆராய்ச்சியில் இறங்குகிறது. *குளிரும் பருவத்தும் இன்பமே செய்யும் தென்றல் இந் நாளில் வெம்மை தருவது கூடாதே எனச் சிந்திக்கின்றார். இது தோன்றுமிடம் சிவ பிரான் வீற்றிருக்கும் திருக்குற்றாலத்து மலய மலை; சார்ந்து தவழ்ந்து வருவது தெய்வத் தமிழ் பாயும் மருதத் தண்பணை நாடுகள். மேலும் மலயமலை தமிழ் தோன்றிய இடம்; தமிழொடு தோன்றித் தமிழொடு கலந்து வருதலால் தென்றலும் தமிழ்த் தென்றல் இடையிற் கிடக்கும் தமிழ் நாட்டில் அறம் பயில்வதன்றி மறம் பயில்வதில்லை; அங்ஙனம் இருக்க தமிழ்த் தென்றலுக்கு மறம் செய்யும் தன்மை எங்கிருந்து வந்தது என நினைக்கின்றார்.

"பிறந்தது எங்கள் பிரான் மலயத்திடைச்
சிறந்த ணைந்தது தெய்வ நீர் நாட்டிடைப்
புறம் பணைத்திடம்; பொங்கழல் வீசிட
மறம் பயின்றது எங்கோ தமிழ் மாருதம்"

என்று சொல்லுகின்றார். இதனைப் படிக்கும் உள்ளம் தமிழையும் தென்றலையும் ஒப்ப எண்ணி உவகை கொள்கிறது. தமிழின் தன்மையையும் மென்மையையும் உணர்ந்து அதன் பால் நன் மதிப்பும் அன்பும் கொள் கிறது.

கம்பரது இராமாயணம் படிப்பவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதில் சிறப்பு மிக்கது அவர்காட்டும் உரையாடல் அத்துணையும் படிப்பவர்க்கு அறிவு விருந்தளிக்கும் அமைதி உடையனவாகும். தான் செய்யும் வேள்விக்குத் துணையாக இராமனைக் கொண்டு செல்லக்கருதும் விசுவாமித்திரன், "யான் செய்யும் வேள்விக்கு இடையூறாக நிருதர் இடை விலக்கா வண்ணம் செருமுகத்து நின்று காத்தியென்று சொல்லி இராமனைத் தருக" என்று கேட்கிறான். நிருத ரென்றும், செருமுகம் என்றும் வரும் சொற்கள் தசரதன் மனத்தைக் கலக்குகின்றன; அவன். இராமன் படையூறறம் இலன; சிறியன்; பணி இதுவேல் யான் வந்து காவல் செய்வேன்" என்று சொல்லுகிறான். அவன் கூறுவதில் ஒரு குற்றமும் இருபபதாகப் படிப்பவர் காணமுடிவதில்லை. அது கேட்டதும் விசுவாமித்திரன் சினம் பொங்குகிறான்.

அதனைக்கம்பர்

"என்றனன் என்றலும் முனிவோடு
எழுந்தனன் மண்படைத்த முனி இறுதிக் காலம்
அன்றென ஆம் என இமையோர்
ஆயிர்த்தனர்
மேல் வெயில் கரந்தது அங்குமிங்கும்

நின்றனவும் திரிந்தனம் நிவந்து கொழுங்
கடைப் புருவம் நெற்றி முற்றச்
சென்றன வந்தது நகையும சிவந்தன கண்
இருண்டன போய்த்திசைக ளெலலாம"

என்று பாடுகின்றார்

அவர் சினம்கண்டு தசரதன் மருளுகிறான். இதனைப்படிப்பவர் விசுவாமித்திரர் செய்வினைத் திறமில்லாதவர்; விரும்பியது கிடைக்காவிடில் சினக்கும் சிறுமதியினர் என்று நினைக்கிறார்கள். அவர் கருத்தை உள்ளவாறு அறிந்து கொள்கிறார் வசிட்டர் "பொறுக்க" என்று முனிவர்க்குச் சொல்லித தசரதனுக்கு அவர் கருத்தைச் சுருங்கிய சொற்களால, "நின்மகனுக்கு உறுதி தரும் நன்னாள் இது; இதனை மறுக்காதே" எனவுரைக்கின்றார். இதனை படிப்பவர் மனம் பெரியோர் சினம் கொள்வது ஓர் உயர்ந்த கருத்துப் பற்றியே என்ற உண்மையை உணர்கிறது

விசுவாமித்திரனுடன் செல்லும் இராமன் வழியில பசுமையின்றி வெப்பம் மிகுந்திருக்கும் பாலை நிலத்தைப் பாரக்கின்றான். தசரதன் ஆளும் கோசலை நாட்டைச் சேர்ந்ததுதானே இந்த நிலப்பகுதி; குறைபடாத அவனது ஆட்சியில் இப்படி ஒரு பகுதி இருப்பது கூடாது என்று இராமன் சொல்லுகின்றான். இதற்குக்காரணம் சிவனுடைய நெற்றி விழியால ,மன்மதன் இவ்விடத்தே எரிக்கப்பட்டான்; அவ்வெப்பத்தால் இப்பகுதி பாலையாய் விட்டது என்று விசுவாமித்திரன் விடை கூறுகிறான்; இராமன் மனவமைதி கொள்ளாமல சிவபிரான் இந்தப்பகுதியைத் தேர்ந்தெடுப்பானேன் என்று கேட்கின்றான்.

"சுழிபடு கங்கையம் தொங்கல் மேனியான்
வழிபட வெந்ததோ வேறுதான் உண்டோ
பழிபடா மன்னவன் படைத்த நாட்டில்
ஊங்கு
அழிவது என் காரணம் அறிஞகூறு
என்றான்."

இதன்கண் உண்மை காண முயலும் இராமனது அறிவு வேட்கை படிப்பவர் உள்ளத்தில் ஆராய்ச்சிப் பணபைத் தூணடுவது காண்கின்றோம்.

இதுகாறும் கண்ட இலக்கியக் காட்சிகளைத் தொகுத்து நோக்குவோமாயின், இலக்கியப் பயிற்சி எடுத்து உரைக்கக்கேட்கும் பிறர்க்கே யன்றி படிக்கின்ற தனக்கும் தன் நல்வாழ்க்கைக்கும் பெரும் பயனாக இருப்பதை ஒவ்வோர ஆண்மகனும பெணமகளும் உணர்வது நலம் என்று சொல்லவேண்டுமோ ?

# சுந்தரத் தமிழ்

திருமதி. சாலினி இளந்திரையன்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களின் பெருமையை ஓரளவாயினும் அறியாத தமிழர் யாரும் இல்லை. அவர்தம் ஆராய்ச்சித் திறனை யும், மனோன்மணீய நாடகத்தின் சிறப்பையும் முற்றும் உணராதவர்கள்கூட அவரது தமிழ்த் தாய் வாழ்த்தில் உள்ளம் கலந்து மகிழ்ந்திருப் பார்கள். ஆயினும், 'அவரது தமிழ்ப்பற்று, தமிழன்னையின் புகழ்பாடும் சொற்பற்று அல்ல, அவளின் வளர்ச்சிக்கு அரியதோர் நூல் யாத்தமைத்த ஆக்கப்பற்று' என்பதை எத் தனைப்பேர் அறிவார்களோ? .

மொழி, நாடு போன்ற பொதுச் சொத்துக் களில் உள்ள குறையை உணர்வோர் பலர்; அதனைப் பிறரும் உணர எடுத்து மொழிவோர் சிலர்: அக்குறையினைப் போக்கும் நன்முயற்சி யில் ஈடுபடுவோரோ மிகமிகச்சிலர் பேராசியர் சுந்தரம்பிள்ளையவர்கள் இதில் கடைசி வகை யைச் சேர்ந்த சிறப்பாளர். முத்தமிழ் என்று நம் முன்னோரும நாமும் போற்றிப் பாராட்டி வருகின்ற நமது மொழியில் நாடக நூல்கள் இல்லையெனும் குறையை அவர் உணர்ந்தார். அவ் உணர்ச்சியை வீண்போக்காமல், அக் குறையை நீக்கும் பணியில் ஈடுபட்டார். அம் முயற்சியின் விளைவாக எழுந்த புதிய நாடகத் தமிழ் இலக்கியமே மனோன்மணீயம்.

## படிக்கும் நாடகம்

நாடகங்கள் நடிக்க ஏற்றவை, படிக்க ஏற்றவை, கேட்க ஏற்றவை என மூன்று வகைப்படும். படிக்கும் நாடகமும் கேட்கும் நாடகமும் பெரிதும் ஒப்புமை உடையனவாயி னும், அவை இரண்டும் தனித் தனி வகை யினவே. இவற்றுள், மனோன்மணீயம் படிக்கும் நாடக வகையைச் சேர்ந்தது தமது நாடக நூலைக் கவிதையில் அமைக்க விரும்பிய சுந்தரர், கவிதை நாடகங்களை நடிப்பது பெரு வழக்காக இல்லாததால், அதைப் படிக்கும் நாடகமாக அமைத்தார் போலும்.

படிக்கும் நாடகத்தில், நாடகத்தின்பொது இயல்புகள் பலவும் இருக்கும்; கூடவே காவிய நயமும் கலந்திருக்கும் ஆழ்ந்த கருத்துக்களை யும் கற்பனைகளையும் மேடை நாடகத்தில் கொண்டு வருவது கடினம். படிக்கும் நாடகமே அவற்றுக்கு ஏற்றது. சுந்தரர் தமது மனோன் மணீயத்தைப் படிக்கும் நாடகமாக அமைத்த தற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கக் கூடும்.

## இரண்டு சிறப்புக்கள்

ஓர் இலக்கியத்துக்குப் பல சிறப்புக்கள் உண்டு. அவைகளில் முக்கியமானவை கற்பனைச் சிறப்பும் காலத்துக்கேற்ற கருத்தின் சிறப்பும் ஆகும். இந்த இரண்டு சிறப்புப் களாலுமே மனோன்மணீயம் உயர்ந்து நிற்கிறது...

தமிழ்த்தாய் வாழ்த்திலேயே தமது கவிதைத் திறத்தைக் காட்டிவிடுகிறார் ஆசிரியர். உலகத்தை ஒரு பெண்ணாகவும், இந்தியக் கண்டத்தை அப்பெண்ணின் முகமாகவும், தெக்கணமும் அதில் சிறந்த திரவிடநல் திரு நாடும்' முறையே அவளது நெற்றியும் திலகமு மாகவும், திரவிடத்திருநாடு முழுவதும் ஊடுருவி நிற்கும் தமிழே அத்திலக வாசனையாகவும் உருவகம் செய்யப்பட்டுள்ள சிறப்பு எண்ணி இன்புறத்தக்கது

அவரது கற்பனை வீச்சை மேலும் விளக்கிக் காட்டுவதாக அமைந்துள்ளது

பின்வரும் பகுதி:

கடையூழி வருந்தனிமை கழிக்க அன்றோ
அம்பலத்துள்
உடையார் உன் வாசகத்தில் ஒருபிரதி
கருதினதே!

'உலகத்தின் கடைசிநாளில் சிவபெருமான் தமது ஊழிக்கூத்தை ஆடுவார்; அக்கூத்தின் வேகச் சுழற்சியில் உலகம் யாவும் அழிந்து

போகும். சிவபெருமான் மட்டும் தன்னந் தனியாக நிற்பார்' என்பது ஒரு கற்பனை... மாணிக்கவாசகர் தம்முடைய திருவாசகப் பாமணிகளை மனப்பாட்டாகவேவைத்திருந்தார், இதயத்தே நின்ற அந்த வாசகத்தை ஏட்டில் ஆக்கிப் பிறருக்கும் பயன்படுத்த விரும்பினர். அம்பலவாணர். ஆகையால் ஒரு மறையவன் உருவில் தோன்றி, மணிவாசகரைப் பாடச் சொல்லி அத்தனைப் பாடல்களையும் திருவாசகம் என்னும் ஒரே ஏடாக்கினர்' என்பது ஒரு கதை. இந்த இரண்டு செய்திகளையும் அடிப் படையாகக் கொண்டு தம் கற்பனையை அமைத் துள்ளார் சுந்தரர்.

ஒருநாள் சிவபெருமான் தமது ஊழிக் கூத்தைப் பற்றி நினைத்தார். கூத்தின் முடிவில் அண்டமெலாம ஒரே சூனிய வெளி யாகப் போவதையும் உணர்ந்தார் அப்போது தாம் மட்டும் தனியாக இருக்க வேண்டிய திருக்குமே என்ற நினைவு அவரையே சற்று உலுக்கியது. தனிமையை மறப்பதற்கு ஏதா வது வேண்டும் என்று நினைத்திருந்தார். உயிர்ப்பூண்டுகள் ஒன்றுமே இராதாகையால் அவர் உள்ளம் உரைத்திரட்டுக்களை எண்ணி யது. வேதம், சாத்திரம் இலக்கண இலக்கியங் கள் ஆகிய ஒவ்வொன்றின் நினைவும் வந்தது; மனம் திருப்தியுறவில்லை. கடைசியில் திரு வாசகம் ஒன்றுதான். அந்தத் தனிமையை மறக்கடிப்பதற்கு ஏற்றதாக அவருக்குத் தோன்றியது. அப்போதுதான், திருவாசகம் இன்னும் எழுத்துருவம் பெறவில்லை என்ற செய்தி அவருக்கு நினைவு வந்தது. உடனே அந்தணர் கோலத்தில் புறப்பட்டு மாணிக்க வாசகரை அடைந்தார். அவர் பாடப்பாட எழுதி ஒரு பிரதி எடுத்துக்கொண்டார்...

கதைகளையும், திருவாசகத்தின்பால் தமக் குள்ள ஈடுபாட்டையும் கலந்துபிசைந்து ஆசிரி யர் ஆக்கியது இந்த அற்புதக் கற்பனை 'மனம் கரைந்து மலம் கெடுககும்' வாசகத்தை, அதே இயல்புகள் உள்ள இறைவன் விரும்பித் தேர்ந்தெடுத்ததும் மிகப் பொருத்தமாக அமைந்துள்ளதல்லவா?

## தாமிரவருணி

குற்றாலப் பொதியமலையும், குமரிமுனையும் தாமிரவருணி ஆறும் தென்பாண்டி நாட்டின் இயற்கைச் செலவங்கள். இவற்றுள், மனோன் மணீயக் கதையோடு தொடர்புபட்டு வருவது தாமிரவருணி ஒன்றே. நிலத்துக்கு அணி செய்யும், நெல்லும் கரும்பும் செழிக்கச் சலசலத்துப் பாயும் இந்த ஆற்றை இவர் சொற்சித்திரம் செய்துள்ள அழகு இவரது வருணனைத் திறத்துக்கே ஓர் எடுத்துக்காட் டாக அமைந்துள்ளது.

அமிழ்தினும் சிறந்த தமிழ்மொழி பிறந்த
மலையம் நின்றிழிந்து, விலை உயர் முத்தும்
வேழ வெண்மருப்பும் வீசிக் காழகில்
சந்தன அடவியும் சாடிவந்து, உயர்
குங்குமம் முறித்துச் சங்கினம் அலறும்
தடம்பணை தவழ்ந்து, மடமயில் நடம்பயில்
வளம்பொழில கடந்து, குளம்பல நிரப்பி,
இருகரை வாரமும் திருமகள் உறையுளாப்
பண்ணும் இப்புண்ணிய தாமிர வர்ணி ..

## நாஞ்சில் நாடு

நன்செய் நாடு என்னும் நாஞ்சில் நாட் டின் வளத்தைப் பழைய கவிதை இலக்கண மரபை ஒட்டியே வருணிக்கிறர் இவர். அந்த இலக்கண வரம்புக்குள்ளேயும் இரண்டு காட்சி கள் கற்பனை வளம் பூத்து நிற்கின்றன: இக் காட்சிகளில் ஒன்று மழை வளத்தை விளக்கு கிறது; மற்றது பயிர் வளத்தை விளக்கு கின்றது

நாஞ்சில் நாட்டின் மழைச் செழிப்பை நினைக்கும்போது நெல்லை நாட்டின் மழை வறட்சி நினைவு வருகிறது. இந்த வறட்சியின் கூருகிய குற்றாலச்சாரலும், அதனைப் பெரிதாக எண்ணி அங்கே திரளும் மனிதக்கூட்டமும் கவிஞரின் நினைவில் தோன்றுகின்றன. இவ் வளவு சிறப்பாக நாம் பாராட்டி மகிழும் இந் தச்சாரல் எது தெரியுமா? நாஞ்சில் நாட்டில மழையைக் கொட்டிய மேகப் பாத்திரத் திலிருந்து சொட்டுச் சொட்டாக வழியும் நீர்த் துளிதான்:

கொண்மூ என்னும் கொள்கலம் கொண்ட
அமிழ்தினை அவ்வயின் கவிழ்த்தபின்,
செல்புழி
வடியும் நீரே நம் மிடிதீர் சாரல்!

இதையே நாம மழை மழை என்று சொல்லி மகிழ்கிறோம். நாஞ்சில் நாட்டில் பெய்யும் பெருமழையைக் கண்டால், நம் உள்ளமே நிலைகொள்ளாது என்று கூறுவது போல இச் செய்தி அமைந்துள்ளது.

அடுத்த காட்சி, செழித்து வளர்ந்து தென்றலில் அசைந்தாடிச் சிலிர்க்கும் செந் நெல் வயல்களைச் சித்திரிக்கிறது :

தூவியால் தம்முடல் நீவிடில் சிரிக்கும்
சிறுமியர் என்ன, அச்செழுநில நங்கை
உழுபடைக் கொழுமுனை தொடுமுனம் கூசி
உடல் குழைந் தெங்கும் உலப்பறு செல்வப்
பயிர்மயிர் சிலிர்த்துப் பல்வளம் நகுவள் !

வளமான பயிர்களில் பூமகளின் புன்னகையைக் காண்கிறது கவிதை நெஞ்சம். இளஞ் சிறுமியரின் நகைச் செல்வத்தையும் நில மகளின் பயிர்ச் செல்வத்தையும் ஒப்பிட்டிருப் பது இனிமையாக உள்ளது.

## காலை எழில்

பொழுது புலர்ந்து வருகிறது. ஒரு குடிசையின் மேல் ஏறிநின்று கூவுகிறது சேவல். சேவலின் இயக்கமும் குரலும் வேறொரு காட்சியைக் கவிஞர் முன் கொண்டு வந்து நிறுத்துகின்றன :

சூட்டுடைச் சேவல், சுரைக்கொடி
படர்ந்த அவ்
வீட்டு உச்சியின் மேல் வீம்பாய்
நடந்து, பின்
இருசிறை அடித்து நெடுவாய் அங்காந்து
ஒருமுறை கூவி உழையுளார் புகழ
உற்று நோக்குவர்போல் சுற்றும்
நோக்குதல்..

காலைக் காட்சியிலே ஒன்று மேடைப்பேச்சா ளர் சிலரின் வீண்பெருமையை நயமாக இடித் துரைக்கிறார் ஆசிரியர். வாய்வீரம் முழங்கி விட்டு அல்லது நகைச்சுவையாக ஏதாவது சொல்லிவிட்டு, கூட்டத்தில் இருப்போர் கைதட்டி ஆரவாரம் செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கும் பேச்சாளர் பலரை நாம அரசியல மேடைகளில் பார்க்கிறோம். இவர் களைப் போலவே, ஒருமுறை கூவிவிட்டு, சுற்றுமுற்றும் பார்த்ததாம் அந்தச் சேவல்.

அதே காலைப்பொழுதில் மற்றொரு காட்சி யும் கிடைக்கின்றது. காக்கைகள், 'காகா' என்றுகரைந்துகொண்டு அங்குமிங்கும் பறந்து திரிகின்றன இந்த இடததில், 'காகா' எனறு கரையும் பறவைககுக காககா என்றே பெயர் சூட்டிய தமிழின் பெருமையைத் தம் கற்பனைத் திறத்தால் உயர்த்துகிறார் ஆசிரியர் :

இருட்பகை இரவி, இருள்எனத் தமையும்
கருதிக் காய்வனோ என்றுஅயிர்த்து,
இருசிறைக்
கையால் மார்பில் புடைத்துக் கலங்கி
மெய்யாம் தம்பெயர் விளம்பி வாயசம்
பதறி எத்திசையிலும் சிதறி ஓடும் .

இருளின் நிறம் கருப்பு; காக்கையும் கருப்பு நிறம். கதிரவன் எழுந்து இருளைத் துரத்திக் கொண்டு வருகிறான். நிற ஒற்றுமையால் தங்களையும் இருள் என்று கதிர்க்கோமான் எண்ணிவிடுவனோ என்று எண்ணுகின்றன காக்கைகள். அந்த நடுக்கத்தில் ஒவ்வொரு காக்கையும் "காகா" என்று கரைகிறது. அஞ்சிப்பயந்த காக்கை, "கருப்பாயிருப்பதனால் என்னையும் இருள் என்று எண்ணிவிட்டீர் களா ? இல்லை இல்லை; நான் இருளில்லை. நான்தான் காக்கா" என்று தன் பெயரைச் சொல்லித் தப்பி ஓடுவது போல இருக்கிறதாம் இது.

## கருத்து நலம்

தங்கள் தமிழின் பழம்பெருமையை எடுத துப்பேசுவதால் தங்களுக்குப் பெருமை வந்து விடும் என்று எண்ணி வருகின்ற தமிழர் பலர்; மிகப்பலர் ! இந்தப் போக்கைக் குத்தீட்டிக் கொண்டு தாக்கி உண்மையை உணர்த்துகிறார் பேராசிரியர் :

ஆடையின் சிறப்பெலாம் அணிவோர்
சிறப்பே;
பாடையின் சிறப்பெலாம் பயில்வோர்
சிறப்பே!

ஒரு மொழிக்குரியவர்கள் உயர்ந்திருந்தால் அவர்களின் மொழியும் உயர்வு பெறுகிறது. இல்லை எனில் எத்தனை சிறப்புடைய மொழியாயினும் அதனை ஏறிட்டுப் பார்ப்பார் இரார். மொழியாளர் உயர்வே அவர்தம் மொழிக்கு உயர்வளிக்கும் என்பது உலகறிந்த உண்மை. உணர்ச்சி வேகத்தில் இதனை மறந்து செயல்படுவோர்க்கு, இது நலலதோர் அறிவுரை 19ம் நூற்றாண்டுத் தமிழர்கள் தங்கள் தமிழின் பழம்பெருமையே தங்களுக்குப் பெருமை என்று சோம்பிக் கிடந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நாட்டு அபிமானம்

உணர்ச்சி பொங்கப பொங்கத் தேசீயப் பாடல்களைப் பாடிக்குவித்தவர் பாரதியார். பாரதியாருக்கு முந்திய சுந்தரர், தேசப் பற்றைப்பற்றி குறிப்பிடும் ஓர் இடம், பாரதியாருக்கே அடி எடுத்துக் கொடுததது போலக் காண்கிறது :

அந்தணர் வளர்க்கும் செந்தழல் தன்னிலும்
நாட்டு அபிமானம் உள்மூட்டிய சினத்தீ
அன்றே வானோர்க்கு என்றுமே உவப்பு!

அந்தணர் செய்யும் வேள்வியே வானோரை மகிழ்விக்கும் என்பது காலங்காலமாக இந்த நாட்டில் நிலவிவரும் நம்பிக்கை. அதனையும் விட வானோர்க்கு உவகை ஊட்டுவது நாட்டுப் பற்றே என்று அழுத்தமாக இவர் கூறுவது.

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின்,
ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று

என்று வள்ளுவர் அடித்துக் கூறுவதை ஒத்துள்ளது.

## இம்மை இலக்கு

உலகிலே கண்டு, கேட்டு, சிந்தித்து உணரும் ஒவ்வொன்றையும் அலசி ஆராய்ந்து தம் கருத்தைத் தெரிவிப்பது ஒவ்வொரு மனிதர்க்கும் இயல்பு. தமது நாடகப் பாத்திரங்கள் மூலம் ஒவ்வொன்றைப் பற்றியும் பலப்பல விளக்கங்கள் கொடுக்கிறார், நமது பேராசிரியர்:

எவ்வினை யோர்க்கும் இம்மையில் தன்மை
இயக்குதற்கு இன்பம்பயக்கும் ஓர்இலக்கு
வேண்டும்; உயிரகு அது தூண்டுகோல்
போலாம்

மனித நாகரிகத்தின் ஒரு காலத்தில் மறுமையைப் பற்றிய சிந்தனை தோன்றி வளர்ந்தது இனபமாயினும் துன்பமாயினும் (இம்மை மறுமை என்னும்) இவ்விரண்டு இடங்களிலும் அவை தொடர்புபடும் என்ற நம்பிக்கை வலுத்தது. இம்மையில் செய்த வினையின் பயன் மறுமையில் நிச்சயமாக விளையும் என்ற கருத்தும் வளர்ந்தது. நமது ஆசிரியர் இக்கருத்தை முழுவதுமாக ஏற்றுக் கொள்வது போலத் தோன்றவில்லை. எட்டாத இந்த இலக்கினால் மனிதனுககு வாழ்விலே ஊக்கம் ஏற்படுவதில்லை இதை விளக்கவே, "இம்மையில் தம்மை இயக்குதற்கு இன்பம் தரும் ஓர் இலக்கு வேண்டும்" என்று குறிப்பிடுகிறார்.

## போலிகள்

எந்த ஓர் அமைப்பும் கொள்கையும் தோன்றும்போது தூயதாகவே தோன்றுகிறது நாளடைவில் மனிதருக்கு இயலபாக உள்ள குறைகள் அவற்றிலும் புகுந்து அவற்றைக் கறைப்படுத்தி விடுகின்றன. மனிதரின் விழிப்பின்மை அதற்குத் துணை நிற்கிறது. இவைபோலவே தானம் தருமம் என்பவைகளும் போலிகளாகி உள்ள நிலையை ஓரிடத்தில குறிததுள்ளார் பேராசிரியர்:

தருமம் தானம் என்று உலகறியும்
கருமம் அனைத்தும் செய்பவன் கருத்தைக்
காணில் நாணமாம். அவரவா தமக்கா
எண்ணிய எண்ணம எய்துவான் பலவும்
பணணுவார், புண்ணியம்போல! எல்லாம்
தந்நயங் கருதியன்றித் தமைப்போல்
பின்னொருவனை எண்ணிப் பேணுவர்
உளரோ?

இம்மையில் செய்தது மறுமைக்கு உதவும் என்ற எண்ணத்தில் அவர்கள் செய்வது, "அறவிலை வாணிகம்" ஆகும் என்று புறநானூறு கண்டிக்கிறது. "மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று" என்று வள்ளுவம் விதிக்கிறது. ஆயினும் சமூகத்தில் தங்கள் சொந்த நலன் கருதியே பலர் தான மும் தருமமும் செய்யும் நிலை வளர்ந்துதான் வருகிறது. மேன்மையான செயலின் நோக்கம் இவ்வாறு தாழ்ந்து விட்டதை எண்ணி வருந்துகிறது கவிதை நெஞ்சம்.

## பெண்மை

மங்கையர் குழந்தைப்பருவம் மாறிப் பெண்மைப்பருவம் அடையும் போது ஏற்படும் மன இயல் மாறுதலைப் பல புலவர்கள் விளக்க முயன்றுள்ளனர். உலா என்னும் இலக்கிய வகை இதில் அதிகக் கவனம் செலுத்தியுள்ளது. உள்ளத்துள்ளே உள்ளதை எல்லாம் சொல்லில் அள்ளி வீசிவிடுவது குழந்தைப் பருவத்தின் இயல்பு. உள்ளத்தில் தோன்றும் ஒவ்வொரு நினைவையும் அலசி அலசிப்பார்த்து அதன் பெரும்பகுதியை வெளியே சொல்லாமல் மறைப்பது பெண்மைப் பருவம் பெண்மைப் பருவ இதயத்துக்கும் பேச்சுக்கும் உள்ள தொடர்பை,

குழவிப் பருவம் நழுவுங் காலை
களிமிகு கன்னியர் உளமும் வாக்கும்
புளியம் பழமும் தோடும் போலாம்!

என்று விளக்குகிறார் கவிஞர். உள்ளமும் உரையும் ஒட்டவில்லையாம் இப்பருவத்துப் பெண் தனது உள்ளத்திருப்பதை நேர்முகமாகப் பேசமாட்டாள் என்பது இதன் கருத்து.

## காதல்

இவரது காலத்திலேயே, பெண்மையைப் பழிக்கும் கொள்கைக்குத் தீவிரமான எதிர்ப்புக் கிளம்பிவிட்டது. கவிதையும உரைநடையும் பெண்ணின் பெருமை பேசத் தொடங்கி விட்டன. பாரதியார் கவிதையிலே பேருருக் கொண்ட பெண்மைப்போற்றல் சுந்தரர் கவிதையிலேயே நன்ருக உருப்பெற்றுள்ளது.

மனோன்மணீயத்தில் வரும் வாணி ஒரு வைரக்கனி, அவள் காதலில் கனிந்தவள். காதல் எதிர்ப்பாளர்க்கு வைரம் போன்ற எதிரி. காதலின் இயல்பை விளக்கும் அவளது சொற்கள் வைரமேறிய நெஞ்சின் ஒளிவீச்சுப் போன்றவை.

இகத்துள சுகந்துக்கு அளவு கோலாகி,
பரத்துள சுகத்தை வரித்த சித்திரமாய்,
இல்லறம் என்பதன் நல்லுயிரே யாய்
நின்ற காதலின் நிலைமை, நினையில்.
இரும்பும் காந்தமும் பொருந்தும்
தன்மைபோல்
இருவர் சிந்தையும் இயல்பாய் உருகி
ஒன்றும் தன்மை அன்றி, ஒருவரால்
ஆக்கப்படும் பொருள் ஆகுமோ ?

காதலைத் துறக்குமாறு அறிவுரை சொன்னவர்களை நோக்கி இப்படிக் கேட்கிருள் வாணி. பெற்ருேரும் பெரியோரும் பார்த்துச் செய்து வைக்கும திருமணத்தை ஏற்காமல் தம் மக்கள் காதல் காதல் என்று எழுகின்றனரே என்று பெற்ருேர் அழுகின்றனர்; 'நம் காதலுக்கு நம் பெற்ருேரே குறுக்கே நிற்கின்றனரே! என்று பிள்ளைகள் அழுகின்றனர். இந்த இரண்டு அழுகைகளையும் சீர்தூக்கிப் பார்த்துத் தீர்ப்பு வழங்குகிருர் ஆசிரியர்

கிழவரின் அழுகை சிலவ ருடம்தான்;
நெடுநாள் நிற்கும் இளையவர் அழுகை!

இதைவிட நயமாகவும் அழுத்தமாகவும் காதலின் கட்சியை ஒருவர் எடுத்துரைக்க முடியுமா என்பது ஐயமே ..

## மனைமாட்சி

மங்கையர் மாட்சியை இவர் நீள நீள எடுத்துரைத்துள்ளார். உலக வாழ்க்கை ஒரு பெரிய கடல். அதில் ஆடவர் நெஞ்சம் ஒரு மரக்கலம். அவர்தம் துணைவியராகிய மங்கையரே அம்மரக்கலத்துக்கு நங்கூரமும், சுக்கானும் ஆவர்:

மாசிலா உலகத்து, இவ்உயிர் வாழ்க்கை
ஆம்பெருங்கடலுள் போம்மரக் கலனும்

ஆடவர் நெஞ்சம், அறத்துறை அகன்று,
நீள் திசைச் சுழற்றும் நிலையிலாக் காற்றும
நிண்ணய மற்ற எண்ணம் இயக்கச்
சென்றுழிச் சென்று, நன்றறி வினறி
அலையா வண்ணம், அறத்துறைக் குடாவில்,
நிலைபெற நிறுததும் நஙகூரமாய்,–பின்னும்,
செய்வினை முயற்சியில் பொய்வகைப்
புன்னெறிக்கு
எற்றுண்டு அகனறு பற்றுஒன்று இன்றி
ஆசையாம் திசைதொறும் அலைந்து திரிந்து
கெடாவ(ண்)ணம் கடாவி, கெழுமிய
அன்புசேர்
அறப்பிடி கடைப்பிடியாகக் காட்டிச்
சிறப்புயர் சுகத்துறை சேர்ந்து சுக்காணுய்
நின்றது மங்கையர் நிலைமை .

ஆண்மையால் ஒடுககப்பட்டு, ஒதுக்கப்பட்டுக் கிடந்த பெண்மைக்குப் பரிந்து பேச வருகின்ற கவி உள்ளம், ஆண்மையை "இறப்பச் சிறிய" தாகவும் பெணமையைக் "கழியப்பெரிய" தாக வும் கற்பிப்பது இயல்புதான் அல்லவா ?

### இல்லறமே நல்லறம்

தத்துவப் பேராசிரியராக விளங்கிய இவர் இல்லறம் என்னும் அமைப்பில் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளார். அழியாத பேரின் பத்துக்கு மனிதனைப் பக்குவம் செய்யும் பள்ளிக்கூடமே குடும்பவாழ்வு என்பது இவர் கருத்து காதலை விளக்கப் புகுந்த இடத்தி லேயே இகம், பரம் என்பவற்ருேடு காதலைத் தொடாபுபடுத்திக காட்டினுர். இங்கே,

மெள்ள மெள்ளத் தன் உள்ளம் விரித்து
பொறையும் சாந்தியும் படிப்படி புகட்டி,
சிறிது சிறிதுதன் சித்தம் தெளிந்து,
தானெனும் நினைப்பும் தனக்கெனும
இச்சையும்
ஒய்வுறச் செய்து மற்ருென்ருய் நின்ற
எங்கும் நிறைந்த பேரின்ப வெள்ளம்
முங்கி, அதனுள் மூழ்கிட யாரையும்
பக்குவம் செய்யும்நற் பள்ளிச் சாலைஇவ்
இல்லறம்

என்று தெளிவுபடுத்துகின்ருர். இறைமை நினைவையும் இல்வாழ்வையும் ஒன்ருக்கிக் காணும் இவரது இயல்பு எண்ணி மகிழ்தற் குரியது. அந்நினைவு ஓங்குவதற்கு, அன்பும், அருளும் பண்புமாக வளரும் இல்வாழ்வே துணைசெய்கிறது என்பது இவர் கொள்கை.

### தவம் என்பது யாது ?

இந்தக் கொள்கையின் அடிப்படையில் தான் தவத்தையும் கணிக்கிருர் இவர். 'உற்ருரை யான் வேண்டேன்; ஊர் வேண் டேன் பேர் வேண்டேன்' என்று சமூகத்தை விட்டு விலகிச்செல்லும் நெறியை இவர் தவ நெறியாக ஏற்கவில்லை.

அடுத்தவர் துயர்கெடுத்து அளித்தலே
யான் இங்கு
எடுத்தநல் தவத்தின் இலக்கணம்

என்று மனேன்மணி மூலமாகத் தவத்தின் இலக்கணம் குறித்த ஆசிரியர், தவ முனிவரின் இலக்கணத்தையும் அவள் மூலமே விளக்குகிருர் :

தந்தைதாய் ஆதியாய் வந்ததன் குடும்ப
பந்த பாசத்தினைப் பேணித் தனது
சொந்தமாம் இச்சைகள் துறந்து,
மற்றவர்க்கு
எந்த நாளும் சுகம் இயைந்திடக் கடமையில்
முந்து கின்றவரே முதல்தவ முனிவர்

இக்கருத்தை வெளியிடும் மனேன்மணி, முத லில், அறிவும் அனுபவமும் பெருத நிலையில்,

...... . என்கருத்து உண்மையில்
வனத்தில் எய்தி வற்கலை புனைந்து
மனத்தை அடக்கி மாதவம் செயற்கே

என்று கூறியவள் . அந்த மயக்க நிலையை மாற்றி, அவளே, மேலே குறிப்பிட்ட உண்மை களை உணருமாறு செய்த நிகழ்ச்சிகளின் கோவையே மனேன்மணீயம். இந்த நாடகத் துள் வரும் சுந்தரமுனிவர் என்னும் உயர்ந்த பண்புப் பாத்திரமும் மனேன்மணி சொல்லும் முதல் தவமுனிவருக்குரிய இலக்கணங் களுடனேயே படைக்கப்பட்டுள்ளது.

## ஒள்ளியது

இத்தனைச் சிறப்புக்களையும் கொண்டு திகழும் மனோன்மணீயம், பிற்காலத்தமிழ் நாடகத் துறையில் ஒரு புதிய முதல் முயற்சியே என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன், தமிழ் நாட்டின் வரலாற்றுக்கதை போல அமைந்து, நூற்றுக்கு நூறு தமிழ்க்கதை மாந்தர்களையே கொண்டு நடைபெறும் இந்த நூல், ஓர் ஆங்கில நூலின் தழுவல் என்பதை அறியும் போது யாருக்கும் வியப்பு ஏற்படாமல் போகாது. ஆங்கிலக் கதைக் கருவை நெஞ்சில் வாங்கி, அதற்குத் தமிழ் உருவும் தமிழ்க் கருத்து நிறைவும் கொடுத்துத் தமிழ் நாடகமாக வெளிப்படுத்துவதில் முழு வெற்றி கண்டுள்ளார் இப்பேராசிரியர்.

மனோன்மணீயம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியது. எனவே இதில் வடசொற்கள் மிகுதி. இதன் கவிதை நடையும் சற்றுக் கடினமான நடையே. ஆயினும் கற்பனை வளம், காலத்துக்கேற்ற கருத்துக்கள், கதை அமைப்பு ஆகியவற்றால், இது தமிழ் இலக்கியத்தில் தனக்கென்று ஓர் இடம் பெற்றே உள்ளது. "வெள்ளியது" என்று ஆசிரியர் அடக்கமாக இதைக் குறிப்பிட்டாலும், படித்து முடித்தபின் "இது வெள்ளியதன்று, ஒள்ளியது!" என்று யாவரும் போற்றுவர் என்பதில் ஐயமில்லை.



# மாதர் அணிகலன்

*புலவர்*, **பி. விருத்தாசலம்,** பி ஏ.,
பேராசிரியர், கரநதைப புலவா கலலூரி.

மானைப் பழித்த விழியும், மயில் போன்ற சாயலும், தேனைப்பழித்த மொழியும் பெற்றுப் பேரழகு ஓவியமாய்ப் பொலிந்து நிற்கும் பெண்டிரும் தம் அழகுக்கு அழகு செய்ய அணிகலன்கள் பலவற்றை அணிவது இயல்பு. அணியிழையார், ஆயிழையார், சேயிழையார் எனவரும் இலக்கியத்தொடர்கள் ஆரணங்குகளுக்கும் சீரணிகளுக்கும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து இருந்துவரும் தொல்பழந் தொடர்பை விளக்கும் வளமான சான்றுகள் ஆகும் ஒப்பனை செய்யும் தொழிலில் துறைபோயவராய்த் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல், இன்று குன்றுபோல் புகழ் பெற்று விளங்குவோரும் கூடக் கண்டும் கேட்டும் அறியாத கவின்மிகு அணிகலன்கள் பலவற்றின் பெயர்களை இலக்கியங்களும் கல்வெட்டுக்களும் நமக்கு இனிதெடுத்து இயம்புகின்றன மண்சுவர்களைகொண்ட கூரைவீடு மழைநீர் ஒழுகி எழில் சிதைந்து காணப்படுமானால் மேலும் மண்ணைப்பூசி வீட்டை அழகுபடுத்த வேண்டும் பெண் அழகு குறைந்து தோற்றந் தந்தால் அவளுக்குப் பொன்னால் செய்த நகைபோட்டுப் பொலிவுபடுத்த வேண்டும். "மண்ணுக்கு மண்ணையிடு பெண்ணுக்குப் பொன்னையிடு" என்பது பழமொழி.

பெண்களுக்கு இயற்கை அணிகலனாகிய புன்னகை இருக்கச்செயற்கை அணிகலனாகிய பொன்னகைஎதற்கு? என்பது தமிழகக் கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் கேள்வி. "நறுமலர்க்கோதையே! மறுவில்லாத மங்கல அணியே உனக்குப் போதுமானதாய் இருக்கப் பிறபிற அணிகலன்களை ஒப்பனை மகளிர் உனக்குப் பூட்டியது ஏன்? என்பது கோவலன் கண்ணகியிடம் கேட்ட வினா. தம்மிடம் உள்ள பொருளுக்காக உள்ளம் மகிழாது, இல்லாதபொருளுக்காக ஏங்கிவாடும் மக்கள் இனத்தின் ஒருபகுதியினரான பெண்டிர், கைபுனைந்து இயற்றாக் கவின்பெரும் வனப்பினைக் கொண்ட தம்முடைய மான்போன்ற நெடுங்கண்ணையும், நாணத்தையுமே தமக்குப் பேரணிகலன்களாகக் கொண்டிருக்கும்போது அவற்றுக்கு மகிழாது பொன்னிழை ஓடிய கோடி உடுத்துக் கோடி நகை பூண்டு புதிய கோலங்கொள்ள விரும்புவதும், அவ்வாறு கோலங்கொள்ள இயலாதபோது தம்முடைய கொவ்வைச் செவ்வாயின் குமிண் சிரிப்பை இழந்து வருந்துவதும் கண்ட வள்ளுவர் "பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்கு அணியெவனோ ஏதில தந்து" என்று வினா எழுப்புவர். தந்தையும் காதலரும் தம் உழைப்பால் செய்து தந்த செயற்கை அணிகலன்களைவிடப் பெண்கள் பிறப்பிலேயே பெற்றுள்ள புன்னகையும், வடிவழகும், மானோக்கும், நாணமும் மேலானவை என்பதை வலியுறுத்தக் கருதி நாவலரும், இளங்கோவும், வள்ளுவரும் கேட்கும் கேள்விகள் நூற்றுக்கு நூறுபங்கும் ஒப்புக்கொள்ளத் தக்க பொருள் பொதிந்த கேள்விகளாகும். இவை இருக்க,

'பேதைமை என்பது பெண்களுக்குப் பேரழகு தரும் ஓர் அணிகலன் ஆகும் என்னும் பொருளில் "பேதைமை என்பது மாதர்க்கு அணிகலன்" என்னும் பழமொழி ஒன்று நாட்டில்சொல்லப்பட்டு வருகிறது உலகத்துச் சான்றோர் பலரும் பல்லாண்டுகளாகத் தாமே பட்டறிந்தும் கண்டறிந்தும் வழுவின்றிக் கூறிய விழுமிய கருத்துக்களே பழமொழிகளாக நாட்டில்உலவிவருகின்றன. எனினும், மேலே எடுத்துக்காட்டிய பேதைமை என்பது மாதர்க் கணிகலன் என்னும பழமொழி பொருள் நிறைந்த வாய்மொழியா என்பதில் ஐயம ஏற்படுகின்றது. பெண்டிரும் கல்வி கற்று நிறைந்த அறிவு பெற்று ஆடவரோடு சரிநிகர் சமானமான வாழ்வு நடத்தக்கூடாது. பெண டிர் என்றென்றும் அறிவிலிகளாய், ஆணினத்

தின் அடிமைகளாய் இருக்க வேண்டும் என்று கருதிய எத்தர் கூட்டம் பொருளற்ற இம்மூட மொழியினைப் பொருள் நிறைந்த பழமொழி போல் நாட்டில் பரப்பி விட்டதோ என்றுகூட ஐயப்பாடு தோன்றுகிறது. எனவே, இப் பழமொழி பற்றி ஆழ்ந்து எண்ண வேண்டுவது நம் கடமையாகிறது.

ஒல்காப் புலமைத் தொல்காப்பியர் தம் முடைய பெருநூலில் பெண்டிர்க்குரிய பண்பு களைக் கூறும்போது

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற் குரிய வென்ப"

என்று கூறுவர். இக்களவியல் நூற்பாவுக்கு அச்சமும், நாணும், பேதைமையும் இம்மூன்றும் நாடோறும் முந்துறுதல் பெண்டிர்க்கு இயல்பு" என்று இளம்பூரணர் உரையெழுதுவர். எனவே, மடனும் பேதைமையும் ஒன்று என்பது இளம்பூரணர் கருத்து என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால், இளம்பூரணரே

"எள்ளல் இளமை பேதைமை மடனென்று
உள்ளப் பட்ட நகை நான் கென்ப"

என்னும் மெய்ப்பாட்டியல் நூற்பாவில் மடம் என்பது பொருண்மை அறியாது திரியக் கோடல்" என்றும், "பேதைமை என்பது கேட்டதனை உய்த்துணராது மெய்யாகக் கோடல்" என்றும் எழுதுவர். மேலும் 'ஒப்பும் உருவும், என்று தொடங்கும் பொருளியல் நூற்பாவில் 'மடன் என்பது உய்த்துணர்ந்து நோக்காது கேட்டவாற்றான் உணரும உணர்ச்சி" என்பர். ஆனால், நச்சினார்க் கினியர் "மடன் என்பது செவிலியர் கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை" என்றும், "பேதைமையாவது செய்யத்தகுவது அறியாமை" என்றும் விளக்கம் தருவர். ஏறத்தாழ நச்சினார்க்கினியர் போலவே பேராசிரியரும் "மடன் என்பது பெரும்பான்மையும் கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை" என்றும், "பேதைமை யாவது அறிவின்மை" என்றும் கூறுவர். தெளிவாகச் சொன்னால் மடன், பேதைமை ஆகிய இரு சொற்களுக்கும் உரையாசிரியர்கள் தரும் விளக்கங்களைப் பார்க்கும்போது செய்யத் தகுவன அறியாமையும், பிறர் சொல்லுவன வற்றை ஆராயாது ஏற்றுக்கொள்ளுதலும் மகளிர் இயல்பு எனத் தொல்காப்பிய உரை யாசிரியர்கள் கருதுகின்றனர் என்பது தெரி கிறது. உரையாசிரியர்கள் உண்மையிலேயே தொல்காப்பியர் கருத்தைத் தெளிவுபடுத்தி யிருக்கின்றனரா? இல்லை, தம்முடைய பிற் போக்குக் கருத்துக்களைத் தொல்காப்பியர்மேல் ஏற்றிக் கூறுகின்றனரா? எண்ணிப் பார்ப் போம்.

தொல்காப்பியர், களவியலில், அகத் துறைச் செய்திகளை அழகுபடக் கூறும்போது தலைவியும் தலைவனோடு ஒத்த சிறப்புடைய வளாக இருக்கவேண்டும் என்னுங் கருத்தை "ஒத்த கிழவனும் கிழத்தியுங் காண்ப" என் னும் தொடரால் கூறுவர் அவரே, "பிறப்பே குடிமை" என்று தொடங்கும் மெய்ப் பாட்டியல் 27 ஆம் நூற்பாவில் தலைவனும் தலைவியும் ஒத்த உணர்வுடையவர்களாக — ஒத்த அறிவுடையவர்களாக இருக்க வேண் டும் என்னும் கருத்தைத் திட்டவட்டமாகக் கூறுவர். தலைவியும் தோழியும் தலைவனிடமும் தம் பெற்றோரிடமும் பேசுவதாக எழுதப் பட்டுள்ள அகத்துறைப் பாடல்கள் அனைத் திலும், தலைவனைப் போலவே — ஏன் — தலைவனை விட ஒருபடி மிகுதியாகவே நுண்ணறி வுடையராக அவர்கள் காணப்படுகின்றனரே யன்றி அறியா மாககளாகக் காணப்படவில்லை. எனவே, செய்யத் தகுவது அறியாமையாகிய பேதைமை மாதர்கு இயல்பு என்னுங் கருத் தைச் சிறிதும் ஏற்பதற்கில்லை. பொருள்களின் உண்மைத் தன்மை உணராது திரியக்கோட லாகிய அறிவின்மை பெண்களுக்கு உண்டு என்பதற்கு இலக்கியச் சான்று எதுவும இல்லை

பிறர் கூறுவனவற்றை ஆராய்ந்து பா ராது மெய்யாக ஏற்றுக்கொளளும் பண்பு பெண்களிடம் உண்டா? சோம குண்டம, சூரிய குண்டம் ஆகிய பொய்கைகளில் நீராடிக் காம வேள் கோட்டம் தொழுதார் கணவரோடு

பிரிவின்றி வாழ்வர்; ஆதலால், நாமும் ஒரு நாள் துறை மூழ்கித் தெய்வந் தொழுவோம்" என்ற தேவந்தி கூற்றைக் கண்ணகி ஆராயாது ஏற்றுக்கொண்டாளா? "பீடு அன்று" என்று மறுத்துரைத்தாளே! தலைவன் ஒருவனோடு தலைவிக்குக் காதல் உண்டாகியிருப்பதைச் சிலகுறிப்புக்களால் அறிந்த தோழி, அதனை முற்றும் அறிய வேண்டித் தன் தலைவியைப் பார்த்து, "அன்னையே! நாம் முன்போல இன்றும் பிறை தொழுவோம் வா" என்று கூறியபோது, அதற்குத் தலைவி மறுத்துரைப்பதாக அகத்துறை நூல்கள் கூறவில்லையா? பரத்தையின் இல்லில் சென்று தங்கி வந்த தலைமகன் தலைவியிடம் "புனலாடி வந்தேன்; குதிரை ஏற்றம் பழகி வந்தேன்" என்று பொய்கூறும்போது, அதனை மெய்யாகக் கோடாது தலைவி மறுத்துரைப்பதைக் கலித்தொகையில் மருதத்திணைச் செய்யுள்கள் நமக்குப் புலப்படுத்தவில்லையா? இவற்றால் பிறர் கூறு தலை ஆராயாது ஏற்றுக்கொள்ளுதலாகிய கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை பெண்களிடம் இல்லை என்பது புலனாகின்றது. அப்படியானால், பெணகளுக்கு மடன் உண்டு என்று தொல்காப்பியர் கூறியதற்கு உரையாசிரியர் இதுவரை கூறாத வேறு பொருள் இருக்கவேண்டும் அது யாது ?

காகத்து இருகண்ணிற்கும மணிஒன்றே யிருப்பதுபோல இருவர் உடமபிலும் உயிர் ஒன்றேயுள்ளது; அதனால், தோகைக்கும் தோன்றலுக்கும் இனப துன்பங்கள் ஒன்றாகவே வரும் என்று கண்டவர் கூறத்தக்க அளவுக்கு ஒருவரிடத்து ஒருவர் மிகுந்த அன்பு கொண்டுள்ள தலைவன் தலைவியரே அகத்துறை இலக்கியங்களுள் பேசப்படுகின்றனர் தொல்காப்பியர் கற்றுத் துறைபோகிய தலைவன் ஒருவன் தன் தலைவியைப பார்த்து, "கண்ணே! நீ கையால் தொட்டது ஆலகால நஞ்சாயினும‌ எனக்கு அமிர்தமபோலச் சுவைக்கும்" என்று கூறித் தலைவி சமைதத உணவினை உணபதாக

"ஏனது சுவைப்பினும் நீ கை தொட்டது
வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கென

அடிசிலும் பூவும் தொடுதற் கண்ணும்
(கற்பியல் 5)

என்னும் அடிகளில் கூறுவர். தலைவி கசப்பு மிகுந்த வேப்பங்காயைத் தரினும் தலைவன் அதனை வெல்லக்கட்டி என்று சொல்லி உண்பதை "வேமபின் பைங்காய் என் தோழி தரினே தேம்பூங்கட்டி என்றனிர்" என்னும் குறுந்தொகைச் செய்யுள் அடிகள் கூறுகின்றன "பனிமொழி வாலெயிறு ஊறியநீர் பாலொடு தேன் கலந்தாற் போன்றது" எனவும், "நான் விரும்பும் தலைவி குடியிருக்க வேறு நல்ல இடமில்லை ; ஆதலின் என் கண்ணின் கருமணிப் பாவையே ! நீ எங்காவது போய் விடு" எனவும் தலைவன் ஒருவன் கூறுவதாக வள்ளுவர் சொல்லுவர்.

தலைவனைப் போலவே தலைவியும் "சூடான வெந்நீரும் பாலும் அருந்தின அவை என் நெஞ்சில் குடியிருக்கும் காதலரைச் சுட்டுவிடும் ; ஆதலின், சூடான உணவு உட்கொள்ள மாட்டேன்" என்றும், "என் காதலர் என் கண்ணில் குடியிருக்கிறார். கண்ணுக்கு மையெழுத இரண்டு கணணிமைகளையும் மூடினால், காதலர் கண்ணிமைகளுக்குள் சிறைப்பட்டு மறைந்துபோய் விடுவார். ஆதலின், நான் கண்ணுககு மையெழுத மாட்டேன்" என்றும் கூறுவதாகத் திருக்குறள் கூறும.

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து
கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து

பொருளீட்டுவதற்காகத் தன்னைப் பிரிந்து சென்ற தலைவன் குறித்த பருவங்கடந்து நெடுநாள் ஆகியும திரும்பி வாராததுகண்டு தலைவி நெஞ்சுடைந்தாள். அவளுக்குத் தோழி "தலைவர் நிலத்தைத் தோண்டிக்கொண்டு உள்ளே சென்று மறைந்திருக்க மாட்டார், வானத்தில் ஏறி வேறு கோள்களுக்குக் குடிபோயிருக்க மாட்டார். பெரிய கடலை வண்டியில் ஏறிக்கடந்து சென்றிருக்கமாட்டார் அதனால், நாடு நாடாக, ஊர் ஊராக தெருத் தெருவாக, வீடுவீடாகத் தேடிப் பார்த்தால்

நம் காதலர் கிடைக்காது போய்விடுவரோ? ஆதலால், அவரை நாம் தேடிப்பார்ப்போம்" என்று ஆறுதல் கூறினள்

"நிலந்தொட்டுப் புகாஅர்; வானம் ஏரூர்;
விலங்கிரும் முந்நீர் காலிற் செல்லார்
நாட்டின் நாட்டின், ஊரின் ஊரின்
குடிமுறை குடிமுறை தேரின்
கெடுநரும் உளரோ நங் காதலோரே"
(குறுந்தொகை-130

அதுகேட்டுத் தெளிந்த தலைவி துணி வோடு தலைவனைத் தேடிச் சென்றாள்; பகற் பொழுதெல்லாம் தேடினள், பொழுது போயிற்று. ஞாயிறு மேற்குமலையில் மறை யத் தொடங்கிற்று. ஞாயிறு மறைந்து இரவு வந்துவிட்டால் தலைவனைத்தேட முடியாதே என்று கருதிய தலைவி, மறைந்து கொண்டிருக் கும் ஞாயிற்றைப்பார்த்து, குற்றமற்ற ஞாயிறே! நீ இப்போது மலையில் சென்று மறையப் போகிறாய். உலகிற்குப் பகற்காலத்தைத் தரக் கடலிடையே நாளைக் காலையில்தான் கீழ்த் திசையில் தோன்றுவாய் எனவே, நாளைக் காலை வரையிலும் உன் ஒளிக்கதிர்கள் சில வற்றை இரவலாகக் கொடு நான் அவற்றைக் கொண்டு என்னுடைய மார்பிலும் தோளிலும் எழுதிய தொய்யிலைச்சிதைத்து என்னைக்கூடிப் பிரிந்து சென்ற தலைவனைத்தேடுவேன். என்று கூறிப் புலம்பினாள்.

"மையில் சுடரே! மலைசேர்தி நீயாயின்
பௌவ நீர்த் தோன்றிப் பகல் செய்யும் மாத்திரைக்
கைவிளக் காகக் கதிர்சில தாராய்; என்
தொய்யில் சிதைத்தானைத் தேர்கு
(நெய்தற்கலி-142)

தலைவனைப் பிரிந்து புலம்பும் இத்தலைவியின் கூற்றோடு சீதையைப் பிரிந்து புலம்பும இராமன் கூறுவனவற்றை ஒப்பிட்டுப் பார்த் தால் இரண்டும் ஒரே மனப்பாங்கில ஒரே நிலையில், கூறப்பட்டன என்பதை உணரலாம்.

" ஊர்ப் பொதுமன்றத்தில உள்ள கடம்ப மரத்தில் தங்கியிருக்கும் அச்சந் தரும் கடவுள் சான்றாக உன்னைப்பிரியேன் " என்று சூளு ரைத்துத் தலைவியைக் கூடிய தலைவன் பிரிந்து சென்றான். பிரிவுத்துயரால் தலைவி வாடினாள் அவள் நறுநுதல் பசப்புற்றது; தோள்கள் மெலிந்தன. அவளைத் தேற்றக் கருதியதோழி "தலைவியே! நீ வருந்தாதே. இந்தமரத்திலிருக் கும் தெய்வம் பொல்லாதது பொய்ச்சூள் செய்தவரை இத்தெய்வம் வாளா விடாது. இத்தெய்வம் உன்னை வருந்தச் செய்தவரை ஒன்றுக்குப் பத்தாக வருத்தும் என்றாள். அதைக் கேட்ட தலைவி திடுக்கிட்டாள். தகை சால் பூங்கொடியாகிய தலைவி தன்துயர் மறந் தாள் தெய்வம், காதலன் நடுங்கக் கடுந்துய ரம் செய்தால் என்செய்வது என்று எண்ணி நாப்புலர வாடினாள். அவளுக்குத் துயரம் துணிவைத் தந்தது; தெய்வமே! என்னுடைய கொங்கைகளாகிய குன்றுகள் பொருந்திய மலை போன்ற மார்பினை உடைய, நல்ல நாட்டுக்குத் தலைவரான என் காதலர் சிறிதும் கொடியவர் அல்லர். அப்படியாயின் உன் பொன்னுதல் ஏன் பசந்தது? உன் தோள்கள் ஏன் மெலிந்தன என்று நீ கேட்பாய். நாம பசந்து காட்டினால் தலைவர் நம்மிடத்து மிக்க அன்பு கொண்டு பிரியாது இருப்பர் என்று கருதி நுதல் பசந்தது. தலைவர் மேலும் மேலும் உள்ளம் நெகிழ்ந்து நம்மிடத்து அன்புகாட்ட வேண்டும் என்பதற்காகத் தோள்கள் பொய் யாக மெலிந்தன. இதுதான் உண்மை. தலைவர் தாம் உரைத்த சூளுரைக்குமாறாக என்னைப் பிரிந்து கொடுமை செய்தார் என்று தவறாகக் கருதி நீ அவருக்குக் கொடுமை செய்து விடாதே" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண் டாள்

'மன்ற மராஅத்த பேஎம்முதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம் என்ப; யாவதும்
கொடியர் அல்லர்எம் குன்றுகெழு நாடர்
பசைஇப் பசந்தன்று நுதலே
ஞெகிழ ஞெகிழ்ந்தன்று தடமென்றோளே "
(குறுந்தொகை-87)

தலைவனைக் காப்பாற்றத் தெய்வத்தையும் ஏமாற்ற விரும்பும் தலைவியின் மனநிலையை என்ன சொல்வது?

கார்காலம் வருவதற்குள் மீண்டு வருவேன் என்று கூறிசசென்ற தலைவன் இன்னும் மீண்டு வரவில்லை. ஆனுல், கார் மேகங்கள் வானத்தில் கூடிப் பெருமழைபொழிந்தன. கார்காலத்தில் மலரும் கொன்றைகள் மிகுதியாய்ப் பூத்தன. மரக்கிளைகளில் படிந்திருந்த கொடிகளும் பூத்தன. வண்டுகள் இசை பாடின. பிரிந்த தலைவன் இன்னும் வரவில்லையா என்று கேட்டு முலலை அரும்புகளாகிய பல்லைக் காட்டிக் கார்காலமாகிய பெண் சிரித்தாள். தன்னைப்போன்ற பெண் ஒருத்தி தன்னைப்பார்த்து ஏளனச்சிரிப்புச் சிரிப்பதைக்கண்டு தலைவி நாணமுற்று வாடினுள். அப்போது தோழி தலைவியைத்தேற்றக்கருதிப் பின்வருமாறு கூறினுள். "தலைவியே! நம் தலைவர் சொன்ன சொல் தவருதவர்; தாம சொன்னபடி கார்காலம் வருவதற்குள் கட்டாயம் மீண்டுவருவார். இன்னுமம கார்காலம் வரவில்லை. காலம் அல்லாத காலத்தில்—முதுவேனிற் காலத்தில் பெய்த வம்ப மாரியை-கோடை மழையை-கார்கால மழையாகக் கருதி அகன்ற அடிமரத்தை உடைய அறிவில்லாத கொன்றைகள் பூத்துள்ளன. மரந்தானே! அதற்கு அறிவில்லாதது ஒரு வியப்பா? அந்த அறிவற்ற மரத்தின செய்கை கண்டு அறிவுடைய நீ மயங்குவது தகுமா?

"மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை
கல்பிறங்கு அத்தம் சென்ருேர் கூறிய
பருவம் வாரா அளவை, நெரிதரக்
கொமபுசேர் கொடியிணர் ஊழ்த்த
வம்ப மாரியைக் காரென மதித்தே"
(குறுந்தொகை-66)

தலைவன் பேச்சில் எல்லையறற நம்பிக்கை வைத்திருக்கும் பெண்ணின் மனநிலை பருவ காலங்களையே நமப மறுக்கிறது.

உலக இன்பத்தைத் துய்க்கப் பெரிதும் தேவைப்படும காதல் உணர்வை வெறுத்தவர்களுக்கு — காயமே இது பொய்யடா வெறுங காற்றடைத்த பையடா, வாழ்வாவது மாயம் அது மண்ணுவது திண்ணம என்று வேதாந்தம் பேசுபவர்களுக்கு வேணடுமாளுல திருக்குறளும் கலித்தொகையும், குறுந்தொகையும தலைவன் தலைவி கூற்ருகக்கூறுவன. அறிவற்ற மொழிகளாகத் தோனறலாம தலைவன் — தலைவி ஆகியோருக் கிடையே எந்த அளவுக்குப் பற்றும் பாசமும் மயக்கமும் உண்டோ அந்த அளவுக்கு இல்வாழ்க்கை சிறப்புறும் என்று அறிந்த நமக்கு அவை அறிவற்ற கூற்ருகத்தோன்றுவதில்லை. இவ்வாறு, உலக வாழ்க்கையில் வெறுப்புற்றவர்களுக்கு அறிவற்ற மொழிகளாகத் தோன்றுகின்ற காதல் மொழிகளைப் பேசுகின்ற காதலா மனப்பாங்கையே, காதலரிடத்துக் கொள்கின்ற எல்லையற்ற அன்பையே மடன் என்று தொல்காப்பியர் கூறியிருக்க வேண்டும. இந்த மடன் ஆடவர் பெண்டிர் இருபாலாருக்கும் உண்டு. எனினும் பெண்டிர்க்கே மிகுதியாக இருக்கிறது. எனவே தான், மடன் பெண்டிர்க்கு உரியது என்று தொல்காப்பியர் கூறியிருக்க வேண்டும் ஆடவர் மூளை சிறந்தவர் என்றும் பெண்டிர் இதயஞ் சிறந்தவர் என்றும் மேலை நாட்டறிஞர் கூறுவது இவண் எண்ணிப் பார்த்தற்குரியது. அறிவினும் அன்பு மிகுந்த பெண்டிருடைய காதல் மொழி மடமொழி எனப்பட்டது. தலைவன் பிரிந்து செல்லலால் தலைவிககு ஏறபட்ட பிரிவுத் துயரை உணர்த்த ஏற்பட்ட செல்லல் என்னும் சொல் இன்று எல்லா வகைத் துயரங்களையும் உணர்த்தி நிறபது போலத் தொடக்கத்தில் மடன் என்ற சொல் வெளிப்பார்வைக்கு — வேதாந்திகளுக்கு அறிவற்ற பண்பாகத் தோன்றுகின்ற அளவு கடந்த காதலர் அன்பைச் சுட்டி, இன்று அறிவில்லாமையை உணர்த்தத் தொடங்கி விட்டது.

இது காறும் கூறியவற்ருல் பிணையோர் மட நோககு, நாண் முதலியவை பெண்டிர்க்குப் பேரழகு தருவதுபோல் மடன் என்ற பண்பும் பெண்டிர்ககுப் பேரழகும் பெருமையும் தரும் என்பதும, அமமடன் என்ற சொலலுக்குக் காதலரிடத்துக கொள்ளுகினற எலலையற்ற அன்பு என்பதே பொருள் என்பதும், செய்யத் தகுவது , அறியாத பேதைமை பெண்டிர் இயலபு, பேதைமை என்பது மாதர்க்கு அணிகலன் எனபவை பொருந்தாக் கூற்று என்பதும், இன்று மடன் என்ற சொல் பேதைமை அறியாமை முதலிய பொருளகளில் வழங்கிக் கொணடிருக்கின்றமையாலேயே மடன் என்ற சொலலுக்கு உரையாசிரியர்கள் மயக்கந் தரும் உரையெழுத நேர்ந்தது என்பதும பெறப் பட்டன. ஆகவே, மாதர் கல்வி கற்று எத்துணை உயர்ந்த பட்டங்கள் பெறினும் மடனேடு இருந்தால்தான் இல்வாழ்க்கை சிறக்கும் என்பதை உணர்ந்து மடனையே அணிகலனுகக் கொண்டு இன்புற்று வாழ்வாராக.

---

# அளபெடை

முதுபெரும் புலவர்,
ச. தண்டபாணி தேசிகர்,

உலகில் உயிர்கள் அனைத்திற்கும்வளர்ச்சியும் தளர்ச்சியும் அழிவும் விளைகின்றன. வளர்ச்சி வரவேற்கப்படுகிறது; மகிழ்ச்சியை அளிக்கிறது. தளர்ச்சி தள்ளப்படுகிறது; முடியவில்லையாலும் சிறிதுகாலம் தேக்கி வைக்கப்படுகிறது; துன்பத்தையளிக்கிறது. அழிவும் அப்படித்தான். ஆனால் அழிவுக்குப் பின் துன்ப இன்பங்களை உணரும் உயிர் காரண உடலுடன் இருப்பதால் அஃதறியுமே யன்றிப் பிறரும் அறியும் நிலையில் இராது. இவ்வண்ணம நிகழும் மாற்றங்கள் அனைத்தும் இயல்பாகவே நிகழ்வன. இவற்றை அன்றாடம் வாழ்க்கைக் கண்ணாடி தெளிவாகக் காட்டக்காண்கின்றோம்; அதுபோல எழுத்து உலகிலும் வளர்ச்சியும் தளர்ச்சியும் அழிவும் நிகழ்கின்றன. அவற்றால் எழுத்துக்கள் மகிழ்ச்சியும் இகழ்ச்சியும் அடைவதில்லை. அவ்வெழுத்துக்களைத் தொடர்புபடுத்தி இருக்கையாக்கிப் பொருளரசை எழுந்தருளுவிக்கின்ற நாம் அடைகிறோம். சற்று ஊன்றி நோக்கினால் எழுத்துலகில் விளையுமாற்றங்கள், நாடக மேடையில் சோகக்காட்சியைக்கண்டு அதனையும் ஓரின்பமாக வியத்தல்போல நமக்கு இன்பத்தை விளைவிக்கின்றன. எழுத்துலகம் ஒலி வடிவானது. அதன் வளர்ச்சி ஒலியின் நீட்சியும் மிகுதியும் தளர்ச்சி உள்ள அளவிற் சுருங்குதல். அழிவு, ஒலிமறைதல் இம்மூன்றும் அன்றி ஒன்று ஒன்றாக மாறுதலும் உண்டு. அந்நான்கு நிலையுள்ள ஒலிவளர்ச்சியைப் பற்றிய சில சிந்தனைகளே ஈண்டு ஆராயப் படுகின்றன.

எழுத்து என்பதே எழுதப்பெறும் எழுத்துக்களால் வந்த பெயர்; எழுதப்படுதலின் எழுத்தே" என்பது நூற்பா. எழுதப்பெறும் ஒவ்வோரெழுத்தும் ஒலியையுணரும் கருவியாகிறது. எழுதப்பெறும் எழுத்து வடிவம். அதனால் அறியப்பெறும் ஒலி பண்பு. ஆகவே வளர்ச்சி வடிவிற்கா? அன்றி ஒலிக்கா என்பது சிந்திக்கத்தக்கதொன்றுதான். ஆனால், ஒலிக்காக உருவேயன்றி உருவிற்காக ஒலியல்ல. ஆதலால் வளர்ச்சி ஒலிக்கே ஒலியே முந்தியது

எழுதொலியைச் சார்பளவையால் ஒரு மாத்திரை இரண்டு மாத்திரை அரைக் கால் மாத்திரைகள் எனப் பிரிக்கிறோம்: இதில் ஒன்றுதான் முதல் அளவை. அதனோடு ஒன்று கூடி இரண்டாகிறது அதுபிரிந்து, அரையும காலும் ஆகின்றன ஆகவே ஒருமாத்திரை பெறும் குற்றெழுத்துக்களே முந்தியவை. அதுவளர்ந்து நெட்டெழுத்தாகிறது. அது தேயந்து குறுக்கங்கள் ஆகின்றன. நெட்டெழுத்தும் அளவில் வளர்வதே அளபெடை.

அளபெடையைத் தொல்காப்பியர் நூன்மரபிலும் (1) மொழிமரபிலும் (2) செய்யுளியலிலும் (2a) விளிமரபிலும் (3) கூறுகிறார். செய்யுளியலில் தொடைவிகற்பங்கூறும் வழி அளபெடைகளை ஆண்டு, அதனால் வரும் பெருக்கத்தையும் இத்தனை என வரையறுக்கின்றார் (4) பின்னர் வண்ணங்கூறுமவழி அதனால் விளையுஞ் சந்த இன்பத்தைக்காட்டுகிறார் இங்ஙனம் அளபெடை இலக்கண நூல்மூலம் ஊடுருவி நிற்பதொன்று

அளபெடைகள் தனி எழுத்தா? குறலின் வளர்ச்சியை நெடில் எனப்பெயர் தந்து ஓரெழுத்தாக எண்ணுதல்போல நெடிலின் வளர்ச்சியான அளபெடைகளையும் தனி எழுத்துக்களாக எண்ணலாமே என்ற எண்ணம் உண்டாகத்தான் செய்கிறது. நெட்டெழுத்துக்கள் அவற்றின் மூலமான குற்றெழுத்துக்களை

1. நூன்மரபு : 5, 6 சூத்
2. மொழிமரபு : 8, 9 சூத்.
2a. விளிமரபு : 8, 18, 24.சூத்.
3. செய்யுளியல் : 17. 18. சூத்.
4. ,, 97. சூத்.

விட வியாபகமாய்ப் பல்லாயிரஞ் சொற்களுக்கு உறுப்பாய் இருப்பதைப்போல அளபெடைகள் அமைவதில்லை; எங்கோ அருகி வருகின்றன. ஆகையால் வழக்கின்மை காரணமாக எழுத்தாந்தன்மை இயையாததாகலாம்.

ஆசிரியர் தொல்காப்பியர் 'மூவளவு இசைத்தல ஓரெழுத்தின்றே' என்கின்றார். அடுத்து 'நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய கூட்டி எழூஉதல்' எனவேண்டிய இடத்திலே வேணடிய அளவு கூட்டி ஒலியை எழுப்புக என உரிமையும் வழங்குகிறார் இந்த எண்ணமும், 'ஓரெழுத்தின்றே' என்ற மறுப்புரையும் ஏன் உண்டாயிருக்கவேணடும்?

சுற்றுச்சூழலிலே தமிழோடு ஒத்து வளர்ந்து வந்த இலககண வரமபோடு இலக்கிய வளர்ச்சியை மட்டும் பெற்ற ஆரியமொழியிலே குறில் நெடில் அளபெடை (ஹ்ருஸ்வம், தீர்ககம் புலுதம் என ஒவவோருயிா எழுத்தும் பெரும்பாலும் மூவகை நிலைகளையுடையன எனப்பேசப்படுகின்றன. தமிழ்க்கு அது தேவையில்லை என்று தோன்றுகிறது தலைவலிக்கு மருந்துபோலத் தேவைவிளைந்த போதன்றி எங்கும் என்றும் அளபெடை கையாளப்பெறுவதில்லை ஆதலாலேயே 'நீட்டம் வேண்டின்' என்கின்றார்.

அந்நீட்டமோ எல்லையின்றி நீளாது; மேலும் இரண்டு மாத்திரையளவுதான் நீளும். உருஅர்க்கு எனமேலும் ஒருமாத்திரையும், 'செரூஅஅய்'வாழிய என மேலும் இருமாத்திரையுமாக நீண்டுவந்தன நான்குமாத்திரைக்கு மேல் நீளுதல் இயற்றமிழ் வழக்கில் இல்லை

உலகவழக்கிலோ நாவல், (உரப்புமோசை) அழைத்தல் முதலியவற்றுள் அழைப்பானுக்கும அழைக்கப்படுவானுக்கும உள்ள சேய்மையின் அளவுக்கு ஏற்ப எல்லையின்றி நீளுதலைக்காண்கிறோம் அவை அளபெடையாகா. இதற்கு ஓர்வரம்பும் இல்லை. வரம்பொடுபட்ட விளி அல்லது அழைப்போ, நானகு மாத்திரைககு மேல் நீளாது என விளிமரபு கூறுகிறது. "இவற்றை விளியும, பணடமாற்றும் நாவல கூற்றும் முதலாயவற்றுள் வரும என்பாரும் உளர். அங்ஙனம் வந்தது பிற்காலத்துச் செய்யுள் என்ப அல்லதூஉம் அங்ஙனம் வரையறைப்படாமையானும், நாம்முன்னர்க் காட்டியவை அவற்றுள் அடங்காமையானும் அவ்வாறு இகந்து கூறுன் என்பதூஉம்படும்" (1) என்கின்றார் பேராசிரியர்.

இசைத்தமிழ் வழக்கிலோ அளபிறந்துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும் உள. அவை 'இசையொடு சிவணிய நரம்பின் மறைய' என்றார்

ஆகவே அளபெடை தேவைக்கு ஏற்பச் செயற்கையாகப் புலவன் படைப்பவை; வேண்டிய அளவு நீட்டப்பெறுபவை, மரபிற்கு இசையவே வருபவை. ஆதலால் தனியே இயல்பான எழுத்தாகா. வளர்ந்த செயறகையான எழுத்தாந்தன்மை எய்துவன என்பது பெறப்படும்.

இங்ஙனம் தன்னையுணர்த்தித் தேவைக்காக நீணட அளபெடை எழுத்து பிறபொருளைச் சுட்டும் நிலையை எய்தின் மொழியாகும். இது 'ஈண்டுமொழி என்றது அவ்வளபெடை எழுதது ஒருபொருள் உணர்த்தி ஓரெழுத்து ஒருமொழியாய் நிற்கும் நிலைமையினை" என்னும இளம்பூரணருரைப் பகுதியான் அறியப் பெற்றது. இங்ஙனம் மொழித் தன்மை எய்திய அளபெடையின் நிலையை,

> குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்
> நெட்டெழுத்திம்பர் ஒத்த குற்றெழுத்தே

என்ற நூற்பாக்காட்டும்; இதில் நெட்டெழுத்து எவ்வளவு மாத்திரை நீளும என்பதறகு அளவுகோலாக ஒரு குற்றெழுத்தின் மாததிரை நீளும் என அந்நீட்சியும நெட்டெழுத தொலியும் குற்றெழுத் தொலியும் கலந்து அரை நாழி நீரும் கால் நாழி நீரும் கலந்து, முககால நாழி நீராகி, கலந்தபின் இது அரை நாழி நீர் இது கால் நாழி என நீரினைப்பிரித்தறிய முடியாதவாறு போல மூன்று மாத்திரை நீளமாகவே ஒலிககும். ஆனல் அங்ஙனம் ஒலிப்

---

1. செய் 17 சூத் பேராஉரை

பதைக் காட்டும் வரி வடிவிலே 'ஒத்த குற்றெழுத்து நின்று இசை நிறைவைப் புலப்படுத்தும் என்று மொழியமைப்பில் அளபெடை நிலையை அறிவிக்கின்றார்.

பின்னர் மொழிபல இயைந்து ஓசையென்ற கரைக்குள் கட்டுப்பட்டு இயங்கு நிலையை 'அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே' என்ற நூற்பாவால் உணர்த்துகின்றார் தொல்காப்பியர். ஆகவே அளபெடை செய்யுளுக் குறுப்பாகும் அசையாய் நிற்கும் தன்மை குறித்தே ஆக்கப்படுவது தனி எழுத்தன்று மொழியாய் மொழிபிரிந்து அசையாய் ஏனைய ஒற்றும் உயிரும்போல அலகுகாரியம் பெற்றும் பெருதும் அசையாய் நிறகும என்பது அறிவிக்கப் பெறுகின்றது. அதிலும அங்ஙனம் அசை நிலையாதல் சீர்நிலை எய்துதற்கேயாம்.

அடுத்து அளபெடைத் தொடை கூறும் வழி 'அளபெழின் அவையே அளபெடைத் தொடையே' என அடிமுதற்கண் எழுத்துக்கள் அளபெழுந்து வருவன அளபெடைத் தொடை என்கின்றார். அளபெடைத் தொடைகள், வகையான் முந்நூற்றெழுபத்தெட்டும், விரியான் ஒன்பதினாயிரத் தெண்ணூற்றிருபஃதும் ஆம் எனப் பேராசிரியர் விளக்கம் தருவர். இவற்றின் விரி பெருக்கல் வாய்பாடுபோல் வதாயின் ஈண்டுக்காட்டிற்றிலம்.

அடுத்து அளபெடை வண்ணம்: அளபெடைகள் பயின்று வரச் செய்யுள் வண்ணமாம். வண்ணம் என்பது சந்தவேறுபாடு, இவ்வண்ணம் செய்யுள் முழுவதும் வருதல்வேண்டும் என்ற நியதியுடையன அல்ல. ஒரு செய்யுளுட் சிலவும் வரலாம் பலவும் வரலாம் என்பதாம். ஆகவே அளபெடைகள் செய்யுளிசை இன்பம் தருவனவாகப் பெரிதும் பயன்படுவன என்பது பெறப்படும்.

**அளபெடை வகைகள் :**

இந்த அளபெடையில் நீட்ட வேண்டி வந்த இசை நிறை அளபெடையும், ஒரு சொல்லை ஒரு சொல்லாக இசைக்க வந்த சொல்லிசை யளபெடையும், ஒரு காரணமும் பற்றாத மொழியியல்பில் தாமேயான இயற்கை யளபெடையும் என மூவகை உள்ளன. அவற்றுள் முன்னவை யிரண்டும் நூலானும் உரையானும் தொன்னூல்களில் அறியக்கிடப்பன. பின்னதொன்றும் தொன்னூல்களில் உள்ள வழக்கால் அறியப்பெறுவது. இவையே யன்றிப்புணர்ச்சியிலக்கணத்தான் வருவதொன்று, இங்ஙனம் அளபெடைகள் பல்வேறு வகையில் உள்ளன.

அவற்றுள் முதலாவதாகிய இசை நிறையளபெடையானது, மாத்திரை வகையால் தளை தமகெடாமையின் யாப்பழியாமைப் பொருட்டு வேண்டப்படுவதென முன்னர்ப்பலவகையான் உணர்த்தப்பெற்றது.

இரண்டாவதாகிய சொல்லிசை யளபெடைக்குத்தனித்த இலக்கணவிதி இல்லை. ஆயினும் இருவகை வழக்கிலும் தொகை - தொகைஇ நசை–நசைஇ, உறீஇ -பெறீஇ (உயிரடூஉ நின்ற கூற்றம்போல) என்பன போலத் தொழிற் பெயராயும். பெயராயும் நின்ற சொற்கள் அளபெடுத்து வினைஎச்சமாகின்றன. இவற்றைச் சொல்லிசை யளபெடை என்கின்றோம். இவை யாப்பழியாமை காரணமாக வந்தன அல்ல. அதனால் நீட்டம் வேணடின்' என்றவிதியுள் அடங்கா.

ஆடூஉ, மகடூஉ குரீஇ,–குருவி, மரீஇ–(மருவி) இருவி-இரீஇ (தினைத்தாள்) என்பன போல வருவன ஒருகாரணமும் பற்றாது வந்த இயற்கை யளபெடைகள். இவற்றை மரூஉ முடிபு என்னலாமோ என்றும எண்ணத் தோன்றுகிறது.

'ஒகார இறுதிக்கு ஒன்னே சாரியை' (1) என்பதால் வரும் 'கோஒனே' என்பதும், "உம்மை எஞ்சிய இருபெயர்த்தொகைமொழி, மெய்ம்மையாக அகரமிகுமே" (2) எனபதால வந்த 'உவாஅப் பதினான்கு' என்பனபோல் வனவும், மாமரககிளவி . அவற்றோரன்ன" என்பதால் (3) வந்த மாஅங்கோடுபோல் வனவும். செய்யுளில், அன்று வருகாலை ஆவாகிவந்த (4) அதா அன்று போல்வனவும், "குற்றெழுததிமபரும் ஒரெழுத்து மொழிககும் நிற்றல வேண்டும் உகரககிளவி" (5) என்ப

தால் விளைந்த உடுஉக்குறை போல்வனவும், தேற்றமும் சிறப்பும் அல்லாத 'ஏஎ' 'ஓஒ' என்பன போல்வனவும், பனையின்முன் அட்டுவந்த பனுஅட்டும் (6) உருபியல், நிலையும் மொழி, களாகிய கோஒன்கை'போன்றனவும் (7) பிறவும் புணர்ச்சி வேறுபாட்டான் வந்த அளபெடைகள்.

இவற்றைப்பேராசிரியரே செய்யுளியலில் 'பலாஅக்கோடு என்புழிக் "குறியதன் முன்னவரும் ..அகரக்கிளவி" எனப்பெற்ற அகரமுண்டன்றே! அதுவும் அளபெடை எனப்படும் என்றார். (1) (எதிர்ப்பக்கம் பார்க்க)

ஆகவே உயிர் அளபெடை, இயல்பான் எழுவனவும், இசை நிறைக்க எழுவனவும், சொல்லிசையாக வருவனவும், புணர்ச்சி விகாரத்தான் வருவனவும், விளியில் வருவனவுமாகப் பலவகைப்படுதலையறிந்தோம்

**இயற்கையும்-செயற்கையும**

அளபெடைகள் செய்யுட்கே இன்றியமையாதன:- அவற்றிற்கே உரியன; என்பது பெறப்பட்டது. ஆயினும் வழக்கிலும் வருவதுண்டு என்பதை, "அவற்றுள் வழக்குக்கும் செய்யுளுக்கும் பொது வாகியதனை இயற்கை யளபெடை என்றும், செய்யுட்குப் புலவர் செய்துகொண்டதனைச் செயற்கை யளபெடை என்றும் பெயரிட்டு வழங்கப்படும்" என்ற பேராசிரியர் உரை தெளிவிக்கும். ஆனால் இயற்கையளபெடைகள் பேச்சு வழக்கில் நிலவக்காண்கின்றிலேம் உரை நடையில் மட்டும் உணரக் காண்கின்றோம். ஆதலால் உரையும் ஒரு செய்யுளாதலின் செய்யுள் வழக்கு எனலாமோ என்ற ஐயம் தோன்றுகிறது

இனிச்சிறப்பாக, ஒற்று அளபெடுத்தல் தமிழ் மொழிக்கே சிறப்பியல்பு அதனைத் தொல்காப்பியர் 'ஒற்றளபெடுப்பினும் அற்றென மொழிப' என்பதாற் புலப்படுத்துகிறார். இதுவரை உயிரளபெடைக்குச்சொன்ன, சீர்நிலை எய்தலும் அசைநிலையாதலும் யாப்பழியாமைப் பாதுகாத்தலுமாகிய இயல்புகளை உடையன என்பதாம்.

இங்ஙனம் அளபெடை எழுத்தாகி, ஆனால் மூன்று மாத்திரைபெறும் ஓர் எழுத்தாகாமல் தேவைக்கு வளர்ந்த எழுத்தாகி, அந்நிலைதிரியாதே மொழியுள்ளும் வந்து, செய்யுளுக்குச் சீருந்தளையும் சிதையாமற் பாதுகாக்கும் கருவியாகிறது. அது காரணம் பற்றாது இயல்பாக எழுதலும் உண்டு. ஒரு சொல்லை ஒரு சொல்லாக மாற்றவும் வரும். தேவையின்றியே இனிய ஓசை தரவருதலும் உண்டு. புணர்ச்சியால் விளைதலும் உண்டு. என்பன எழுத்தின் ஒலிவளர்ச்சியால் விளைந்த நன்மைகளாம் ஆதலால் எழுத்தொலிகளின் வளர்ச்சியால் மொழிக்கு நன்மையே உளதாயிற்று என்பது உணர்த்தப் பெற்றது. மேலும் தொடையாய்ப் பாடலுக்கு அணியாயிற்று. வண்ணமாய்ச்சந்த இன்பந்தந்து மனத்தை விட்டு அகலாது. செவிவிருந்தாய்த்திகழ்கிறது என்பதாம்.

---

1. எழுத் 181 சூ
2. ,, 224 சூ
3. ,, 232 சூ
4. ,, 259 சூ.
5. ,, 268 சூ.
6. ,, 273-275 சூ.
7. ,, 285 சூ.
8. ,, 295 சூ.

(1) பொருளதி : சூ 329 உரை.

# மதகுக் கற்கள் காட்டும்,

# மதுராந்தகத்து வட திருச்சிற்றம்பலம்

*பேராசிரியர். சி. கோவிந்தராசனார்.*

காலவெள்ளம் இடையீடின்றி என்றும் தொடர்ந்து ஓடிக்கொண்டே இருக்கின்றது. வெள்ளத்தின் அருஞ்செயலாக மேடு மடுவாதல் இயற்கை என்பர். ஆனால், கற்பனைக்கும் எட்டாத சிற்பநுட்பங்களுடன் நின்ற கற்றளியாம் வடதிருச்சிற்றம்பலம் கால வெள்ளத்தின் கடுமையால் மறைந்து போனதைக் காட்டிநிற்கும் கற்களின் கதையைக் காண்போம்

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புடைய ஊர்களில் மதுராந்தகம் என்னும் பெயருடைய ஊரும் ஒன்றாகும். இவ்வூரின் ஒருபகுதியாக அமைந்திருக்கும் ஏரியும் வரலாற்றுச் சிறப்புடையதாகும். சோழர் வரலாற்றில், கி பி 970-முதல் பதினைந்தாண்டுகள் உத்தம சோழனென்னும் பேரரசன் தொண்டைமண்டலத்தையும் தன்னாட்சிக்குட்படுத்தி ஆண்ட செய்தியை வரலாறு உணர்த்துகின்றது. இம்மன்னனின் இளமைப் பெயர் மதுராந்தகன் என்பதாகும் இம்மன்னனின் தாயும் சோழர்குலப் பேரரசியுமாக விளங்கியவர் செம்பியன்மாதேவியாவர். இவர்கள் காலத்தில் அமைக்கப்பட்டவைகளே மதுராந்தக நகரும், மதுராந்தகப் பேரேரியுமாகும். அக்காலத்தில் அங்கு அழகுடன் அமைந்திருந்ததே வடதிருச்சிற்றம்பலம் என்னும் சிவன் கோயிலாகும். கி பி 16-ஆம் நூற்றாண்டில் தெய்வப் புலமையுடன் திருப்புகழால் முருகன் எழுந்தருளிநின்ற தலங்களையெல்லாம் பாடியருளிய அருணகிரிநாதர், மதுராந்தக வடதிருச்சிற்றம்பலமமர்ந்த முருகனை மூன்றுபாடல்களில் பாடியுள்ளார். அவை :

1] 'குதிபாய்ந்து' 'சயிலாங்கனைக்கு' என்ற தொடக்கமுடைய பாடல்களில்,

"மதுராந்தகத்து வட திருச்சிற்றம்பலத்தமர்ந்தபெருமாளே" —என்றும்,

2] 'மனைமாண் சுதரான' என்று தொடங்கும் பாடலில், "மதுராந்தக மாநகரந்திகழ் முருகாந்திரமோடமரும்பர்கள் தம்பிரானே" — என்றும் குறிப்பனவாகும்

அருணகிரியார் காலமளவிலும் வரலாறு பெற்று அமைந்திருந்த அக்கோயில் இன்று இருந்தவிடம் தெரியாத நிலையை அடைந்துவிட்டது.

கி. பி. 1964-இல் இவ்வூரின் வடக்கெல்லையாக அமைந்துள்ள திடலில் மண்ணுள் புதைந்து நின்ற மயிலேறும் பெருமாள் சிலையொன்றினைக் கண்ட அன்பர்கள், திருப்புகழின் சான்றினைக்கொண்டு வடதிருச்சிற்றம்பலத்தைப் பற்றிய வரலாற்றினை அறிய முற்பட்டனர். சென்னைப் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத் துறையில் புகழ்பெற்றிருந்த டாக்டர். திரு மா இராசமாணிக்கனார் அவர்களிடம் சென்று தமது விருப்பத்தைத்தெரிவித்தார்கள். அவர்களின் முயற்சியின் பயனாக திரு டாக்டர் அவர்களிடமிருந்து 23–2–65இல் எனக்கொரு கடிதம் வரப்பெற்றேன். பேராசிரியரின் விருப்பப்படியே மதுராந்தகம் சென்று, அவர் பணித்தபடியே வடதிருச்சிற்றம்பலத்தைப் பற்றிய வரலாற்றுச் சான்றுகளைத் தேடலானேன். முருகன் திருமேனி கிடைத்துள்ள இடமும், சிலையின் சிற்பநுட்பமும் என் ஆராய்ச்சிக்கு முதலிலக்காக அமைந்தன. சிலையில் அமைந்த சிற்பச்சுவடு, கி.பி. பத்தாம் நூற்றாண்டில் வளர்ச்சியடைந்த சோழர்காலச் சிற்பக்கலையை உணர்த்தி நின்றன. மேலும் ஆராய்ச்சியைத் தொடர்ந்தேன்.

மதுராந்தக ஏரிக்குரிய கிழக்குக்கரை உயர்ந்து. நெடிதாக அமைந்ததாகும் கரையின் உட்பகுதி முழுவதும் கருங்கற்படைகளாகவே அமைக்கப்பட்டுள்ளது. இடையிடையே அமைக்கப்பட்டுள்ள் மதகுகளும் வரலாற்றுச்சிறப்புடைய கலிங்குகளும் கருங்கற்கட்டிடங்களே யாகும். இப்பகுதிகளையெல்லாம் ஆராய்ந்தபோது, பாசிப் படலத்துள் மறைந்து கிடந்த கல்வெட்டுப் பகுதிகள் நூற்றுக்கணக்கில் கிடந்தன. அவற்றையெல்லாம் ஆர்வத்துடன் படியெடுத்து, இணைத்துப் படிந்தறிந்தபோது, உத்தம சோழனின் காலத்திலிருந்து கி.பி பதினாறும் நூற்றாண்டு முடிய முறையே செம்பியன்மாதேவியார் முதல் சோழமன்னர்களும் அரசியலதிகாரிகளும், பெருமக்களும் மதுராந்தக வடதிருச்சிற்றம்பலத்துக்குச் செய்தமைத்த நிபந்தங்கள், அறச்செயல்கள் ஆகியவற்றை ஒருவாறு அக் கல்வெட்டுகள் உணர்த்தின.

கல்வெட்டுச் செய்திகளினால், அவ்வூர் மதுராந்தகநகர், மதுராந்தகச் சதுர்வேதிமங்கலம் என்றும், ஏரி மதுராந்தகப்பேரேரி என்றும் பெயர் பெற்றிருப்பதை அறிய முடிந்தது இத்தகைய வரலாற்றுச் சிறப்புடைய நகரில் கி.பி பதினாறும் நூற்றாண்டு முடிய நின்ற வடதிருச்சிற்றம்பலக் கோயில் அறவே அழிந்துபோன நிலையினை அறியும் அவா மேலிட்டது. எனவே, ஊரின் உட்பகுதிகளையும், ஊரினைச் சார்ந்துள்ள சிற்றூர்களையும் ஆராய்ச்சி செய்யலானேன். ஊரின் வெளிப்புறப்பகுதிகளில் பல்லவர்காலச் சிற்பத்திறனுடைய சின்னங்கள் பல சிதைந்து கிடப்பதை அறிய முடிந்தது.

மதுராந்தகத்தின் வடபால் மூன்றுகல் தொலைவில் உள்ளதும் 'கருங்குழி' என்னும் பெயருடையதுமாகிய சிற்றூரும், அதனைச் சார்ந்துள்ள குன்றும், சிதைந்த கோட்டைப் பகுதிகளும், அவைபற்றிய செவிவழிச் செய்திகளும், அப்பகுதியில் கிடைத்த கல்வெட்டுக்களும் சென்றகால நிகழ்ச்சிகளைத் திட்டவட்டமாகத் தெரிவிப்பனவாயின.

மதுராந்தக ஏரிக்கு வடகிழக்கும், கருங்குழிக்கு மேற்குமாக அமைந்திருக்கும் குன்றே மேலே குறிப்பிடப்பட்டதாகும். இக்குன்றிற்கு நேர் தெற்கே இரண்டுகல் தொலைவில் மலைக்கு நேர் இலக்காக வடதிருச்சிற்றம்பலக் கோயில் உயர்ந்த கோபுரங்களுடன் எழுந்து நின்றது கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் இப்பகுதிகளைத் தன் ஆட்சிக்கு உட்படுத்திய ஆற்காட்டு நவாபின் படைகள் கருங்குழிக் கோட்டையைக் கைப்பற்றி வலியுடைய தாக்கிக் கொண்டன. நவாபின் பீரங்கிப் படையின் ஒருபிரிவு, குன்றின் மேல்தளத்தில் அமைக்கப்பட்டு, பகைவரைத் தொலைவிலேயே தாக்கும் இலகுக்டன் நின்றன. இந்நிலையில் பீரங்கிப்படையினரின் கண்கள், எதிரே உயர்ந்து நின்ற வடதிருச்சிற்றம்பலக் கோயிலைத் தங்கள் பீரங்கிக் குறியிலக்குப் பயிற்சிக்கு இலக்காகக் கொண்டன. வீரர்கள் குறிவைத்து நூற்றுக்கணக்கான வெடிகளைத் தீர்த்தனர். அவர்கள் விரும்பியவாறு, குறி தவறாமல் பீரங்கிகளை வெடிப்பதற்கு ஏற்ற பயிற்சியைப்பெற்று மகிழ்ந்திருப்பார்களென்பதில் ஐயமில்லை. ஆனால், அந்தோ! குண்டுகளின் குறிக்கு இலக்கான வடதிருச்சிற்றம்பலக்கோயிலின் நிலை என்ன? கற்குவியல்கள். என்னே காலத்தின் கோலம்!

இவ்வாறு, 'நவாபின் பீரங்கிப்படையினரின் செயலால் கோயில் அழிக்கப்பட்டுள்ளதென்னும்' செவிவழிச்செய்திக்கு ஆதரவாக. அதேநூற்றாண்டில்தோன்றியதும், கொளிஞ்சிவாடி என்னும் ஊரிலுள்ள சொக்கநாதர் கோயில் கல்வெட்டுப்பகுதியுமாகிய,

"இந்நாயனார்கோயில் துலுக்கவாணத்தினாலே இறங்கல்பட்டு, திருப்பணி செய்விக்கையில் .."

என்னும் தொடர் உணர்த்துகின்றது. துலுக்கவாணம்என்று அன்றுகுறிக்கப்பட்டது முகமதியர் போர்க்காலங்களில் கையாண்ட பீரங்கிகளேயாம். பீரங்கிக்குண்டுகளால் தகர்ந்து நின்ற கோயிலையே திருப்பணி செய்ய முற்பட்டுள்ள செய்தியை அக்கல்வெட்டுக் குறிப்பதாயிற்று.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர், காலச்சக்கரம் சுழல மதுராந்தகமும் அப்பகுதியிலுள்ள ஊர்களும் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டு நிலைபெறுவதாயிற்று. எனவே, நாட்டின் நீர்வளத்தைக்காக்க முயன்ற ஆங்கில ஆட்சியினர் மதுராந்தக ஏரிக்குரிய கரைகளைச் செம்மை செய்யத் தொடங்கினர். கற்குவியலாகக் கிடந்த வடதிருச்சிற்றம்பலக் கோயிலின் பகுதிகளைக் கொண்டும், ஏரிக்குரிய கரை மதகுகள், கலிங்குகள் ஆகியவற்றை அமைத்தனர்

கற்குவியல்களில் கிடந்த தெய்வச்சிலைகளையும் கல்வெட்டுப்பகுதிகளையும் கொற்றர்கள் மதகுகளிலும் கலிங்குகளிலும் காட்சிக்குரியதாக அமைத்துக் கட்டிடங்களை எழுப்பியுள்ளனர். வருங்கால மக்கள் இவற்றைக் கண்டு வடதிருச்சிற்றம்பலத்தின்வரலாற்றினை ஒருவாறு உணர்ந்து கொள்ளட்டும் என்பது அக்கொற்றப் பெருமக்களின் நுண்ணிய உணர்வோ, என்னவோ, அறியோம். இவ்வமைப்புக்களுள் ஒன்றாக, பெரியமதகு என்னும் பெயருடைய மதகின் வலப்புறப்பகுதியில், அன்றொருநாள் வடதிருச்சிற்றம்பலத்துள் அமர்ந்த முருகனுடன் இணைந்து நின்ற வள்ளியம்மையின் திருமேனி, இன்று இடம் பெற்று நிற்பதைக் காணலாகும்.

இவ்வாறு, மதுராந்தக ஏரியின் கரை, மதகுகள், கலிங்குகள் ஆகியவற்றுள் அமைக்கப்பட்டுள்ள சிலைகளும் கல்வெட்டுப்பகுதிகளும் காட்டிய மதுராந்தக வடதிருச்சிற்றம்பலத்தின், மறைந்துபோன வரலாற்றினை அறியலாகும்.

---

**மதுராந்தக மதகுக் கற்களிலுள்ள கல்வெட்டுக்களுள் சில :**

1. ...உடைய பிராட்டியார் ஸ்ரீ செம்பியன் மஹாதேயா...
   ...தங் கொண்டு, எங்களூர் மத்ஸராஜன் கல்வி...
   ...பொன்கழஞ்சுக்குமாக இவ்வூர் ஸ்ரீ வை...
   ...குடுத்தோமாகவும் இவ்வூரில் பிடாகை...
2. ...மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்து...
   ...டு கிராம கார்யஞ் செய்கின்ற காடவ...
   ...ஏழாயி பிர்மபட்டனென்...
3. ...வடதிருச்சிற்றம்பல முடையார் தேவதானத்...
   ...த்து முழு நிவந்தத்துக்குடலாகக் இத்தேவர்...
   ...க்கு இரண்டாங் கண்ணுற்று...டங்கவடவெ...
   ...வர்க்கு மேற்கு தேவர் ஸ்ரீ கோயிலில்...
4. ...ஸ்வஸ்திஸ்ரீ இது திருஞானசம்பந்தந் திருமடம்
   ஆட்கொண்டானுச்சி தன்மம் உ.
5. கௌரப்பனாயக்கர் உபய மண்டபம்

---

# கரந்தைத் தமிழ்ச் சங்கம் செய்த சில பணிகள்

திரு: செ. தனக்கோடி, பி. ஏ.,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

கரந்தைத் தமிழ்ச்சங்கம் 1911–ஆம் ஆண்டில் தோன்றியது. அக்காலத்தில் தமிழ் மொழியின் நிலை தாழ்வுற்றிருந்தது வேற்றரசு ஆட்சி நிலவியதாலும், வேற்று மொழிகளின் ஆதிக்கத்தாலும் பிறகாரணங்களாலும் தமிழ் மக்களே தமிழ் மொழியின் உயரிய பண்புகளை உணரமாட்டாமல் புறக்கணித்தனர். தமிழ் மக்களில் படித்தவர்களெனக் கருதப்பெற்றவர்கள் சந்திக்கும் சமயங்களில் ஆங்கிலத்தில் உரையாட விரும்பினர்களே யன்றி தங்களின் தாய்மொழியாகிய தமிழிலன்று உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தமிழ்மொழி விரும்பியவர் மட்டுமே படிக்கக்கூடியதாகவும், அதற்கேற்ற சிறப்பு நிலை கொடுக்கப் பெருமலுமிருந்தது. தமிழில் தேர்ச்சி பெற்றவர்களும் வாழ்க்கையில் ஏற்ற ஊதியம், மதிப்பு இவைகள் கிடைக்கப் பெருமல் வாடினர். பலவேற்று மொழிச் சொற்கள் தமிழ் மொழியில் பரவி அதன் தனித்த நிலை குலைக்கப்பட்டிருந்தது. பல்கலைக் கழகத்தாலும் அரசினராலும் தமிழுக்கு உரித்தாய ஆதரவு கொடுக்கப் பெருமலுமிருந்தது.

இச்சூழ்நிலையில் கரந்தையில் சில இளைஞர்கள் தமிழ் மொழியிடத்துள்ள ஆர்வத்தால் தமிழ் இலக்கிய நூல்களை ஓய்வு நேரங்களில் கூடிப் பயிலத் தொடங்கினர். இக்கூட்டங்கள் சங்கமாக உருப்பெற்று செயல்படத் தொடங்கியது. முதலாண்டில் உறுப்பினர் பதினெண்மரே மூன்ரும் யாண்டில் அறுபத்தாருகப் பெருகினர் கரந்தைத் தமிழ்ச் சங்கம் என்ற பெயருடன் 1914-இல் பதிவு செய்யப் பெற்றது.

இருவகையான கூட்டங்கள் கூட்டப் பெற்றன வாரக் கூட்டங்களில், உறுப்பினர்களில் ஒருவரால் இலக்கிய ஆராய்ச்சிச் சொற்பொழிவு நடைபெற்றது. மாதக்கூட்டங்களில் பெரும்பாலும் வெளியூர்களிலுள்ள தமிழறிஞர்களை அழைத்துச் சொற்பொழிவாற்றச் செய்தனர். கலைமகள் விழா, ஆண்டுவிழா போன்றவைகளில் பல தமிழ்ப்பேரறிஞர்கள் சொற்பொழிவாற்றி வந்தனர். இங்ஙனம் தமிழ்ப் புலவர்கள் பலரும் அடிக்கடி கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் கூடித் தமிழ்மணம் கமழச் செய்தனர். தமிழவேள் திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் சங்கத்தின் தலைவராக விருந்து சங்க நோக்கங்களைத் திறம்படச் செயல்படுத்தினர்கள் சங்க வளர்ச்சிக்காகப் பல்லாற்ருனும் தொண்டு செய்தவர்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள் வே. இராதாகிருட்டின பிள்ளை, கரந்தைக் கவியரசு அர. வேங்கடாசலம்பிள்ளை, திருவாளர்கள் ந. மு. வேங்கடசாமிநாட்டார், அ. கணபதியாபிள்ளை. ஐ. குமாரசாமிபிள்ளை ஆவர்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்காக அமைத்த இலச்சினையில் தொண்டு. தமிழ், முன்னேற்றம் என்ற குறிக்கோள்கள் பொருத்தப்பெற்றுள்ளன. தமிழவேள் திரு. த. வே உமாமகேசுவரம்பிள்ளை அவர்கள் நமது சங்கத்தின் நோக்கங்களைத் தம்முடைய கட்டுரையொன்றில் மிகநன்ருக விளக்கிக் கூறியுள்ளார்கள். "தமிழின் தனிநிலை, தொன்மை செம்மை முதலிய உயரிய பண்புகளை நன்குணர்ந்து மக்களனைவரும் இவ்வுயர்வை யோர்ந்து பயனடைய வேண்டுமென்னும் விருப்பத்திஞலும், உலகமொழிகளுள் உயர்மொழியாய் வீற்றிருந்த தமிழ்மொழி மீண்டும் அவ்வுயர்வைப் பெறவேண்டுமென்னும் ஆராத காதலிஞலும், தமிழ்மக்கள் கலைநலம் முதலிய எல்லா நலங்களையும் பெற்று உலகமக்களுள் ஒருவராகக் கருதப்பட வேண்டுமென்னும் கருத்திஞலும் நம் சங்கம் நிறுவப்பெற்றது."

இனி, சங்கம் செய்துவந்த சில பணிகளைப் பார்ப்போம். சங்கத்தில நிகழும் விரிவுரைகளெல்லாம் தனித்தமிழிலேயே இருககச்செய்தனர் உறுப்பினர்கள் எவரேனும் சொற்பொழிவுகளில தவறியும் பிற மொழிச் சொற்களைக் கலந்து பேசின் அவர்களைச் சாடினர். சங்கததின் அறிக்கைகளிலும். அழைப்பு முதலியவற்றிலும் தனித்தமிழ் நண்ட பின் பற்றப்பட்டது சீமான் என்று வழங்கப்பட்டு வந்த சொல் கைவிடப்பட்டுத் திருவாளர் என்ற சொல் முதன்முதலாகக கையாளப் பெற்றது. இவ்வாறு தனித்தமிழ் வழங்கச் செய்த முயற்சி தீவிரமாகப் பின்பற்றப்பட்டு வந்தது ஆங்கிலம் பயின்ற இளைஞர் பலரும் கல்லூரி மாணவர்களும தமிழ் மொழியால் ஆர்வம் காடடத தொடங்கினர். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழ் கட்டாயப்பாடமாக்கவும் தமிழாசிரியர்களின் ஊதியம் முதலியவற்றை உயர்த்தவும் பலவகைகளிலும் சங்கம் முயற்சி செய்தது. 1921 இல் கவர்னர் அவர்களிடம் தூது சென்று இன்னோரன்ன வேண்டுகோள்களை வற்புறுத்தியது. தமிழுக்குத் தனிப் பல்கலைக் கழகம் வேணடுமென்ற கருத்தை உருவாக்கப் பல தமிழன்பர்களையும் அழைத்து ஒரு பெருங் கூட்டம் கூட்டி முடிவு எடுத்து அதைச் செயல் படுதத முயற்சிகள் செய்யப்பட்டன. 1953 இல் இரண்டு மாபெருங் கூட்டங்கள் கூட்டித் தமிழ் நாட்டின் எல்லைகளை இலக்கிய வாயிலாகவும் வரலாற்றிலுமுள்ள சான்றுகளின் வாயிலாகவும் வலியுறுத்தியது ஆந்திரர் நாடு பிரிந்து போன பிறகு எஞ்சியுளளதைத் தமிழ்நாடு எனப் பெயரிடவேணடுமெனறும் ஒரு தீரமானத்தை நிறைவேற்றியது. இம்முடிபுகளை உரிய ஆணையர்களுக்கும ஆட்சியாளர்களுக்கும் அறிவித்தது. தமிழ்மொழியின நிலைஉயரப் பலகலைக் கழகத்தாரிடமும் அரசியலாரிடமும் நமது சங்கம செய்த முறையீடுகள் பல. அவைகள் பெரும்பாலும் நாளடைவில் ஏற்றுக்கொள்ளப் பெற்று விட்டன.

மாணவர்கள் இளம் வயதிலேயே தமிழில் ஆர்வம் பெறவேணடுமென்ற நோக்கத்துடன் தொடக்கப்பள்ளி ஒன்று 1916 இல் நிறுவப் பெற்றது. அது வளர்ந்து, 'நடுத்தரப் பள்ளியாக இயங்கியது இக்காலத்திலுள்ள ஆயிரக் கணக்கான தொடக்கப்பளளிகளைக் கண்ணுறும் நண்பர்கள் தொடக்கப் பள்ளியில் எங்ஙனம் தமிழில் ஆர்வமேற்படக் கூடுமென ஐயுறலாம் ஒருசான்று தரககூடும், இப்பள்ளியில் தமிழ்ப்பாடங்களில் ஆழ்ந்த கவனம் செலுத்தப் பெற்றது. தமிழிலக்கணமும் ஏற்ற முறையில் கற்பிக்கப்பெற்றது. S. S L. C. தமிழ்ப்பாடப் புத்தகத்தை எட்டாம் வகுபபு மாணவர்கள் பாடமாகப் பயின்று வந்தனர். அப்பாடங்களை மாணவர்கள் படித்து, புரிந்து திறமையாகக் கையாண்டனர். அவர்கள் கேள்விகளுக்கு விடைகூறும் முறையும் அவர்கள் எழுதும் தமிழின் நடையும் உயர்ந்த தரமுடையதாகவிருந்தன. கரந்தைத் தமிழ்ச் சங்கப்பள்ளியில் பயின்ற மாணவனென்றவுடன் பொதுமக்களும், பிறபள்ளிகளின் ஆசிரியர்களும் அவனைத் தமிழில் புலமையுடையவனென்றே கொண்டனர்.

இப்பொழுது கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் கண்காணிப்பில் மூன்று கல்வி நிலையங்களுள்ளன; இராதாகிருட்டின இளநிலை ஆதாரப்பள்ளி, உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளி, கரந்தைப் புலவர் கல்லூரி என்பன. திக்கற்ற மாணவர் இல்லம் ஒன்றும் நடத்தப் பெறுகிறது.

சங்கம் தோன்றிய 1911-ஆம் யாண்டிலேயே ஒரு நூல்நிலையமும் 68 நூற்களுடன் தொடங்கப்பெற்றது பல தமிழன்பர்கள் அன்பளிப்பாகக் கொடுத்த நூல்கள் நாளடைவில பல ஆயிரமாகச் சேர்ந்தன இன்று 10,200 . ... நூல்களை உடைத்தாயிருக்கிறது.

நமது சங்கம் ஏறத்தாழ இருபத்தைந்து நூல்களை வெளியிட்டுள்ளது. அவைகளில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை தொல்காப்பியம் – சொல் – தெய்வச்சிலையார் உரையும் கரந்தைக் கட்டுரைக்கோவையும் யாழ்நூலும் ஆகும். திங்கள் வெளியீடாகத் தமிழ்ப்பொழில் என்னும் இதழ் 1925–ஆம் யாண்டிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. அரசியல் சமயம், வகுப்பு முதலிய பாகுபாடுகளில் சார்

பற்றுத் தனி இலக்கிய இதழாக இயங்கி வருகிறது விளம்பர மூலமோ வேறு வகையிலோ கிடைக்கக்கூடிய வருவாயினால் ஆக்கம் பெறும் கருத்தில்லாமல் பொழில் நடந்து வருகிறது.

சுருங்கக்கூறின் கரந்தைத் தமிழ்ச் சங்கம் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்த ஆதரவற்ற சூழ்நிலையில் தமிழ்மொழிககுத் தொண்டாற்ற முற்பட்டது. தமிழவேள் கூறியவாங்கு "தமிழின் தனிநிலையைப் பாது காக்கப் பற்பல அறிஞர்கள் தனித்தனியே முயற்சி செய்துள்ளாரேனும் அப்பணியை முதற்கடமையாகக் கொண்ட சங்கமாக முதன் முதல் தோன்றியது நம் சங்கமேயாகும். பெருஞ்சிறப்புற்ற பிரஞ்சு மொழிக் கழகத் தோற்றத்திற்கும் நம் சங்கத்தோற்றத்திற்கும் ஒற்றுமையாகவுள்ளன பல. நமது சங்கம் தோன்றிய சிலகாலத்திற்குள் தமிழ்மக்களிடத்துத் தனித்தமிழில் ஓர் ஆர்வத்தை உண்டாக்கிப் பலரையும் தனித்தமிழைக் கையாளச் செய்தது" இத்தமிழ்ப் பணியில் நமது சங்கம் தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இப்பொழுது உலகமக்கள் பலரும் தமிழ்மொழியின் உயர்பண்புகளை உணர்ந்துள்ளார்கள். தமிழ் அதற்குரித்தாய உலக மொழிகளுள் உயர்நிலையைப் பெற்றுவிட்டதெனக்கூறலாம் இனி, தமிழ்மொழி மேன்மேலும் வளரப் பல துறைகளிலும் சிறப்பாக அறிவியல் துறையில் வளரத் தமிழன்பர்களும், தமிழ்ச் சங்கங்களும் தொண்டாற்றக் கடப்பாடுடையோம்.



# கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்வி நிலையங்கள்

திரு. ச. சுந்தரம், பி.ஏ., பி.எல்.,
தாளாளர், சங்கக் கல்வி நிலையங்கள்.

ஆழிசூழ் இவ்வுலகில் தமிழின் தொன்மைச் சிறப்பினையும், இலக்கிய இலக்கண வளங்களையும், பிறவற்றையும் எல்லா மக்களும் உணர்ந்து கொள்ள வேண்டுமென்னும் நோக்கத்துடனும் தாழ்வுற்றிருக்கும் தமிழ், தமிழ்நாட்டின் நிலையினைமீண்டும் நன்னிலைக்குக்கொண்டு வர வேண்டும் என்னுங் கருத்தினாலும், கரந்தைத் தமிழ்ச்சங்கம் [14-5-1911] தோற்றுவிக்கப்பட்டது. திருவாளர் த. வே. இராதாகிருட்டினப்பிள்ளை அவர்களின் முழு முயற்சியாலும் தமிழன்பர்களின் அயராத் தொண்டினாலும இச்சங்கம் ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றி வளரத் தொடங்கியது. மாணவர்களுக்கு இளமையிலேயே தமிழில் ஆர்வம் உண்டாகவேண்டும் என்னும் விருப்பத்துடன் நள, புரட்டாசி 21ஆம் நாள் [6-10-1916] கலைமகள் விழாவின் நிறைவு நாளன்று "செந்தமிழ் கைத்தொழிற் கல்லூரி என்னும் தொடக்கப்பள்ளி தொடங்கப்பெற்றது. இஃது 1922ஆம யாண்டில் "கரந்தைத தமிழ்ச் சங்கக் கல்லூரி" என்னும் பெயர் பெற்றது.

இக்கல்லூரிக்கு உறுப்புகளாக இராதாகிருட்டினன் கழகம, இசை பயில் மன்றம், சுவடி நிலையம. அறிவு நூற்பொருள் நிலையம், காட்சிப்பொருள் நிலையம் ஆகியவை அமைந்திருந்தன. சொற்பொழிவு, சொற்போர், கட்டுரைவரைதல் முதலியவற்றில வெள்ளிக்கிழமை தோறும் பயிற்சியளிப்பதற்காக "பஞ்சாபிகேசன் கழகம என்ற அமைப்பும் இருந்து வந்தது. உரைநடைப் பயிற்சியில் திறம் பெற "பஞ்சாபிகேசன்" என்ற திங்கள் இதழும் நடத்தப் பெற்றது. இவற்றில் மாணக்கர் பெரிதும் பங்கேற்றனர். ஆங்கிலத்திலும் புலமை பெற இராதாகிருட்டினன் கழகம் உதவியது. தாய்நாட்டைப் பற்றியும் தமிழ்மொழியைப் பற்றியும், இறைவனைப் பற்றியும் பாக்களை இசையுடன் பாட இசை பயில் மன்றம் பயிற்சி அளித்தது. அறிவியற்றுறைக் கல்விபெற அறிவு நூற்பொருள் நிலையமும், காட்சிப்பொருள் நிலையமும் துணையாக அமைந்திருந்தன. அவ்வக் காலத்தே, பொருட்காட்சி, கலைமகள் விழா, ஆண்டுவிழாப் போன்றவைகள் சிறப்புத்தரும் முறையில் நடந்தேறின.

மேற்கூறியாங்கு பல சிறந்த பயனுள்ள துறைகளில் ஈடுபட்டிருந்ததோடு, தமிழ், ஆங்கிலம், கணக்கு, நாட்டுவரலாறு, நிலநூல், அறிவுநூல், ஓவியம் முதலிய பாடங்களின் திட்டங்கள் யாவையும் நம் நாட்டுப் பிற உயர்தரக் கல்லூரிகளின் பாடத்திட்டங்களுக்கு எவ்வாற்றானும் தாழ்வுறாது அவற்றைவிட ஒரு பங்கு மாணவர் தகுதிக்கேற்ப மிகுத்தே இக்கல்லூரி அமைத்திருந்தது. மேலும் மாணவர் அனைவர்க்கும் தாய்மொழியாம் தமிழினைப்போற்றும் நல்லுணர்ச்சியை ஊட்டிவந்தது. பத்தாம் வகுப்பிற் பயிற்றுவிக்கும் தமிழ்ப்பாடங்களை எட்டாம் வகுப்பில பயிற்றுவித்து நல்லதமிழில அறிவுடையவர்களாக ஆக்குவித்ததே தமிழன்னைக்குச் செய்த சீரிய செயலாகும.

1938-ஆம் ஆண்டில கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளிவிழா. சோழமண்டலத்துச் சதயநாள் போலக்கொண்டாடப்பெற்றது. அப்போது திருப்பாதிரிப்புலியூர் அருட்டிரு, சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகளின் தலைமையில் வெகுதான்ய ஆண்டு சித்திரைத் திங்கள் நாலாம் நாள் (16-4-1938) சனிக்கிழமை "கரந்தைப் புலவர் கலலூரி" தோற்றம் பெற்றது. இது தனித் தமிழ் கற்கும் மாணக்கருக்காக ஏற்பட்டதாகும். அந்நன்னு

ளில் சங்கத் தலைவர் திருவாளர் த. வே. உமா மகேசுவரம்பிள்ளையவர்கள் புலவர் கல்லூரியின் குறிக்கோள்களைக் குறித்துப்பேசும்போது "இக்கல்லூரி தமிழிற்கென அமைக்கப்படுவதாகும். கல்லூரியிற் சென்னைப் பல்கலைக் கழகத்தார் ஏற்படுத்தியிருக்கும் வித்துவான் முதல்தேர்வு, நிறைவுத்தேர்வு ஆகியவற்றிற்குப்பயிற்சி அளிக்கப்படும். இக்கல்லூரியிற் பயிலும் மாணவர் பட்டம் பெற்றபின் ஆசிரியர்களாவதொன்றினையே கருதாது, தத்தமக்கேற்ற தொழில் ஒன்றினைத் திறம்பட மேற்கொண்டு தன் மதிப்புடன் வாழ்க்கை நடத்த வேண்டும்'' என்னும் கருத்தினை வெளியிட்டனர். ஆண்டுக்குழுமியிருந்த மாணக்கருக்கு முதல் ஆசிரியராகத் திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகளே இருந்து "அகர முதல்'' எனும் திருக்குறளைப் பயிற்றினர்.

இவ்வாறு தொடங்கப்பெற்ற, புலவர் கல்லூரி (30-6-1938 இல் திரு புலவர் க. வெள்ளைவாரணன் அவர்களை முதல் விரிவுரையாளராய்க் கொண்டு பத்தொன்பது மாணக்கருடன் நடத்தப் பெறுவதாயிற்று 1940-41-ம் ஆண்டுகளில் கல்லூரி இயங்க முடியாதவாறு பேரிடர் வந்துற்றது கல்லூரிக்கென ஐம்பதினாயிரம் வெண்பொற்காசுகள் பெறுமானமுள்ள முதற்பொருள் இருந்தாலன்றிக் கல்லூரியைச் சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இணைத்திட முடியாதெனப் பல்கலைக் கழகப்பதிவாளர் அறிவித்து விட்டனர். கல்லூரியைக் கவ்விய இருள் விலகும்போது தமிழ்மொழியின் மேம்பாட்டிற்கும், தமிழர் நல முன்னேற்றத்திற்கும் உரிமை முழக்கம் செய்த வரும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்குத் துணையாகி அதனை வளர்த்த பெருந்தகையும் ஆகிய செந்தமிழ்ப் புரவலர் தமிழவேள் த. வே. உமா மகேசுவரம்பிள்ளையை இழக்கும்படி நேர்ந்தது. 1944-45ஆம் ஆண்டில்தான் முதன் முதல் பல்கலைக் கழகத் தேர்விற்கு மாணக்கர் சென்றனர். சென்ற மாணக்கர் அறுவர். அறுவரும் வெற்றி பெற்றனர். புலவர் புகுமுக வகுப்பு முதலாக நிறைவு வகுப்பு ஈறாக ஐந்து வகுப்புகள் நடைபெற்றன 1956-ஆம் ஆண்டிலிருந்து புகுமுக வகுப்பின்றி நான்கு வகுப்புகளுடன் நடைபெற்று வருகின்றது. தற்போது முதல்வருட்பட பேராசிரியர் ஐவரும், நூற்றுஎண்பத்தாறு மாணவரும் அறுபத்தெட்டு மாணவியரும் உள்ளனர். 1963-இல் தனக்கென ஒரு கட்டிடத்தையும் பெற்று விளங்குகின்றது

1940-ஆம் யாண்டின் தொடக்கத்தில் சென்னை அரசு பிறப்பித்த ஓர் ஆணையால் வளர்பிறையென வளர்ந்து வந்த கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி இருகூறுகி. 1941-ஆம் ஆண்டு முதல் இராதாகிருட்டின தொடக்கப் பள்ளி எனவும் "உமாமகேசுவர நடுநிலைப்'' பள்ளி யெனவும் நடத்தப் பெறுவதாயிற்று. தமிழவேள் அவர்களின் திருப்பெயரால் விளங்கிய நடுநிலைப்பள்ளி உமாமகேசுவர உயர் நிலைப்பள்ளியாக 1950-ஆம் ஆண்டில் உயர்ந்தது இவ்வுயர் நிலைப்பள்ளிக்கெனக் கட்டிடங்கள் 1956, 1964-ஆம் ஆண்டுகளில் கட்டப்பெற்று மாடிக்கட்டிடமாகக் காட்சியளிக்கின்றது. 1969-70 இவ் யாண்டில் அறிவியல் ஆய்வுக்கூடமொன்றும் கட்டப்படுகின்றது. தற்போது ஆயிரத்து முப்பது மாணவ மாணவியருடன் தலைமையாசிரியருட்பட முப்பத்து மூன்று ஆசிரியப் பெருமக்களையும். பள்ளி எழுத்தர் உட்பட எட்டு ஊழியர்களையும் கொண்டு இயங்கிவருகின்றது.

சங்கீம் நிறுவியதுங்கனின் பெயரால் நிலைபெற்ற இராதாகிருட்டின தொடக்கப்பள்ளி படிப்படியாக உயர்ந்து 1959-இல் தனக்கென ஒரு கட்டிடத்தையும் பெற்றுள்ளது. தற்போது ஐநூற்று ஐம்பத்து நான்கு மாணவ மாணவியருடன் பதினைந்து ஆசிரியப் பெருமக்களோடு நடைபெற்று வருகின்றது.

# மணிவாசகர் கண்ட கண்ணப்பர்

திரு. K. சோமசுந்தரம், பி.ஏ., பி.எல்., தஞ்சை.

உலகம், மக்கள் பயிலுதற்கும், அதன்வழி ஆழ்ந்து தெளிதற்குமுரிய ஓர் இயற்கைப் புத்தகமாகும். உலக இயற்கைப்பொருள்களைத் தெரிந்து கொள்ளும்போழ்தே, ஆகத்தே ஆழவுணர்ந்து உணர்வியற்கைகளை மெய்ம்மையிற் செலுத்தி அகத்தினிமையை இழையப்பயிலுங்காலே, வாழ்வுக் கலையில் அகமும் புறமும் தொடர்பு கொண்டுள்ள தென்பது தெளியப்படும். தெளிந்த ஞான்று அகத்தும் புறத்தும், வினையின் நீங்கி விளங்கிய அறிவின்ப வடிவாகி நடிக்கும் மெய்ப்பொருட் கவாச்சி, பார்க்குமிடந்தோறும் நீக்கமற நிறைந்து வயங்குவதை உணரலாகும். உணரவே, இன்பவுணர்ச்சி, அனபு வழியில் படரும் இயலபு கொண்டு, உயிரினைப்பெருவாழ்விலும், பேரறிவிலும், பேரின்பததிலும நிலைகொளச் செய்யும் ஆற்றலில் ஊக்குவிக்கின்றது. ஊக்கம் ஆக்கம் பெறப்பெற, உயிர் அன்பும் இன்புமாயிலகி, விடுதலை நல்கும் அத்தனிப் பொருளோடு பற்று அரும்பி உறவு முற்றலுக்கு வழிகோலும். இத்தகையவழி காண்பார்தாம், மெய்வாழ்வில் முறைதெரிந்து நிற்கும் சான்றோராவர் அன்னாரது ஊற்றமாய கருத்துக்களும் பிறரை வாழ்க்கைத் திருவாளராகவுமாக்கும். இறவாத மங்கலத் தகுதி வாய்ந்து மதுரமும் உறுதியும் பயக்கும் இத்தகைய கருத்துக்களும், மற்றும் புத்தம் புதிய கருத்துக்களையும் எழப்பண்ணும் புறஇயற்கை உயிர்நிலையமாய உலகமும் எல்லோரையும் இனிது வாழ்விக்க வலலவையென்பது பெறப்படும்.

வாழ்வியல் முறையில் இழுக்கலுடையுழி ஊற்றுக்கோலென உதவி, உயிா மேன்மேலும் வளர்ச்சியும் விளக்கமும் கொண்டு உணர்வாட்சியாலே மாட்சிமையெய்தி அருளாட்சியிற்றலைப்படுவதற்கு உறுதுணையாய்க் கருதப்படும் நூல் திருவாசகமாகும். இஃது உலகியற்கையின் சிற்சில கூறுகள் கொண்டு படிகளாயமையும் நூல்கள் போலில்லாது புதிய புதிய உரனுடைய கருத்துக்கள் காலத்துக்கேற்ப நுட்பதிட்பச் செறிவோடு இனிமையும் இழைந்தெதிர்ந்தெழூஉம் உலக இயற்கைப் புத்தகமென்க. இச்சகமும் அதனிலுள்ள அளவிலாத உயிர்களும் ஆகமாகக் கொண்டானை 'முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் போத்துமப் பெற்றியனைக்கொணடு, இச்சகம் ஒரு திருவா எனவினு எழுப்பி, விடைமுகத்தால் இச்சகம் ஒரு திரு என வலியுறுத்துவது இத்திருவாசகம் வாழ்வாங்கு வாழும் பேற்றிற்கு இஃது நுட்பமாகிய மெய்ம்முறைகளை நெறிகோலிக்காட்டி உள்ளத்தினுள்ளே ஆனந்தமாய்க் கசிந்துருகி உள்ளத்துணர்வை மெய்ம்மையில் செலுத்தித்துய்க்கப்படுவதாய் விளங்கும் ஒழுக்கத்தின் பொலிவை ஒளிரவிடுத்து விழுப்பமெய்தும் வாய்ப்பினைக்கூறும். மற்றும், மும்மலவசப்பட்டு வாழுமுயிர்களைப் பந்த நிலையிலிருந்து படிப்படியாகப் பழவினைகள் ஒழிய வீட்டு நிலைக்கு ஏற்றித்தெய்வீக இயல்பில் தலையெடுக்கச்செய்யும்; பதி பசு பாச மென்ற மூன்று தத்துவங்களின் இயல்பைவிளக்கும; சித்தமலமறுத்து உயிர்களுக்குச் சிவானந்தப் பேறும முத்தியும் அளிக்கும்; தற்போதத்தை ஒழித்து மெய்ப்பொருட் போதத்தை நல்கும்.

திருவாசகம், இறையருளோடு மணிவாசகரது அனுபவ அறிவின் பெருக்கினது வடிவாய் எழுந்தது. இறையோடு ஒன்றுபட்டு அன்பாகி நிற்கும் மெய்யின்பத்திருவினராய மணிவாசகர் பற்பல நிலையில் இறையருளைப்பாடி உயிர்க்குயிராய் விளையாடும் ஆண்டவனடிக்கே தன் ஆவியும் உடலும் உடைமையும் தந்த பரிசின் பெற்றியினையும் ஆண்டவனது அருள் உறுதியையும் கிளந்து அனபோடுருகி அகங்குழைந்து தம்மையே ஆண்டவனுக்கு வேள்வி செய்து சிறப்பென்னும் விழுப்பேற்றினை எய்தியவராவர். மறைபயின்ற மாணிக்கவாசகர்,

உற்றாரையும் கற்றாரையும் வேண்டாதவராய், ஒடுங்கவந்தியுமே உறவெனக்கொண்டு, தேடும்பொருள் சிவன்கழலேயெனத்தெளிந்து அதனுன் அவனிதலத்து ஐம்புலனுய சேற்றி லழுந்தாச் சித்தம் அழகியார் மற்றும் ஊற்று மணல்போல் நெக்கு நெக்கு உள்ளே உருகி ஓலமிட்டுப் பெருங்காதலோடும் அலவா நிற்கும் அன்போடும் என்றும் சிவன் கழலிணையே போற்றும் இயல்புடையார்.

இவ்வாறு இறையின் அருள் நீதி வேண்டி இரைதேர் கொக்கொக்க இரவு பகல் ஏசற்றி குந்தும், இறை பிரைசேர்பாலின் நெய் போலிருந்து அருளாதொழிந்தமை யுன்னி, மணிவாசகர், 'அன்னையொப்பாய் எனக்கு அத்தனுெப்பாய்! அருளுங்காலந்தான் அடி யேனுக்கு என்னுட்கூடுவது அடியேனை 'அஞ் சேல்' எனபார்யார்? யான் ஒரு துணைகாணேன் எங்கோவே! என் மனத்துத் தனித்துணையே! பிழைத்தால பொறுகக வேண்டாவோ! நின் மெய்யன்பு பெறவே வேண்டி அழுமதுவன றி மறறென் செய்கேன்' எனக் குறையிரநது சிவன் கழலிணையடிப் பற்றன்றிப பிற யாதும் பற்றாத நிலையிலிருந்தார. இறைவன திரு வருளையே நோக்கி முடிவிலா இன்ப அன்பு வேணடிக்கலந்து வாழும் வகையினை உணர்ந் தார். இறைவனறன் வார்கழற் கன்பு தனக்கு நிரந்தரமாய் அருள்வழிபெற, ஞானவிழுப்பம பயக்கும் பழஅடியார் கூட்டம்காண ஆசைப் பட்டு, காணுது, இறுதியில் கண்ணப்பரது வரலாற்று அன்பு மெய்ந்நிகழ்ச்சிகளை இறுகப் பற்றினர். பின்னர் அன்பின் வழியினுல் இறைவனது உண்மை யுருவைக்காண முடியும் எனச் சிறந்தது பழகும் தெளிவில் உறுதி கொண்டு அமரரும் அறியவொண்ணு இடை யரு அன்பொழுக்கத்தில் தலைப்பட்டார்.

மணிவாசகரது அன்புடைய உள்ளம் பொங்கும் பிரிவினுல், செம்புலப் பெய்நீர் போல் இறைபால் கலந்து இன்புறுங்காலதது, இவரது மெய்யன்பே இவா தன்னை மறக்கச் செய்துவிட கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு' தம்பாலில்லை யென்றுதன் புன்மையையும் தாழ்மையையும் கருதும் எண்ணம பொருக கென அவருள்ளத்தை நண்ணியது. கண்ணப் பரதுவடிவம் அன்புமயமாய் வயங்கியதை மனக் கண்ணுல் கண்ட மணிவாசகர் அவரது வாழ் வியல் ஞானநிலையின் உயர்வைமதிக்கும் ஓர் உரைகல்லென உணர்ந்தார். அறிவு, விழைவு, செயல் எனும் இம்மூன்று பண்புகளையும் இறைக்கு காணிக்கையாகத் தந்த கண்ணப்ப ரது பெருமையினைக் கருதி அவர் இறைபால் ஒழுகும் நெறியினைக்கண்டு அவரது புகழில் ஆழ்ந்து தன்வயமிழந்து,

'சிந்தனை நின்றனக்காக்கி நாயினேன்றன்
கண்ணினை நின்திருப்பாதப்
போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கேயாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி ஐம்புலன்களார
வந்தனையாட்கொண்டுள்ளே புகுந்தவிச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே
உன்னைத்
தந்தனை செந்தாமரைக் காடனையமேனித்
தனிச்சுடரே இரண்டு மிலித்
தனியனேற்கே'

என ஆன்ற அறிவு நலத்தோடு வருந்துவர். மற்றும எண்ணமே, உடல்வாய் மூககொடு செவி, கண் என்றிவை' இறைக்கணே வைக்க முற்படுவர். அன்பினமையால் நிகரில்லாத தன்னை. இறை. அன்புளனு யாண்டுதன்னுயி ரில் இன்பமாய் நினறதிறத்தை அறியுந் தோறும் மணிவாசகர், கண்ணப்பரது அன் பின் திறத்தைப்பற்றாததன் அறியாமையினைக் கண்டு கலங்கிப் புலம்புவாராயினுர்.

உண்மைப் புலம்பலில் செவியுருக, உயிருருகப் பாட்டுப்பிறத்தல் இயல்பு அப் பாட்டுக கல்மனத்தையும் கரைந்துருகச் செய் யும் பான்மையது என்புருக்கும் பாக்கள் வழி கண்ணப்பரது மனமுருக்கும் வரலாற்றுப் பகுதியை இயற்கைமொழிப்பேச்சால் எடுத்துக் கூறுங்காலை அதனில்படிந்த அடிமனம், மன மொழிகளுக்கு எட்டாதவற்றையும் அறிந்து இன்பமுறும் தகுதியைப்பெறும். உணர்ச்சி வடிவாய் வாய்ந்து உயர்ந்தோஙகும் அப்பாடல் களின பொருளாழம், நம் ஆராய்ச்சிக்கு எட்டு வதில்லையாயினும் நம்மனம் சொல வாய்மை

தரும் அப்பாக்களே அறிந்து அவைபால் விழு மிய ஆற்றல் விளங்கும் ஒரு தெள்ளொளிப் பெரும் பொருளின் இருப்புங்கண்டு ஆறுதல டைய விழைவது இயல்பு கண்ணப்பரது வடிவெல்லாம் அன்புமயமாய் விளங்கியதை உணர்ந்த மணிவாசகர் கண்ணப்பரின் அன்பின் பெருமையைக் காளத்தியார் அறிவ தொழிய ஏனையா அறிவதில்லையென உளத்திற் கொண்டு, அவரது அறிவாதி மூன்றும் இறை வனையே உணர்ந்து நின்றமையை வியந்து, அவர் இன்புற்றுத் திளைத்த நிலையை,

> கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
> என்னப்பன் என்னொப்பில் என்னையுமாட் கொண்டருளி
> வண்ணப்பணித் தென்னை வாவென்ற வான் கருணைச்
> சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பி

எனக் கோத்தும்பியை விளித்து இசைப்பா ராயினர்.

'கண்ணப்பனொப்பதோர் அன்பு, என்றதில் 'ஓர்' அசையெனக் கொள்ளின, கண்ணிடந் தப்ப வல்ல முறுகிய அன்புககு ஒப்பு கண்ணப் பர் என ஒரு முகமாகக் கொள்ளவேண்டும். இறைவனது கண்ணினின்றும் குருதி பெருகி வருமபோது. கண்ணப்பர் அதனைக்களைய விரையும் அன்பின் சிறப்பியலபு, நெகிழ்ச்சி யின் நிகழ்ச்சி வாயிலாக உணரக்கூடியது. அறிவின் பண்பாகிய அனபு அருட்கு முதலாகி மனத்தில் நிகழும் நேயம; அஃதுடையார்க் குப் பிறர் கட்டின் பங்கண்டவழிக் கண்ணீர் விழுமாதலின், அவ்வருளானே அன்புடைமை விளங்குமென்பது' பேராசிரியர் கூற்று. அது அறிவினின்றும் பிறந்து மனத்திலே சுரப் பெடுத்துத் தேங்கிப் பெருகிப்பின் புன் கண்ணீர்வழி வெளிப்படும். கண்ணப்பரது இததகைய அன்பைப் போற்றியுணர வல்லார் இறைக்கணுக்கராய் விளங்குவது வெள்ளிடை மலை

மற்றும், மணிவாசகர் கண்ணப்பரது அன்பை எவ்வாறு காளத்தியார் அருமையாக வெளிப்படுத்திக் கொண்டாரென்று திருத் தோணோக்கத்தில் இறையன்பை விளைவிக்கக் கூறியது அறியற்பாற்று

> 'பொருட் பற்றிச்செய்கின்ற பூசனைகள் போல் விளங்கச்
> செருப்புற்ற சீரடியாய்க் கலசம் ஊனமுதம்
> விருப்புற்று வேடனார் சேடறிய மெய் குளிர்ந்தங்
> கருட்பெற்று நின்றவா தோணோக்கம் ஆடாமோ'.

பொருட்பற்றிச் செய்யும் பூசையும் விருப்புற்றுச் செய்யும் பூசையும் ஈண்டு ஒன்றாயினமை சுட்டு வது காண்க. தூய காலினராகச் செல்ல வேண்டிய வேடர் குலத்துத் திண்ணனார் செருப்புத்தரித்து நடந்து செல்லற்கும் வாயி னைக் கலனாகக்கொண்டு திருமுழுக்காட்டின தும் ஊனைத திருவமுது செய்வித்ததற்கும் இறைவன் தன திருமேனி குளிர விருப்புற்றா ராம். அவ்விருப்பினில் கண்ணப்பருக்கு மலச்சிதைவும் அன்புருவமாதலும் உடனிகழ்ந் தமையினை மணிவாசகர் உணர்ந்து கொண்டா ரென்க

ஒரு கையில் இறைச்சியும் மற்றோர் கையில் வில்லும் கொண்டுள்ள கணணப்பர். கையில் எடுத்துவர இயலாததை வாயில் முகந்ததும், கையால் விலக்க முடியாததைக் காலால் விலக்கியதும் அன்பாலயதன்றிப் பிறி தல்ல. இறைகழற்கன்பன்றி கைம்மாறு யாதொன்றையும் கருதாது அன்பால் நிகழ்ந்த வழிபாட்டு நிகழ்ச்சிகள் யாவும் பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைபோல் விளங்குமாறு அன்பொடுருகி அகங்குழைந்து தன் கண் ணைக் கொடுத்து கடவுளைக்கண்ட கண்ணப்பர் செய்கை, திரு ஆழிக்காகத் திருமால் ஆயிரம் பூக்களிடையே ஒரு பூக்குறைய, உள்ளத் துறுதியால் தங்கண்ணையிடந்து அலராகக் கொடுத்த செய்கையைவிட மேன்மையுடைய தாதலைக் குறிக்கவேண்டி மணிவாசகர்

> 'நலமுடைய நாரணன்றன் நயனமிடந் தரனடிக்கீழ்
> அலராய் இட் ஆழி அருளினன்'

என்ருலும், கண்ணப்பரின் பயன்கருதா அன்பு வழி பற்றிய செய்கையின் முன், திருமாலின் செய்கை ஒளிமங்கி உயிர்ப்பும் மழுங்கிப் போனமையான், 'நெடுமாலறியாமல் நின்ற அரும்பெருமானுக', இறை கரந்திருந்த உண்மையின் மணிவாசகர் புலப்படுத்துவரு ரியிஞரென்பது ஈண்டு கவனிக்கற்பாற்று

கானவர் பெருமானுகிய கண்ணப்பர் காளத்தியப்பருக்குச்செய்த பூசை ஞானப் பொருளாகிய திருவடிகளைப் பற்றிக்கொண்டு அககண்ணைக் கொடுத்து அபேதவத்துவித சித்தாந்த இறைவடிவைக் கண்ட பூசையாகும்: இதுவே துன்பநீக்கத்தையும் இன்ப ஆக்கத் தையும் ஒருங்கே அளிக்கவல்லது. இதனை

'இந்துவும் பானுவு மென்றெழுகின்ற தோர்
விந்துவு நாதமுமாகி மீதானத்தே
சிந்தனை சாக்கிராதீதத்தே சென்றிட்டு
நந்தியைப்பூசிக்க நற்பூசையாமே'

என்ற திருமந்திரப்பாவால் ஒரோவழிமெய்ம் மைகண்டு தேர்ந்து உணர்ந்து கொள்க. கழற் சேவடி எனும் பொருளைப் பெரிதும் தழீஇ நிற்கும் மணிவாசகரும் இறைவனது இலங்கு கின்ற சேவடிகளிரண்டையும வைப்பிடம் இன்றியே கலஙகிய ஞான்று, திருவடிகளை ஒன்றுபடுத்தும் வகையினை இறைவன் தந்த ருளுஙகாலை, மணிவாசகர் 'சிததமெனுந்திண கயிற்ருல் திருப்பாதம் கட்டுவித்த வித்தக ஞர் விளையாடலை விளங்கக்கண்டது ஈணடு பெரிதும நினைவுகூரற்பாலது. இவ்வாறிருந் தும, மெய்த்தவ வேடனுரைப் போன்று இறைவன் அடிமை கொள்ளத்தக்க ஓரியைபு மில்லாதும, ஒன்றுககும பற்ருத தன்னையும் நாடறிய இறைவன் தன் சித்தத்தில் கலந்து கனிவித்து நெறிப்படுத்தினதைக்

'கற்போலும் நெஞ்சங் கசிந்துருகக் கருணையினல்
நிற்பானைப்போல வென்னெஞ்சினுள்ளே புகுந்தருளி
சொற்பாலதானவா தோணேக்கம ஆடாமோ'

என மணிவாசகர் ஆக்கவுணர்வோடு கூறி யருளியது உய்த்துணரற்பாற்று.

யாவராயினு மன்பராலன்றி யறியொணு இறைவன், எங்ஙனம பிறிதோர் இன்னுயிர் நீககும் வினையில் ஈடுபடும வேடுவனரது பத்திப் பூசனைவலையில் பட்டு அவர்வழங்கும் ஊனுண் எனும்பொருந்தாப் பொருளினை விரும்பி ஏற்ரு ரென்பது ஈண்டே கருதத்தக்க தொன்று. இறைவன்பால செலுத்தும் அன்பு எல்லாவுயிர் களிடத்தும் நிகழ்தல் வேணடும் ஏனையவுயிர் களிடததில் அன்பில்லார் இறைவனிடத்தில அன்புடையராதல் அருமை.

'ஈசனுக்கன்பிலார் அடியவர்க்கும் அன் பில்லார் எவ்வுயிாககும அன்பில்லார் தமக்கும் அன்பில்லாா' என்பது சிவஞான சித்தியார் வாக்கு. உடலைக்குறிக்கும் ஊனுக்குள்ளும இறைவனிருப்பதால், ஊனுண்பார் எங்ஙனம அன்பும அருளும ஆள இயலும்? மற்றும் எவ் வணம் இறைவன்தாள் உறுவர்? அன்ன உயிர்களைக் கோறலால, அவைகள்படும் துன் பத்தைக் கண்டும் கண்ணேட்டமின்மையால கண்ணுமிழப்பர் இவ்வாறிருந்தும் கொல்லா மையெனும சீலமினறி விலங்கினைக்கொன்று அதன் ஊன்சுவை கணடு உவந்து ஊட்டிய கண்ணப்பர் எவ்வாறு இறைவன்தாள் சோந் தாரெனின் கூறுதும. அழுதுவந்தது அழுதே போகும் என்பது தொன்று தொட்டு வரும் தமிழ்வழக்கு, அழுதுவந்த ஊன் அழுவித்தே பழி பாவததை அகற்றும என்பதைப் புலப படுத்த மறவுணர்வுதரும் ஊன் வகையினை ஏற்றுக கொண்ட இறைவன், தான கண்ணீா வடித்தழவும், அதனைச் சுவைத்து ஊட்டிய கணணப்பரும, ஆணடவன் கண் நன்ருக வேணடுமெனக்கதறி அழச்செய்து, கண்ணப பரின் கண்ணையும இழக்கச்செய்தாா. ஊறு சிறிதும் ஓராது வினைததூய்மையான் இறை யின் கணணூறுபோககும நனமையின பொருட்டுக கணணப்பர் கணணிடந்தப்பின மையால பேறுமபெற்ருர்

'அழக் கொண்ட எல்லாம் அழப்போம இழப்பினும் பிற்பயககும் நற்பாலவை'

எனும் வள்ளுவா வாய்மொழி கண்ணப்பரது வரலாற்று நறுநிகழ்ச்சியில் கருக் கொண்டு கிடத்தல் நுனித்துணர்ந்து கொள்க. மற்றும்

ஊனுரண்துறமின்' என் இளங்கோ, தன் சிலப்பதிகாரத்தின்கண் ஆணையிட்டருளியது கொண்டும் இவ்வுண்மை உணரப்படும்.

கண்ணப்பர் கேவலம் காட்டுக் கேழலைக் கொன்று அதன் ஊனை அமுதாகத் திருப் போனகஞ்செய்ததைப்பற்றி ஒரு சிறிது கருதிக் காண்குவம். உள்ளுவதெல்லாம் உயர்வே நினைத்து எல்லாவுயிர்களிடத்தும் அன்பு செலுத்தும் நிட்காமிய நிலையுடைய மக்களுயிர், வீடு பேறு கருதி விலங்கு அன்பாகிய பாசத் தைக்கொன்று அறுத்தல் வேண்டும் என் பதைக் குறிக்கவே, கீழ்நோக்கிச் செல்லும் இயல்புடைய கேழலாகிய விலங்கினைக் கொன் ருரென்க. கொடிய விலங்குகள் தன்குட்டிகளி டத்தில் காட்டுகின்ற அன்பை ஏனைய விலங் கினங்களிடத்துச் செலுத்துவதில்லையாதலின், மக்கள் கடியவேண்டுவது, உலக நடையினைக் கெடுத்துவரும் கட்டுப்பட்ட விலங்கு அன்பா கிய பாசமாகும். எனவே, ஏனைய உயிர்களி டத்தும் நிகழும் அன்பு கடவுளிடத்தன்பினைக் குறிக்குமென்பதை உற்றுணர்ந்து கொள்ளல் வேண்டும்.

கண்ணைக்கொடுத்து இறைவனைக் கண்ட கண்ணப்பர், தம்மினும் பன்மடங்கு சிறந்தவ ரென மணிவாசகர் கருதி, கண்ணப்பரை இறை வன் இன்ப அன்பு மீதூர ஆண்டருளியவர லாறும், அவரது பேரன்பின் மெய்மை உருவும், திருவடியின்பம் பயனளிக்கவல்ல அன்பும் பூசனையும் உள்ளுந்தோறும் பெரியதோரிறும் பூதும் ஆராமையும் எய்தி, தமது அன்பின்மை யினைக் கண்டுணர்ந்து தம் உடம்பெல்லாம் கண்ணுய் உருகப் பெற்றிலாததைப் பற்றி பெரிதும் கவலுறுவாராயினுர். பின்னர் மணி வாசகர் இறைவனை விளித்து 'நின்ருெழும் பில் என்னைப்புகுவிப்பாய்; யானேபொய் என் நெஞ்சும் பொய், என் அன்பும்பொய், அழுதா லன்றி உன்னைப் பெறலாகாது' எனக்கற்ரு வின் மனம்போலக் கசிந்துருகுவாராயினுர். மற்றும் பொய்வளரும் நெஞ்சினர்களிடத்தில் இறைக்காட்சி நிகழாதென்றும், பொய்மை யினைப் போக்கில் மெய்மைமுகிழ்க்கும் என்ற கருத்தினையுமுடையராய்த் தமது வாழ்வில் நிகழ்ந்த,தினைத் துணையாய பொய்க் குற்றத் தைப் பனைத்துணையாகக்கொண்டு நினைந்து பழி நாணி வருந்தினர். பெருந்துறையில் மாறனுக்காக, மணிவாசகர் குதிரைகள் பெற எடுத்துச் சென்ற பொருட் குவியலனைத்தும் தம்மை ஆட்கொண்ட இறைவன் பொருட்டுச் செலவு செய்து பின்னர், மன்னன் ஆட்கள் மூலமாகக் குதிரைகளோடு விரைந்து வருக எனவிடுத்த திருமுகம் கண்டு தன்பிழை பாட் டினைச்சற்றுணர.வேண்டுவோர் வேண்டுவதே இறைவன் ஈவானென உறுதியினை மேற் கொண்டு, குதிரைகளைக் கண்டதும் கொண் டதுமிலாது வந்தவர்கள் மூலம், வாங்கிய குதிரைகள் ஆவணி மூலத்து நன்னுளில் வரும் எனப் பொருந்தாப் பொய்யுரை புகன்று, பொய்க்குற்றத்திற்குத் தானும் தன் நெஞ்சும் பொறுப்பாளியானதை நினைந்து தம்மைத் தாமே கடிந்து இகழ்ந்துகொண்டார். பொய் யிற்கிடந்து புரளாதிருக்க, இறைபால 'பொய் தீர் மெய்யானே! விச்சுக்கேடு பொய்க்காகா தென்றிங்கெனை வைத்தாய். வேண்டும் நின் கழற்கண் அன்பு பொய்மைதீர்த்து மெய்ம் மையே, ஆண்டு கொண்டு நாயினேனை ஆவ என்றருள்வாய்' என்பர். அன்பின் முடிந்த எல்லையாகிய கண்ணப்பரது அன்பின் ஊற்றினை நிலைக்களனுகப் பெற்றும், மணி வாசகர் பெருதவர்போன்று இறைவனை வேண்டி,

'பெறவே வேண்டும் மெய்யன்பு'
'இடையரு அன்புனக்கென், ஊடகத்தே
நின்றுருகத் தந்தருள்'
'அடியாருனக்குள்ள வன்புந்தாராய்'

எனப் பலவாறு பெரிதும் இடைவிடாது வருந்திப் பரவுவாராயினர்.

இறையும் மணிவாசகரை மெய்யவனென ஆண்டு பொத்திக்கொண்டு அவரது அகம் நெக அவரை மீண்டும் பிறவாமற் காத்தாட் கொணடார். மணிவாசகரது அன்பு விளக்கம இறையின் அறிவு விளக்கத்தை யொட்டி நிகழ்ந்தமையான், இறையும் உலப்பிலா அன்பு அருள, மணிவாசகர் பெரிதே ஆனந்தமுற்று எளிதே அன்புருவமானுர். 'அந்தமொன்றிலா

ஆனந்தம் பெற்றேன், யாது நீ பெற்ற தொன்றென்பால்?' என்ற மணிவாக்கின்வழி இறையன்பு எதனையும் எடுத்துக்கொள்ளாது ஆனந்தத்தைக கொடுத்துக் கொண்டேயிருக்கும் இயல்பினை இவண் அறியற்பாற்று கற்றாவின்பால் நொடியில் சுரத்தற்கு கன்று பயன் படுமாறு போன்று, அன்புபிழம்பாகிய கண்ணப்பரது அன்பின் சிறப்பியல் மூலம், மணிவாசகர் இறைவனது திருவருள் சுரக்குமாறு அதனை மெல்லென நீவிவல்லென அருளாரமுதத்தைக கறந்து வாரிக்கொண்டு பருகி விழுப்பம் வீறிய மெய்ஞானப் புலமையாளரானார். மாணிக்கவாசகரது இறையன்பு இயல்பாகவே உள்ளத்தில் பதிந்து சிந்தையில் தேனூறிக் கலந்து உணர்வோடு ஒன்றிவிட்ட அற்புதத்தால, கண்ணப்பநாயனாரது அன்பினைக் காட்டிலும் சிறந்து விஞ்சிய தென்பது மாணிக்கவாசகநாயனார் எனாது மாணிக்க வாசகப்பெருமான் என வழங்குவதினான் அறியலாகும்.

கண்ணப்பரது அன்புநெறிவழிப்படிபடர்ந்து பரவி 'இறைநிலையை மெய்ஞ்ஞானப் புலமை நலத்தால் கண்டின்புறும் மாணிக்கவாசகர், இறையருளைப் பெறற்கு, "அழல்வாய் மெழுகொப்ப மெய்யினராயும், அழுது நிற்கும் கண்ணினராயும ஆனந்தமாய்க் கசிந்துருக, அவரது ஊனெல்லாம் உருகிற்று; எற்புத்துளை தொறும் அமுததாரைகள் அமைய, என்பும் நைந்து 'உருகிற்று' நெஞ்சமுங்கசிந்துருகிற்று.

இறைவன் மணிவாசகரது உடலிடங் கொண்டு. வானோர்களும் அறியாததோர் வளத்தினை ஈந்து, இன்பே அருளி, அவரது உயிரையும் உருக்கியதோடமையாது நெஞ்சிலும் மன்னி எண்வகையாய்ப்புணர்ந்து நின்று உயிருண்டு சுவைகாண, எண்குணமாய மணிவாசகரும் இன்பமயமாய இறைவனைப் பருக, பருகிய இருவரும் அன்பினால் ஒருவரானார்.

# இளங்கோ வேந்தர் கூறும் இசை, கூத்துக் குறிப்பு

பண்ணாராய்ச்சி வித்தகர்
குடந்தை, ப. சுந்தரேசன்.

இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுளாக இயற்றிவைத்தார் இளங்கோவடிகள், அவர் காலத்திலே நடந்ததொரு, கோவலன், கண்ணகி மாதவி வரலாற்றை.

சிலப்பதிகாரச் செல்வம் செந்தமிழ்ச் செல்வமே. நூன்மூன்றுகாண்டம். அதுவே புகார் மதுரை, வஞ்சி எனக் கற்று அறிந்தேயின்புறுகின்றனர், அருந்தமிழ் பயின்றோர் பலர்.

வஞ்சி, மன்னரின் மாண்புரைக்கும். மதுரை, மன்னன் செங்கோற்றன்மை புகலும். புகார், மன்னனின் வளம், கொடை, இவற்றை மேன்மை படக்காட்டும்.

புகார், மதுரை, வஞ்சியென வலமாயிருத்தலை, யாம் வஞ்சி, மதுரை, புகார் என இடமாய் அறிந்து குறிப்பாம்.

1] வஞ்சிக்காண்டத்தில், தொண்டகந்தொடுமின், சிறுபறை தொடுமின், கோடுவாய்வைமின் குறிஞ்சிபாடுமின், (தொடுத்தல் என்பது ஈங்கு வாசித்தல் எனப்படுமாம்). (கோடு என்பது கடமாக்கொம்பு,) கடமாக் கொமபை ஊதுதுளைமட்டுமுள்ள கொம்பாக அஃதாவது தூமபாக கருவியாக்கி ஊதுதல் என உணர்தல் வேண்டும்.

கொடுமணி என்பது, ஓசை கடிதானமணி, இம்மணி, இரும்பினுல் செய்யப்பெற்று, மலை வாழ்குறவர்கள் வேலனுக்குப் பூசைபோடுங்கால் மலையே அதிரும்படி அடிக்கப்படுவது என்பர். தொண்டகம் என்பது ஒன்பது வார்க்கட்டு. அஃதாவது ஒன்பது கண் கொண்டதொரு தோற்கருவி. இக்கருவி முருக பூசையின்போது தெய்வமேறியாடுமிடதது அதற்கேற்பத் தனித்துவாசிப்பதுபோலும் சிறுபறை எனபது சிறியபறை. இது ஒரோவழி தொண்டகத்தோடு அடிக்கப்படுவதாம்

குறிஞ்சி என்பது ஒரு பண், நள்ளிரவில் சிறப்பாகவே இசைக்கப்பெறுவது. குறிஞ்சி யாழ் என்பது ஒரு கருவி. அக்கருவியில் நரம்புகள் செம்பாலையாகக் கட்டப் பெற்று, அப்பாலையையே உழை முதலாகக் கைக்கிளை இறுவாயாகக்கொண்டு உழையிசையை அரும்பாலைக்குரிய முறையில் இசைப்பது. உழையிசை சற்றே இசைக்கும். இக்காலமுறையில், தீரசங்கராபரணத்தை நிடாதமுதல் தைவதம் வரை இசைக்க, குறிஞ்சிப்பண் தோன்றும். தமிழக இசைக்கலையில்தான் குறிஞ்சிராகம் சிறப்பாக விளங்குகிறது. குறிஞ்சி என்ற சொல்லே, தமிழகத்ததொருதிணையைக் குறித்து நிற்கும் ஒருதிணைச்சொல் என்பது நன்கே விளங்கும். தூய தமிழ்ச் சொற்களில் குறிஞ்சியென்ற சொல் மிகப் பழமையதாகும்.

குரவை, இஃது ஒருவகைக் கூத்து. எழுவரேனும் எண்மரேனும் நண்டுகைகயாகக் கை பிணைந்துகொண்டு ஆடிஆடிச் சுற்றி வருவது. ஒன்பதின்மரும் கைகோத்தாடப் பெறுவது. வரிக்கூத்தின் ஒருறுப்பு, விநோதக் கூத்து ஆறனுள் குரவைக்கூத்தும் ஒன்று. இக்கூத்துப் பொதுவாகவும் நாடகத்தமிழ் வகையில் சிறப்பாகவும் விரவிவரும்.

குரவை என்பது, காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச் செய்யுள் பாட்டாக, கொண்டுநிலை எனும் செய்யுள் வகையில் பொருளைக்கொண்டு நிற்கும் நிலையாக, பாட்டமைத்து ஆடுவதாம். குரவை தழீஇயாமாடுங் குரவையுட் கொண்டு நிலைபாடிக்காண் எனவும் கூறப்பெற்றது.

1) "குரவை யென்பது கூறுங்காலைச்
செய்தோர் செய்த காமமும் விறலும்
எய்த வுரைக்கும் இயல்பிற்றென்ப,

2) குரவை யென்ப தெழுவர் மங்கையர்
செந்நிலை மண்டலக் கடகக் கைகோத்து
அந்நிலைக் கொட்பநின் றுடலாகும்

கற்கடகக்'கை, அல்லது நண்டுக்கை என்பது.

'இருவிரல் கடம்மையுள் தம்முள்ளே
கோத்துப்
பெருவிரல்கள் நீக்கநண்டாம்'
எனப்பட்டது.

அரங்கு — நாடகசாலை

துஞ்சா முழவி னருவி, இஃதுமோர் அரிய குறிப்பு. குன்றக் குரவையொடு கொடிச்சியர் பாடல் - பாடல் வென்றிச் செவ்வேள் வேலன் பாணி - பாணி நாடக மடந்தையர் ஆடரங்கி யாங்கணும், — குறிப்பு கூடை. இது நாடகத் தமிழ்ச்சொல் கூடைக்கை என்பது இரட்டை ஒற்றைக்கையாம். கொங்கணக்கூத்தர், கொங் கணதேசத்துக் கூத்தர்கள். இனவண்டியாழ் செய் என்ற குறிப்பும், பாணிவரி என்ற குறிப்பும் இப்பொருள் வைத்த உருவாம் என்பர்.

"காஅர்க்குரவை" இதுவுமோர் குறிப்பே, நாடகமகளிர், ஈரைம்பத்திருவர், கூடிசைக் குயிலுவர் இருநூற்றெண்மா — அருமையான குறிப்பு. வடித்தோல் கொடும்பறை ஒருவகை யான பறைக்கருவி. வால்வளை நெடுவயிர், ஊது கொம்புவகைகள். இடிக்குரன் முரசம், இழு மென் பாண்டில், இது ஒருவகைக் கஞ்சதாளம். மயிர்க்கண் முரசம், பறைக்குரற்பேய்மகள் பாணி, யாடல், கதுப்பிகுத்தாடல். — இவை கூத்துவகையாகும். தனித்த தமிழ்க் கூத்தி னைச்சார்ந்தவையாகும்.

பொதுமுறையில் பாடு பாணியர், ஆடு கூத்தர் முன்றேர்க்குரவை, பின்றேர்க்குரவை பாடுதுறை, வரிநவில்பாணி, பாட்டொடு தொடுத்தல், திறத்திறம் பகர்ந்து குறத்தியா பாடிய குறிஞ்சிப்பாணி, உழவஞ்ஞைதப்பாணி, கோவலரூதுங் குழலின்பாணி, வஞ்சிபாடுதும, குறிஞ்சி முதலாக நாலுநிலத்துப்பாணி. இவை யாவும் தூய இசைக் குறிப்புகளாகும். நன்கு ஓர்ந்துணர்தல் வேண்டும்.

வணர்கோட்டுச் சீறியாழ். புணர்புரிநரம்பு, பொருள்படு பத்தல், குரல்குரலாக வருமுறைப் பாலை, துத்தம் குரலாகத்தொன்முறையியற்கை யின் அந்தீங்குறிஞ்சி, — இசைக்குறிப்புகளே என்பது நன்கு விளங்கும்.

மண்கணைமுழவு, வணர்கோட்டியாழ், பண் கனிபாட்டல், படுபறை, இமையவனுடியகொட்டிச் சேதம், பறையூர்க்கூத்தச் சாக்கையன ஆடி ஞைம. ஆடுங்கூத்தா - பினனரும், சொல, அரற்று, அம்மானைவரி, கந்துகவரி, ஊசலவரி, இவையாவும் இசைப்பாடற் குறிப்பு, ஒற்றை என்ற சொல் ஒற்றைத் தாளத்தைக் குறிக் கும். வள்ளைப்பாட்டு, உலக்கைப் பாட்டு, தோற்கருவி, நரம்புக்கருவி, கூத்து—அவற்றிற் குரிய பாடல்வகைகள் என்பது போதரும்

தலைக்கோலாசான்—நட்டுவன் பொருந் திய காதலின் ஆடிய குரவை, வரியுங்குரவை யும் என்ற குறிப்பெல்லாம் நிறைந்துள்ளது வஞ்சிக் காண்டத்திலும். பாடல், எழால் பண் பாணி அரங்கு விலக்கு, ஆடல், வரி, குரவை, சேதம்—கூறப்பெற்றன. எல்லாமே தமிழ்வகையைச் சார்ந்தவை

2] மதுரைக்காண்டததில்

செவ்வழிப்பண்ணிற் சிறைவண்டரற்றும், அடிபெயர்தது ஆடுதல், ஆறெறிபறை, (அதா வது வழிபறித்துக கொட்டும் பறை) கோடு, குழல், வள்ளிக்கூத்து, வெள்ளிக்கூத்து, செந் திறம் புரிந்த செங்கோட்டியாழ், பாய்கலைப் பாவை பாடற்பாணி, ஆசான்திறம், (ஆசான் ஆசான்திறம், காந்தாரம) காலைமுரசம், கிணை நிலைப்பொருநர், வைகறைப்பாணி — பாண்டி நாட்டு இசைவழக்குமுறை என அறிதல வேண்டும். காலைமுரசம், வேத்தியல், பொதுவி யல ஆடல், வரி பாணி, தூக்கு குயிலுவக்கருவி, நால்வகைமரபின் அவிநயக்களம், (வினையக் களம) நிற்றல் இயங்கல் இருத்தல் கிடத்தல் இவை அவிநயக்களம எனப்பட்டன.

தூக்கு என்பது இங்கே வாச்சியம் எழு வகைநிலம், எழுவகை நிலத்தினும்எய்தியவரி, ஆற்றுவரி, சாற்றுவரி, திணைநிலைவரி, மயங்கு திணைநிலைவரி, முகமுடைவரி முகமில்வரி, படைபபுவரி என ஏழு. இவை பொதுவாகத தமிழினபாற்பட்டனவ என உணரலாம்

தலைக்கோலரிவை, வாரம்பாடுந்தோரிய மடந்தை, தலைப்பாட்டுக்கூத்தி, இடைப பாட்டுக்கூத்தி, பண், கிளை, எண்ணெணகலை,

பாடற்பகுதி, பண்ணின்பயம், இவற்றைப் பாண்டிய மன்னர்கள் நன்கு துய்ப்பது வழக்கம் என அறியலாம்.

காலைமுரசம், தொன்றுபடுமுறை,-இவை இசைத்தமிழ்க் குறிப்பே. குடமுதல் இடமுறை, குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம், குரல், மந்தமாக, இளி, சமனுக. துத்தம் வலியா, மந்தம் விளரி பிடிப்பாள் – இவை பாடும் முறை. செந்நிலைமண்டிலம் – நாடகத் தமிழ்க் குறிப்பேயாகும். கற்கடகக்கை, ஆடற் சீர், முல்லைத்தீம்பாணி,

கொன்றையந்தீங்குழல்
ஆம்பலந் தீங்குழல்
முல்லையந் தீங்குழல்
} இசைக் குழற் கருவி வகை

ஒன்றன்பகுதி, ஒற்றைத்தாளத்தின்கூறு எருமன்றத்தாடும்குரவை, உள்வரிப்பாணி, யாழும், தண்ணுமை, முழவம், தாழ்தருதீங்குழல், பண்ணுக்கிளை பயிரும் பண்ணியாழ்ப்பாணி, நாடகமடந்தையர், அணிமுரசு ஆரபடி, சாத்துவதி, என்ற இருவிருத்தி, வரி, குரவை, – சிறப்பாக மதுரைவாழ் ஆய்ச்சியர்களின் இசைக்கலைவழக்காகவே இவற்றை இளங்கோ குறிக்கின்றார் என நன்கு உணர்தல் வேண்டும்,

3] புகார்காண்டத்தில்

முரசியம்பின, முருடதிர்ந்தன. தோற் கருவிகளின் ஓசைக் குறிப்பு. பாட்டினர், குழலும் யாழும், யாழிடைப் பிறவா இசையே. இவை, உவமை என்பது விளங்கும்.

ஆடல், பாடல், இருவகைக் கூத்து, அதுவே வேத்தியல் பொதுவியல் எனவும் படுமன்றோ! பதினோராடல், பாட்டு, கொட்டு, ஆட்லுக்குரிய பாடலுக்குரிய பாணி, தூக்கு, பிண்டி பிணையல் எழிற்கை, தொழிற்கை கூடைசெய்தகை, வாரஞ்செய்தகை–ஈங்கும்-குரவை வரி, இவையாவும் நாடகத் தமிழ்க் குறிப்பே என உணரலாம்.

யாழும், குழலும், சீர, மிடறு, தாழ்குரல் தண்ணுமை, ஆடல், இசைந்தபாடல் இசை, வரி, ஆடல், உரிப்பொருள், தேசிகத்திருவினோசை, கவியது குறிப்பு, ஆடற்ஞெகுதி பகுதிப்பாடல், நாட்டியநன்னூல், ஆடல், பாடல், இசை, தமிழ், பண், பாணி, தூக்கு, முடம், தேசிகம், கூடைநிலம், வாரநிலம், யாழும் குழலும், ஏங்கிய மிடறு, கூருகிர்க் கரணம், குறியறிதல், ஆக்கல், அடக்கல் மீத்திறம்படாமை, கித்திரக்கரணம், தண்ணுமை, இங்கே, இயல், இசை, நாடகம் எல்லாவற்றையும் உள்ளடக்கிக் கூறப்பெற்றமையறியலாம்.

சித்திரப்புணர்ப்பு, வஞ்சனைப்புணர்ப்பு, வர்த்தனை நான்கு, மயலறப் பெய்தல், குரல்-இளிமுறை, பண்ணமை முழவு, கண்ணெறி, வண்ணப்பட்டடை, இசையின் இயற்கை வந்தது வளர்த்தல், வருவது ஒற்றல், இன்புற இயக்கல், இசைபடவைத்தல், ஈரநிலம், இவை சிறப்பாக குழற்கருவியின் நுண்மையினையே விளக்குவதாகும் என அறிதல் கூடும்.

ஈரேழ் தொடுத்த செம்முறைக்கேள்வி, ஓரேழ்பாலை, தாரபாகம், குரலின் பாகம், மெய்க்கிளை நரம்பு, கைக்கிளையொழிந்த பாகம் பொற்புடைத்தளராத் தாரம், விளரி, கிளைவழிப்படுதல், நரம்புகளை மகளிர் என்றே கூறுவது, உழை யிளி கைக்கிளை, வம்புறு மரபிற் செம்பாலை, பெற்றி படுமலை, செவ்வழி, பகரும் பாலை, குரல் குரலாகத் தற்கிழமை திரிதல், முன்னதன் வகையே முறைமையிற்றிறிதல், இளிமுதலாகிய ஏர்படுகிழமை, கோடிப்பாலை. விளரிப்பாலை, மேற்செம்பாலை, நீடிக்கிடந்த கேள்விக்கிடக்கை, இணை நரம்பு, அணைவுறக் கொளல், யாழ் மேற்பாலை, இடமுறை மெலிதல், குழன்மேற்கோடி வலமுறை வலிதல், வலிவு, மெலிவு, சமன் பொலியக்கோததல், இவை யாழ் பற்றியே தனித்துக் கூறப்றெ்பறன.

எண்ணியநூலோர், ஒருவழி வகுத்தல் நெடுங்கழை, கண்ணிடை ஒருசாண், நூனெறி மரபின் அரங்கம், இருபத்துநால்விரல் அளவுள்ள கோல், எழுகோல் அகலம், எண் கோல் நீளம். ஒருகோல் உயரம், உத்தரப் பலகை, அரங்கின் பலகை, இடை நிலம்நாற்கோல் ஏற்றவாயில் இரண்டு, பொலியத் தோற்றிய அரங்கு, பூதரை எழுதுதல், மாண் விளக்கெடுத்தல், ஒருமுக எழினி பொருமுக

எழினி, கரந்துவரலெழினி, விருந்தாடக்கிடந்த அருந்தொழிலரங்கம், சீரியல் வெண்குடைக் காம்பு, நவமணிபதித்தல், பொலந்தகட்டு இடைநிலம் போக்கல இந்திரசிறுவன் சயந்தன், வழிபடு தலைக்கோல், முரசு பல்லியம், குயிலுவ மாக்கள். நெறிப்பட நிற்றல், வலக்கான் முன்மிதித்தேறல், வலத்தூண் சேர்தல், இடைத்தூண் சேர்தல், தோரிய மகளிர், சீரியல் பொலிதல், நீரல நீங்கல், வாரமிரண்டு வரிசையிற்பாடல், கூடிய குயிலுவக்கருவிகள்— இவையாவும் சிறப்பாகப் பண்டையநிலையில் ஆடற்கலையைக் குறித்த நாடகத்தமிழ்ப் பண்பையே நன்கு காட்டுவனவாக இளங்கோ குறித்துள்ளார்.

நாரதன் வீணை நயந்தெரிபாடல், தோரிய மடந்தை வாரம்பாடல், நாடகமுருப்பசி, வீணை மாயோன்பாணி, வருணப்பூதர் நால்வகைப் பாணி, வானூர்மதியப்பாணி, சீரியல் பொலிதல் நீரலநீங்குதல் இமையவனுடிய கொடு கொட்டியாடல், வியனபாண்டரங்கம் அல்லிய வாடல், மல்லினுடல், துடியாடல்,குடையாடல், குடக்கூத்து, பேடியாடல், மரக்காலாடல், பாவையாடல் கடையக்கூத்து என்றபதினோராடல் அவ்வவற்றிற்குரிய பாட்டின்பகுதி, ஆடல்கோலம், அணி, ஆடுகளமகளிர், பாடுகளமகளிர், திருந்துகோல் நல்யாழ், இவற்றை விஞ்சையர்களே வந்துகண்டும், கேட்டும் மகிழ்வது மரபு என்ருர் இளங்கோ

யாழ், சித்திரப்படத்துட்புக்குச் செழுங் கோட்டின் மலர்புனைந்து மைத்தடங்கண் மண மகளிர கோலம்போல் வனப்பெய்தி இருந்த தாம். இதுமாதவி இல்லத்து யாழ்க்கருவி.

பத்தர், கோடு, ஆணி, நரம்பு, இவை தெளிவாக இருந்து. உயர்வகையாகவும் இருந்தது என்ற குறிப்பாம். பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு, என எண் வகை இசையெழுப்பும் முறை, இவற்றில் மாதவி மிகவும் கைதேர்ந்த பயிற்சியுடையாள் என்பதைப் பண்வகைப் பரிவுதீர்தல், என்ற கருத்தோடு காட்டியுள்ளார் நம் இளங்கோவடிகள்.

வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல் உருட்டல் தெருட்டல், அளளல், பட்டடை என இசைக்கரணம் எட்டுவகை, எலலாம் மாதவிககே இயல்பான பாணி. கானல்வரிப் பாணி, கோவலனும் மாதவியும மிகக வலல வர்களாகத் திகழ்ந்தனர் என்பதே இளங்கோ அடிகள் தரும் நுண்குறிப்பாகும்

குழல்வழிம் நிற்பது யாழ் யாழ்வழித் தண்ணுமை நிற்பது, தண்ணுமைப் பின்வழி நிற்பது முழவு, முழவொடு கூடி நின்றிசைக்கும் ஆமந்திரிகை, அந்தரம், கொடடு, இரணடுமுடையதோர் மண்டிலம், கட்டிய மணடிலம பதினொன்று, அந்தரக் கொட்டு, வக்காணம், பாலைப்பண், நான்கின் ஒரீஇய நன்கனம், மூன்றளந்து கொட்டல், ஐந்து மண்லடித்தால கூடைபோக்கல, வந்த வாரம் வழி மயஙகிய பின்றை ஆறுகாலும அமமுறைபோக்கில், ஐந்தினகொளகை, நாடடிய நன்னூல நன்கு கடைப்பிடித்தல தலைக் கோல எய்தித் தலையரஙகேறுதல, விதிமுறை, இவையெல்லாம அரங்கத்தில் ஏறிப் பலரோடு ஒரோவழித் தொழில் புரியும் ஆடற்கலையை நன்கு விளக்குவனவாகும். குழலவளர் முல்லை, பாணவாய் வணடு நோதிறமபாடுதல், புள் வாய் முரசு, முள்வாய்ச்சங்கம, இவை காவிரிப் பூம்பட்டினத்து அன்ருட நிகழ்ச்சியின் இயற் கையாரும். குழலினும யாழினும குரல்முதல் ஏழும்வழுவினறிஇசைத்து வழித்திறங்காட்டும் அருமபெறன் மரபிற் பெருமபாணர்கள், அவர் தம இருப்பு, காவற்கணிகையர், ஆடற்கூத்தியர், துணஙகையர், குரவையர், மயிர்க்கண முரசு, முணங்கெழு முரசு, கருவிக்குயிலுவர், பணணியாழ்ப் புலவர், பாடற்பாணர், குரல் வாய்ப்பாணா, இளிவாய்வண்டு, உள்வரிக் கோலம், பண்மொழி நரம்பு திவவுயாழ் மிழற்றல், இவை காவிரிப்பூம பட்டினத்தில் வாழ்ந்த இசை. நாடக, மக்கள் இருக்கையையும குறிததது; அவர்களின் கலை நுண்மையையும புலப்படுத்துவனவாகவே உள்ளன ஆற்றுவரி, சார்த்துவரி, முகமிலவரி, நிலைவரி, முரிவரி, திணை நிலைவரி, மயங்குதிணை நிலைவரி, சாயல்வரி, கோவலன் புலமை, இயல், இசை, நாடகம் மூன்றிலும் சிறந்து விளங்கிற்று.

அதிராமரபின் யாழ், மதுரகீதம், ஒன்பான் விருத்தி, தலைக்கண் விருத்தி, அதாவது மேற்செம்பாலை, இருக்கை, வலக்கைப் பதாகை, கோடு, இடக்கை நால்விரல் மாட்கம், செம்பகை, ஆர்ப்பு, கூடம், அதிர்வு, வெம்பகை, விரகுளி, பிழையா மரபின், ஈரேழ்கோவை, உழைமுதற் கைக்கிளை, யிறுவாய்க் கட்டுதல், இணை, கிளை பகை நட்பு இசைபுணர்குறிநிலை, குரல்வாய் இளிவாய்க் கேட்டல், வரன்முறை மருங்கில் ஐந்தும், ஏழும், உழைமுதலாக உழையீறாக, குரல்முதலாககுரலீறாக, அகநிலை மருதம, புறநிலை மருதம், அருகியல் மருதம், பெருகியல் மருதம், என நால்வகை சாதி; நலம் பெற நோக்கல், மூவகை இயக்கம் தெள்ளிசைக்கரணம், புறத்தொருபாணி, எண்ணெண் கலை பண்ணுந்திறனும், இங்கு தனித்து மாதவியின் யாழ்ப்பயிற்சியையும், கண்டத்தால்பாடும் பயிற்சியையும் நன்கு தெளிவு படுத்துகிறார் இளங்கோவடிகள்.

கண்கூடுவரி, காண்வரிக்கோலம், உள்வரியாடல், புன்புறவரி, கிளர்வரிக்கோலமும், தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக்கோள்வரியும், ஆடன்மகள் வேனற்பாணி, கானற்பாணி விருந்திற்பாணி, ஏர்மங்கலப்பாட்டு, தெண்கிணைப்பொருநர், மண்கணைமுழவு, மகிழிசையோதை, அரங்கு, ஆடல், தூக்கு, வரி அணைவுறக்கிடந்த யாழின் தொகுதி, ஈரேழ் சகோடம் இடநிலைப்பாலை, பாரதிவிருத்தி, திணைநிலைவரி, இணைநிலைவரி, தாரத்தாக்கம், தான்தெரிபண், ஒளியுடைப்பாணி, இவற்றால் கோவலனது நாடத்தமிழ் நூற்பயிற்சியையும் அவற்றின் பேருணர்வையுடைய அவனது திறமையையும் அவன் மாதவியோடு பழகிய காலத்து நாடகத் தமிழ்வரி அன்றாட வாழ்க்கையிலேயே அவளுக்கு (மாதவிக்கு) அவை எவ்வாறு பாடுபெற்றன என்பதையும் அவற்றை எல்லாம் ஒன்றொன்றாய் நுனித்தறிந்து நன்கே துய்த்துப் பயனெய்திய அவனது இன்ப வாழ்வினையும் கலைவாழ்வினையும், செல்வவாழ்வினையும், ஆங்காங்கு எடுத்துக்காட்டி, வாய்ப்புத் தோன்றுங்கால் அவற்றை உடனே அவன் மறந்து, துறந்து, செலலும் நிலையில் கருணை மறவனாய், செல்லாச்செல்வனாய், இல்லோர், செம்மலாய் வாழ்ந்தான் எனக்காட்டினர் இளங்கோ.

இவ்வாறான வாழ்வினைத்தான் பழந்தமிழ் நாட்டு இயற்கலையும், இசைக்கலையும், நாடகக் கலையும் இந்நாட்டு மக்களுக்குத் தந்தன என்பதை சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள், இயற்குறிப்போடு இசைக்குறிப்பாகக் கூத்துக் குறிப்பாகவும் கூறிக்குறித்து வைத்தார் என ஒல்லும் வகையானெல்லாம் யாமும் உணர்வோமாக.

வாழ்க தமிழ் மக்கள்! வாழ்க!! தனித் தமிழ்க்கலை !!வாழ்க!! தமிழ்வளரும் தஞ்சைக் கரந்தைப்புலவர் கல்லூரி இளங்கோக்கழகம்.

# இளந்தமிழா எழு!

*பேராசிரியர்,* **ஜெ. ஆர். ஜெயச்சந்திரன்**, எம.ஏ. (வரலாறு): எம்.ஏ. (தமிழ்): டி.பி.எ.டி.,
முதல்வா, கரந்தைப் புலவர் கலலூரி.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே ஈடிணையற்ற இலக்கிய வளர்ச்சியைப் பெற்றிருந்த சிறப்பு இத்தமிழ்மண்ணுக்குரியது. தமிழ்மொழியில் ஏற்றமிகு இலக்கியங்கள் அக்காலத்திலேயே தோன்றி உயரிய கொள்கைகளை உலகுக்களித்த செய்தியை வரலாறு எடுத்தியம்புகின்றது. நீராலும் நெருப்பாலும் கரையான்களாலும் அழிந்தவைபோக எஞ்சியிருக்கும் இலக்கிய ஏடுகளே தமிழின் தொன்மைக்கும் சிறப்புக்கும் சான்று பகர்வனவாக உள்ளன. கி. மு. நான்காம் நூற்றுண்டில் தோன்றிய தொல்காப்பியத்தை ஆழ்ந்து கற்போர் அத்தகைய இலக்கண நூலொன்று தோன்றுதற்கு நெடுங்காலத்துக்கு முன்னரே வளமான இலககியங்கள் பல தமிழ் மொழியில் தோன்றியிருக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துகின்றனர். இவ்வாறு நீண்ட நெடுங்காலமாக நிலைபெற்றிருக்கும் இம்மொழி இன்றும் குன்ருஇளமையோடு இணையற்ற இலக்கியங்கள் பலவற்றைக்கொண்டு இலங்குகின்றது. மாறிக்கொணடேயிருக்கும் சமுதாயம் மொழித்துறையில் உருவாக்கும் மாறுதல்களைத் தமிழ்மொழியிலும் காணகிறோம். தமிழிலக்கிய வரலாற்றைத் தொடர்ந்துகாணும் எவரும் இம்மாறுதல்களைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

வளரும் தமிழ் செழிக்க வழிவழியாக வந்த கவிஞர்களும் புலவர்களும் வளமான இலக்கியங்கள் பலவற்றைப் படைத்துள்ளனர். இருபதாம் நூற்றுணடில் இத்தமிழ் மேன்மேலும் சிறந்தோங்கி வளர்வதற்குத் தடையான சூழ்நிலை உருவானபோது உள்ளத்தில கனலும உணர்ச்சியில் புயலும் கொணடு எழுச்சிமிக்க கவிதைகளை எழுத்திலே வடித்தவர் பாரதிதாசன். தமிழுக்குத்தடை, தமிழர்க்குத் தீங்கு என அறிந்தபோதெல்லாம் கனல் தெறிக்கும் கவிதைகளைப் பொழிந்த அந்தக் கவிஞர், காதலுக்கு ஏற்ற கன்னலன்ன கவிதைகளையும், இயற்கையின் எழிலை எடுத்துரைக்கும் இனிய கவிதைகளையும் இயற்றியுள்ளார். இப்பெருங்கவிஞரின் பாடல்களிலசிலவற்றைக் கீழே காண்போம்.

**தமிழன் :**

பாரதிதாசன் தமிழனின் தாழ்ந்த நிலையைககணடாா அவர் நெஞ்சம் நெகிழ்ந்தது. இழிந்த எணணச்சேற்றில் இறங்கி இன்னல் படும் மக்களைத் தொட்டுஇழுத்துத் தோள் கொடுக்க முன் வந்தார். நலிவு நீக்கி 'ஓயுதல் இன்றி உழைப்பேன்' எனச் சூளுரைத்தார். உயர்வுக்காக உழைத்தால் மட்டும் போதாது, அது முழுப்பயனளிக்க வேணடுமாலை இழிவு நீககவும், இழிவு படுத்துவோரைத் தாக்கவும் வேண்டுமெனக் கருதினா. இப்புனிதப் பணியில் ஈடுபட்டுள்ளோரைப் பொருளைககாட்டிப் பதவியைக்காட்டி இழுத்திட எணணும் எத்தர்களை எச்சரிக்கும் வகையில, எதைககொடுத்தாலும் எவ்வளவு கொடுத்தாலும் ஏற்ற கொள்கையை விட்டு எதிரிகளைச்சார்ந்து வாழமாட்டேன என்ற உரமான உள்ளத்தின் உறுதியைத்தெளிவாக்கினர். 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமாவன்ன மானமுடையோர் மரபிலே வந்த தமிழர் ஆட்சியை நிறுவ அல்லல்களை ஏற்பேன்' எனறதோடு தேவைப்பட்டால் இன்னுயிரையும் ஈந்து இந்நாட்டின் சீரும் சிறப்புமஓங்குமாறு செய்வேன் என்று கூறிய அவர் உறுதியை,

"தாயின்மேலாணை தந்தைமேலாணை
தமிழகமேலாணை
தூய என் தமிழ்மேல் ஆணையிட்டே நான்
தோழரே உரைககின்றேன்
நாயினும் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார்
நலிவதை நான் கண்டும்
ஓயுதல் இன்றி அவர் நலம் எண்ணி
உழைத்திட நான தவறேன்.
தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை
என் தாய் தடுத்தாலும் விடேன்.

எமை நத்துவாயென எதிரிகள்கோடி
இட்டழைத்தாலும் தொடேன்
மானமொன்றே நல்வாழ்வெனக் கொண்டு
வாழ்ந்த என் மறவேந்தர்
பூனைகளல்லர் அவர் வழிவந்தோர் புலிநிகர்
தமிழ் மாந்தர்
ஆன என் தமிழர் ஆட்சியை நிறுவ
அல்லல்கள் வரின் ஏற்பேன்.
ஊனுடல் கேட்கினும் செந்தமிழ் நாட்டுக்
குவப்புடன் நான் சேர்ப்பேன்.'

என்ற பாடலில் காணலாம்.

தமிழர் பல துறைகளிலும் சிறந்து விளங்கவேண்டுமென்ற அவருடைய தணியாத ஆர்வத்தை

'விண்ணிடை இரதம் ஊர்ந்து மேதினி
கலக்குதற்கும்
பண்ணிடைத் தமிழைச் சேர்த்துப் பாரினை
மயக்குதற்கும்
மண்ணிடை வாளையேந்திப் பகைப்புலம்
மாய்ப்பதற்கும்
எண்ணிலாத் தமிழர் உள்ளார் எனும் நிலை
காண்பதென்றோ?'

என வினவும் பாடலில் காண்கிறோம்.

## தமிழ்

அவருடைய தமிழ்ப்பற்றை, தமிழ் என்னும் சொல் அவர் உள்ளத்தில் மூட்டிவிடும் உணர்வு அலைகளை,

'தமிழுக்கும் அமுதென்று பேர்—அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!'

* * *

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!'

* * *

'இன்பந்தருந் தமிழில அன்பு பிறந்ததுண்டு
துன்பம் இனியுமுண்டோ சொல் சொல்
சொல் பகையே!'

* * *

'கனியிடை ஏறிய சுளையும்-முற்றல்
கழையிடை ஏறிய சாறும
பனி மலர் ஏறிய தேனும்—காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும்—தென்னை.
நல்கிய குளிரிள நீரும
இனியன என்பேன் எனினும்-தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!'

* * *

'இனிமைத் தமிழ்மொழி எமது—எமக்
கின்பந் தரும்படி வாய்த்தநல் அமுது.'

* * *

'செந்தமிழே! உயிரே! நறுந்தேனே!
செயலினை மூச்சினை உனக்களித்தேனே!'

* * *

'நல்லுயிர், உடம்பு, செந்தமிழ் மூன்றும்
நான், நான், நான்.'

* * *

'கண்ணும் ஒளியும் போல எனது
கன்னல் தமிழும் நானுமல்லவோ?'

என்னும் பாடல்களின் மூலம் அறியலாம்.

## தொழிலாளர்

உழைப்போர் உரிய ஊதியமின்றி உழலுவதைக்கண்ட பாரதிதாசன் உள்ளத்தில ஓராயிரம் எண்ணங்கள் தோன்றின. உழைப்போர் வறியராக வாடும் நிலைகண்டு மனம் நொந்த பாரதிதாசன்,

'மண்மீதில் உழைப்போரெல்லாம் வறியராம்
உரிமை கேட்டால்
புண்மீதில் அம்புபாய்ச்சும் புலையர்
செல்வராம் இதைத்தான்
கண்மீதில் பகலிலெல்லாம் கண்டு கண்டந்
திக்குப்பின்
விண்மீனைக் கொப்பளித்த விரிவானம்
பாராய் தம்பி!'

எனக் கூறினர்.

தொழிலாளர் தொகை மிகுதி என்பதை விளக்கும் வகையில்,

'ஊரிலேனும் நாட்டிலேனும் உலகிலேனும்
எண்ணிஞல்
நீர்நிறைந்த கடலையொக்கும் நேர்
உழைப்பவர் தொகை'

எனப்புகன்ருர்.

காட்டையழித்து நாடாக்கியும், வயல்கள் அமைத்து வளம் பெருக்கியும், கருவிகள் செய்தும், கடல் முத்தை எடுத்தும் பலவகையான

பயனுள்ள பணிகளைச் செய்த மக்கள் ஏமாற்றப்படும் நிலைகண்டு ஏங்குவதை,

'சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கிய நல் வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம
எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்து தந்த கைதான்
யார் கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக
குலத்தைப்
போய் எடுக்க அடக்கிய மூச்செவரின்
மூச்சு?'

என்ற பாடலில் காணலாம்.

அழகிய பூஞ்சோலைக்குப் பாவேந்தர் சென்றார். அங்கே பூத்துக்குலுங்கும புத்தம் புதிய மலர்களைக கணடாா. சோலையின் சூழலில் கவிதை பிறந்தது.

'சித்திரச் சோலைகளே! உமை நன்கு
திருத்த இப் பாரினிலே—முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ
உங்கள் வேரினிலே'

என ரத்த வியர்வையைச் சிந்தி உழைத்ததன் பயனாகத்தான் அந்தச்சோலை உருவாயிற்று என்னும்உண்மையை உரைத்தார். சோலையை விட்டுச் சாலைக்கு வந்தார். நீண்ட நெடுஞ் சாலைகள், அவற்றின் இருமருங்கும் நிழல கொடுக்கும் மரங்கள் ஆகியவற்றைக் கண்ட கவிஞர்,

'மாமிகு பாதைகளே! உமை இபபெரு
வையமெலாம வகுத்தார்-அவர்
ஆமை எனப் புலன் ஐந்தும் ஒடுங்கிட
அந்தியெலாம் உழைத்தார்'

என்று கூறி நடந்தார். அங்கே ஒரு தொழிற்சாலையைக் கண்டார். அதனுள்ளே சென்றார். பேரொலியோடு இயங்கிய இயந்திரங்களைக் கண்டார். மீண்டும அதே நினைவு!

'ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே, உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ—நீங்கள்
ஊர்த்தொழிலாளர் உழைத்த உழைப்பில்
உதித்தது மெய்யல்லவோ?'

என்ற வினா அவர் உள்ளத்திலே தோன்றிக் கவிதையாகப் பொழிந்தது. இத்தகைய பணிகள் பலவற்றையும் தம் அயர்விலா உழைப்பால் செய்து முடிக்கும் தொழிலாளரோடு கவிஞரும் சென்றார், அததொழிலாளரின் குரலாக கவிஞரே முழஙகினா 'காடுகளைந்து, கழனி திருததி நாடு செய்து அங்கு நாற்றிசை வீதிகள் வகுத்து, வீடு கட்டி, வேண்டிய பண்டங்கள் ஈணடிடச் செய்து பாடுபட்டவர்கள் நாங்கள்! மலைபிளந்து, கடல்தூர்த்து, கப்பலோட்டி இயந்திரம செய்து, ஆடைகள் நெய்து, ஆற்றை வளைத்து, நாற்றுக்கள் நட்டு, கூடை முடைதல் முதல் கோபுரம் கட்டுதல் வரை பல வகையான பணிகளையும் புரிந்த எங்களைப் பாருங்கள்! கந்தையணிந்து, இரு கையினை விரித்து எங்கள் மெய்யினைப் போர்த்துக் கொண்டு மொந்தையிற் கூழைப் பலர் மொய்த்துக்குடித்துப் படுத்துக்கிடந்தோம். தங்கிட வீடுமின்றி வாடுகின்றோம். எங்கள் சேவைக்கு நீஙகள் காட்டும் நன்றி இதுதானா? எனவே

செபபுதல் கேட்பீர்—இந்தச்
செகத் தொழிலாளர் மிகப் பலர் ஆதலின்
சுப்பல்களாக—இனித்
தொழும்பர்களாக மதித்திட வேண்டாம்
இப்பொழுதே நீர்—பொது
இன்பம் விளைந்திட உங்களின் சொத்தை
ஒப்படைப்பீரே-எங்கள்
உடலில ரத்தம் கொதிப்பேறு முன்பே!'

என எச்சரிக்கையும் விடுத்தார்.

## இயற்கை

புரட்சிக் கவிஞனுக்குப் புரட்சி பற்றித்தான் பாடவியலும் என்ற எணணம் ஏற்படாத வகையில இயற்கையில இதயத்தைப் பறிகொடுத்து எழில்மிகு ஓவியங்கள் பலவற்றைப் பாவேந்தர் தீடடியுள்ளார். தென்றல் என்றால என்ன? அது எப்படி வீசும், விடை வேண்டுமா? பாரதிதாசனைக் கேட்போம்.

'பொதிகைமலை விட்டெழுந்து சந்தனத்தின்
புதுமணத்தில் தோய்ந்து, பூந்தாது வாரி

நதிதழுவி அருவியின் தோள் உந்தித்தெற்கு
நன்முத்துக்கடல் அலையின் உச்சிதோறும்
சதிராடி மூங்கிலிலே பண் எழுப்பித்
தாழையெலாம் மடற்கத்தி சுழற்ற வைத்து
முதிர்தெங்கின் இளம்பாளை முகம்சுவைத்து
முத்துதிர்த்துத் தமிழகத்தின் வீதிநோக்கி
அந்தியிலே இளமுல்லை சிலிர்க்கச் செந்நெல்
அடிதொடரும் மடைப்புனலும் சிலிர்க்க
என்றன்
சிந்தை உடல் அணு ஒவ்வொன்றும்
சிலிர்க்கச்
செல்வம் ஒன்றுவரும்; "அதன்பேர்
தென்றற்காற்று"

அந்தத் தென்றல் என்னசெய்தது என்பதைக் கண்ட கவிஞன். அத்தென்றலைப் பார்த்துச் சொல்லியதைக் காண்போம்.

'பெண்கள் விலக்காத உடையை நீ போய்
விலக்கினும் விலக்கார் உன்னை'.

என நயம்பட உரைக்கின்றார்.

இருளைக்கண்ட கவிஞர் அதற்கு ஏற்றதோர் உவமையைத்தேடி எடுத்துத் திறமையாய்த் தந்ததை

'நீலம் கரைந்த நிறைகுடத்தின்
உட்புறம்போல்
ஞாலம் கருப்பாக்கும் நள்ளிருள்'

என்ற வரிகளில் காண்கிறோம். அந்த இரவு எப்படிப்பட்ட இரவு? இன்ப இரவு, காதற் கரும்பான இரவு என்பதை,

'மேற்றிசைக் கதிர்ப்பழத்தை விருந்துண்டு
நீல ஆடை
மாற்றுடையாய் உடுத்து மரகத அணிகள்
பூண்டு
'கோற்கிளை உறங்கும் புட்கள் கொட்டிடும்
இறகின் சத்தக்
காற்சிலம்பசையக் காதற்கரும்பான இரவு!'

அந்த இரவிலே நிலவு தோன்றியது. அந்த நிலா எத்தகைய நிலா?

'மூழுமைநிலா! அழகுநிலா!
முளைத்தது விண்மேலே—அது
பழமையிலே புது நினைவு பாய்ந்தெழுந்தாற்
போலே!'

அதுமட்டுமா?

' நீலமுக்காட்டுக்காரி
நிலாப்பெண்ணுள் வற்றக் காய்ந்த
பாலிலே உறைமோர் ஊற்றிப்
பருமத்தால் கடைந்து, பானை
மேலுள்ள வெண்ணெய் அள்ளிக்
குன்றின்மேல்வீசி விட்டாள்!'

அதனைக்கண்டார் கவிஞர். உடனே தம் தோழனை அழைத்து

'ஏலுமட்டுந்தோழா நீ
எடுத்துண்பாய் எழிலை எல்லாம்'

எனக்கேட்டுக்கொண்டார்.

எப்பொழுதுமே இரவாக இருக்க முடியுமா? இரவு கழிந்தது, பொழுது விடிந்தது. உறங்கிக் கிடந்த உலகின்மேல் உதயசூரியனின் கதிர்கள் ஒளிபரப்பியதைக் கவிஞர்.

'ஒலிகடல் நீலப்பெட்டி
உடைத்தெழுந்தது கதிர்தான் என்றார்.'

கவிஞர் கடற்கரைக்குச் சென்றார். அங்கே கடற்கரை ஓரத்திலுள்ள மணல்மேடுகளைப் பார்த்தார் கடலில் எழுந்து எழுந்து வீழும் கடலலைகளைப் பார்த்தார். அதை அப்படியே நமக்குப் படம் பிடித்துக் கொடுத்துவிட்டார்.

'பெருங்கடல் ஓரம் எல்லாம்
கீரியின் உடல் வண்ணம்போல்
மணல்மெத்தை, அம்மெத்தைமேல்
நேரிடும் அலையோ கல்வி
நிலையத்தின் இளைஞர் போலப்
பூரிப்பால் ஏழும் வீழும்
புரண்டிடும் பாராய் தம்பி!'

காதல்

கவிஞரின் காதல் பாட்டுக்கள், தனிச் சுவை படைத்தவை. தரத்தில் உயர்ந்தவை- இதோ ஓர் எடுத்துக்காட்டு. பாடம் படிக்கிறான் ஆணழகன். அவனைப்பார்வையினாலே உண்கிறாள் பாவை. தலைநிமிர்ந்த ஆடவனின் கண்களில் அவளுடைய பார்வை பட்டுத்தெறித்தது. அவள் மெல்ல, தன் ஆடையைச் சரிசெய்து கொண்டு நின்றாள். இவனுக்குப் படிப்பிலா மனம் செல்லும்? ஆயிரம் ஏடுகளைத்தான் திருப்புகிறான் என்பதை,

கூடத்திலே மனப்பாடத்திலே—விழி
கூடிக்கிடந்திட்ட ஆணழகை
ஓடைக்குளிர் மலர் பார்வையினால்—அவள்
உண்ணத்தலைப்படு நேரத்தில்
பாடம்படித்து நிமிர்ந்த விழி—தனில்
பட்டுத் தெறித்தது மானின்விழி
ஆடைதிருத்தி நின்றாள் அவள்தான்—இவன்
ஆயிரம் ஏடு திருப்புகின்றான்.'

என்னும் வரிகளில் காண்கிறோம். காதலைப் பற்றிப் பேசும் பாவேந்தர் குடும்ப வாழ்க்கை பற்றியும் விளக்கமாகவும் விரிவாகவும் 'குடும்ப விளக்கில்' பேசியுள்ளார். கருத்தொருமித்த கணவனும் மனைவியும் பெற்றெடுத்த இளமகவைத் தாலாட்டும் பாட்டிலும் தமிழுணர்வு தலையாய இடம் பெறுவதையும மூடத்தனத்தை முறியடிக்க வேண்டுமென்ற உறுதி காணப்படுவதையும் அப்பாடல்களைக் கற்போர் காணலாம்

எடுத்துக்காட்டாக,

'மானிடரின் தோளின் மகத்துவத்தைக்
காட்டவந்த
தேனின்பெருக்கே, என்செந்தமிழே!
கண்ணுறங்கு

* * *

மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
காடுமணக்க வரும் கற்பூரப் பெட்டகமே!

போன்ற வரிகளில் கவிஞரின் கருத்துக்கள் மிளிர்கின்றன குழந்தை வளர்ந்து பள்ளி செல்லும் பருவம் வந்ததும் அது பெறற்கரிய கல்வியை, விலைபோட்டு வாங்கவியலாத கல்வியை, விரைந்து பெறவேண்டுமென அறிவுரை நல்கி, நாட்டின் குழந்தைகள் நன்றாய்ப் படித்து ஒன்றாய் இருந்து உயர்வினை எண்ண வேண்டுமென உரைத்துள்ளார்.

## தொண்டு

தன்னலமற்ற பணியைத் தாயகத்துக்கும் தமிழ் மொழிக்கும செய்வதையே தமிழ் இளைஞன் தன குறிக்கோளாகக் கொள்ளவேண்டுமெனக் குறிப்பிட்டு இறந்தொழிந்த பண்டைச் சிறப்பை மீண்டும் பெற்றிடவும் புது மலர்ச்சியும் புத்துணர்ச்சியும் பெற்று தமிழ் மொழி மேன்மேலும் சிறந்தோங்கவும் செயல் புரிய வேண்டுமென் அறிவுறுத்தியுள்ளார். தமிழின் உயர்வுதான் தமிழரை உயர்வடையச் செய்யுமென்பதைப் பல பாடல்களில் வலியுறுத்தும் பாவேந்தர், 'தமிழனே உலகாள உனது உழைப்பை நல்க உடனே வா' என அன்பழைப்பு விடுப்பதை ஏற்று இளந் தமிழர் கூட்டம் புற்றீசல்போலப் புறப்பட வேண்டும் அத்தகைய பணிபுரிய ஏற்றதொரு சூழ்நிலை தமிழ்நாட்டில் உருவாகியுள்ளது. தமிழ்நாட்டில் முன் எக்காலத்தும் இல்லாத அளவுக்குத் தமிழுணர்ச்சி காணப்படுகிறது.

'தமிழ் என்னும் பேருணர்ச்சி இந்நாள்
போல
தமிழ் நாட்டில் எந்நாளும் இருந்ததில்லை
தமிழாகுத் தொணடுசெய்யும் தமிழனுக்குத்
தடைசெய்யும் நெடுங்குன்றும் தூளாய்ப்
போகும்'

'தடை பல நேர்ந்தாலும் படை பலவந்தாலும் தயங்காது, மயங்காது தமிழ்ப் பணிபுரிய வாரீர்! வாரீர்!' என அழைப்பதை ஏற்று இளந் தமிழர் படை நற்பணிபுரிய நாடுமுழுதும் திரண்டெழ வேண்டும. தமிழ் வாழ, தமிழ் வளர, தமிழ் சிறக்க, தமிழ வெல்ல இளந் தமிழர் அயராது உழைக்க முன வரவேணடும். தமிழ்நாட்டு இளைஞர்களை நோக்கி,

'ஒணடமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம்
ஒவ்வொன்றும் உன் முன்னேற்றம்
கண்டறிவாய் **எழுந்திரு நீ இளந்தமிழா!**
கண்விழிப்பாய், இறந்தொழிந்த
பண்டைநலம் புதுப்புலமை பழம்பெருமை
அனைததையும் நீ
படைப்பாய் இந்நாள்
தொண்டுசெய்வாய் தமிழுக்குத்
துறைதோறும்
துறைதோறும் துடித்தெழுந்தே!'

எனப் பாவேந்தர் விடுக்கும் அனபழைப்பை
ஏற்றுப் பணிபுரிய **இளந்தமிழா எழு!**

# கம்பமாகவி

பாவலரேறு, ச. பாலசுந்தரம்,
(பேராசிரியா கரந்தைப் புலவர் கல்லூரி)

1 *ஆறெழுந்தார் மன்னுட்டில் அவனுக் குப்பின்
ஆறெழுந்தார் எனுந்தடைக்கு விடையில் லாமல்
தேரழுந்தூர்ப் பிறந்ததமிழ்ச் செல்வக் கம்பன்
தித்திக்க இராமகதை விருந்தை யள்ளிச்
சீரெழுந்தூர் செந்தமிழால படைத்த வள்ளல்
திசையெழுந்த புகழெல்லாம் செறிந்த செம்மல்
காரெழுந்தூர் வான்மழைபோல் கவிதை பெய்த
கவிமாமன் கழலிணைகள் கருத்தில் வைப்பாம்.

[வேறு]

2 உலகியல் தேர்ந்து கற்றேன்
உயிரியல் அறிந்த ஆசான்
அலகிலா மக்கள் எண்ணத்
தமைப்பெலாம் அறிந்த மேதை
பலகலைப் பண்பும் பாங்கும்
பகுத்தறிந் துணர்த்த வல்லான்
நிலவுலாம பொருளை எல்லாம்
நெடிதுணர்ந் தமைந்த நெஞ்சன்

3 இயல்நெறி காட்டும் ஆசான்
இடித்துரை புகட்டுந் தந்தை
அயலக லாமல் இன்பம்
அளித்திடும் காதல் மங்கை
மயல்மிகு மழலை நல்கும்
மக,வுயிர்த் துணையாம் நண்பன்
செயல்மறந் திடுமா றின்பம்
செய்திடும் தெய்வக் கம்பன்

4 அரசியல் நீதி நேர்மை
ஆட்சிசெய் முறைமைசெங்கோல்
முரசுகொள் வென்றி யாவும்
முடியர சதனை ஒட்டி
நிரல்படப் பேசும் போதே
நிகழ்குடி யரசின் மேன்மை
விரவுமா றுரைத்த செம்மல்
வேந்துநூ லாசான் கம்பன்

* ஆத்திமாலைசூடிய சோழனாட்டில

5 வள்ளுவர் முதலா முன்னோர்
வழங்கிய தமிழ்நூல் கூறும்
உள்ளுறை தேர்ந்து காட்டும்
ஒப்பிலா உரையாசான் தேன்
வெள்ளமா உணர்ச்சி பொங்க
வெளிப்படை குறிப்பென் றோதும்
கள்ளமை சொற்கள் தம்மைக்
களிநடம் ஆட வைப்போன்

[வேறு]

6 அன்னவன்சீர் ஆம்அமிழ்தக் கடலைச் சார்ந்தென்
அறிவகப்பை யால்முகந்திங் களிக்கவற்றோ?
இன்னவண்ணம் என்றிசைக்க இயலாவண்ணம்
இயலிசைநா டகவண்ணம் ஈன்ற வன்சீர்
உன்னவுன்ன உணர்வினிக்கும் உயிரி னிக்கும்
உளமினிக்கும் உரைக்கும்வாய் இனிக்கும் அன்னோன்
சொன்னவண்ணம் தொண்ணூற்றா றென்று சொல்வார்
தோன்றும்வண்ணம் அவை, தோன்றா வண்ணம் கோடி

7 கள்ளொழுகும் சிலகவியுள், கன்னற்சாறு
கசிந்தொழுகும் சிலகவியுள், முக்கனிச் சா(று)
உள்ளொழுகும் சிலபலவும் தேன்பி லிற்றும்.
ஊற்றெழும்பும் சிலகவியுள் அமிழ்தம் பொங்கிச்,
சொள்ளொழுகும் சிலகவியுள், பாலா றோடும்
சுவையெட்டும் சிலகவியுள் தொக்கு நிற்கும்
அள்ளியுண்ண அள்ளியுண்ணப் புலவோர்நாபபண்
அமர்ந்தமர ராய்விளங்கும் ஆக்கம் சேர்க்கும்

8 அன்னநடை பயிலும்சில பாக்கள், அஞ்சா
அரியேற்றின் நடைபுரியும் சிலபா யானை
என்னநடை படியும்சில பாக்கள் ஆங்கே
ஏறுநடை போடும்சில பாக்கள், ஓடும்
பொன்னிநடை யாடும்சில பாக்கள், ஆங்கே
புதுமணப்பெண் நடைகமழும் சிலபா,வானின்
மின்னல்நடை யிடுஞ்சிலபா அருவி யைப்போல்
விரையும்சில மேகமென வசையும் அம்மா!

9 வண்டொலிக்கும் சிலபாட்டுள், வான்ப ருந்தின்
மணிக்குரலும் மணிப்புறவின் குரலும் கேட்கும்
தண்டையொலி சிலபாட்டுள் தரங்கம் பாடும்
தண்ணுமையும் குடமுழவும் தழங்கும், வென்றி
கொணடமுர சொலிமுழங்கும் சிலபாட்டுக்குள்
கோடையிடி படமுழங்கும் குளிரி கொட்டும்
செண்டொலிக்கும் பரிகளைகளும் குயில்கள் கூவும்
செங்கோட்டி யாழிசைக்கும் செய்யுள் தோறும்.

[வேறு]

10 சமயக் காழ்ப்பிலாச் சமரச ஞானிகண்
இமையெ னத்தமிழ் இயல்பு காத்தவன்
நமையும் பெற்றதாய் நாட்டுப் பற்றுகொண்(டு)
அமையும் வண்ணம்நூல் ஆக்கிய மாக்கவி

[வேறு]

11 சமயக் கிளர்ச்சி தலைதூக்கத்
தமிழும், அதனைச் சார்ந்தொழுக
அமையுந் தமிழ்நாட் டரசெல்லாம்
அயலார் நாகரிகந்தழுவ
உமியும் பதரும் என்னவுயிர்
உலவாச் செய்யுள் புலவர்செய
தமிழ்த்தாய் இயக்கந் தடையுற்றுத்
தமிழர் பிறர்போல் வாழும்நாள்

12 வழக்கா றழிந்து சங்கத்தோர்
வாய்ச்சொல் பெரிதும வாடக்கண்(டு)
இழுக்கா றிதுவென் றுளம்நொந்தே
என்று லாம்பணி தமிழ்த்தாய்க்கே
அழுக்கா றுடையார் பகைநோககா(து)
ஆக்கித் தருவேன் எனமுன்னி
ஒழுக்கா றமைதன் புலமையினுல்
உயிர்உணர் வீந்தவன் உயர்கம்பன்

13 எம்மொழி யிற்போல் காப்பியநூல்
இல்லை தமிழில் என்றவர்கள்
விம்மிப் புழுங்க வீணைமகள்
வென்றி யடையச் செய்துதமிழ்
செம்மொழி என்றிவ் வுலகோர்க்குத்
தெளியக் காட்டித் தெவ்வோர்முன்
அம்மைக் கிழைத்த கறைநீக்கி
அரியணை ஏற்றிய அருந்தொண்டன்

[வேறு]

14 அருந்தமிழ்ப் பண்புந் தூய
அகப்புற மரபும் யாவும்
பொருந்தவோர் தமிழ்நூல் செய்தான்
புலவர்கள் எக்கா லத்தும்
அருந்துமோர் அமிழ்த மாக
ஆக்கிநம் சிந்த னைக்கோர்
விருந்துசெய் தளித்த கம்பன்
வீறெலாம் விளம்ப வற்றே

[வேறு]

15 வடமொழியில் வான்மீகி வகுத்தகதை
அமைப்பைமதி வலியால் மாற்றிக்
கடவுள்நிலை ராகவற்குத் தந்ததல்லாற்
காதலொடு கற்பும் வீறும்
முடமடையா நிலைநினைந்து முத்தமிழ்ப்பண்
புயிருட்டி மூவாச் செய்யுள்
நடமிடச்செய் திவ்வுலகக் கவிஞருக்குள்
நறுந்தலைமை கொண்டான் கம்பன்.

[வேறு]

16 கவிவர லாற்றி னுள்ளே
கலங்கரை விளக்கம் ஒப்பான்
புவிவர லாற்றுள் நிற்கும்
புலவர்க்குப் புலவ னாவான்
அவியுண வுண்ணும் தேவர்
அவன்கவி ஒன்று கேட்பின்
செவியமிழ் தீதெதென் றேயவ்
அமிழ்தினைத் திரும்பிப் பாரார்.

17 செழுந்தமிழ்ப் பொன்னி யாற்றின்
செம்பியன் அணையே போல்வான்
பழந்தமிழ் வானில பூத்த
பகலவன் போல்வான், மண்ணில்
எழுந்தமிழ்க் கானில் சிங்க
ஏற்றினைப் போல்வான் வானோர்
தொழுந்தமிழ்ப் புத்தேள் நாட்டில்
துகளிலா வேந்தன் போல்வான்

[வேறு]

18 புறஞ்சான்ற கம்பனைப்போல் பாத்தி ரத்தின்
பொற்புநிறை வுறவமைத்தார் புவியில் யாரே?
திறஞ்சான்ற இராமனொடு சொல்லின் செல்வன்
திகழ்பரத னோடிளைய பெருமாள் மற்றும
அறஞ்சான்ற வீடணன்நற் கங்கை வேடன்
ஆண்மைகமழ் வாலியொடங் கதன்சுக் ரீவன்
மறஞ்சான்ற கும்பகர்ணன் இந்த்ரசித்தன்
மாண்புணர நம்மனத்துள் நிலைக்க வைத்தான்.

[வேறு]

19 தாரைக்குங் கூனிக்குந் தகவளித்துராவணற்குத்தலைமைதந்து
பூரிக்கும் வகைசனகி பொற்புரைத்துக் கற்புநிலை பொலியக்காட்டி
யாருகரும் இழுக்கின்றித் தமிழ்ஞான்ச் செருக்கொளிர யாப்பமைத்துப்
பாருக்குள் கவிச்சிறப்பைப் பறைமுழக்கிப் பரப்பியவன் பாவேந் தன்றோ?

[வேறு]

20 கற்றவர் வியக்கும் கம்ப
நாடனின் காப்பி யந்தான்
சுற்றிருள் சூழவொண்ணுச்
சுடர்கலை குறையாத் திங்கள்
தெற்றெனச் செவிக்குள் ளோடிச்
சிந்தனை விரிக்குந் தென்றல்
மற்றவர் கட்கக ஒண்ணு
மாமலை கடல்ஆ காயம்

21 செங்கதிர் மதியும் விண்மீன்
திரைகடல் மண்ணில விண்ணில்
தங்குறு பொருள்கள் பூதச்
சார்பினுல் இயங்கி வாழும்
துங்கநற் பொருள்கள், தோற்றச்
சிறப்பினுல் மக்களின்பால்
பொங்குறு செயற்பண் பெல்லாம்
புரையறத் தெளிந்த வற்றை

[வேறு]

22 ஆளும்நெறியாற் கவியரசன்
அணியும் சுவையும் கற்பனையும்
மூளும்வண்ணம் ஓசைபெற
முழங்கும் பாக்கள் இடத்திற்கும்
நீளும் கால நிகழ்ச்சிக்கும்
நிகர அமைத்த சூழ்ச்சியினுல்
கோளும் செயலும் நேரமைச்சாய்க்
கூறச் சிறிதும் தடையுண்டோ?

[வேறு]

23 வழக்குச்சொல் திசைச்சொல் மற்றை
வடசொலென் றவற்றைத் தேர்ந்து
பழக்கத்தால் அணிவ குத்துப்
பைந்தமிழ்ச் சொல்வீ ரற்கோர்
இழுக்கிலா தமர்செய் தோங்க
ஏவிநல் வாகை பூண்டு
முழக்கலாற் படையை ஆளும்
மொய்ம்புசால் தலைவ னென்பார்

[வேறு]

24 ஆரியம் முதலயல் மொழிகளும் உரியதாம்
சீரிய காதையைச் சிந்தையால் உழுதுபின்
நேரிய தமிழெனும் நீரமை பாய்ச்சிநெல்
வாரியாம் காப்பியம் வழங்குமோர் உழவனும்

[வேறு]

25 பெயர்வினையாம் சொற்களியைக் கற்ப னைநீர்
விட்டுணர்வாற் பிசைந்தெடுத்துச்
செயிர்களைந்த செய்யுளெனும் திரிகையில்வைத்
தொலிக்கோலாற் றிரித்துச் சுற்றி
உயிர்பொதியும் பாத்திரங்கள் உடையாமல்
உருச்செய்த ஒருவேட் கோவாம்
துயர்களைந்த பெருவள்ளல் சொல்லரசன்
கவிச்சக்ர வர்த்தி கம்பன்

[வேறு]

26 கட்டையெனப் பிறர்கருதும் சொல்லெ டுத்துச்
கடைந்துகவின் சிலையமைக்கும் கைவல் தச்சன்
பட்டையிட்டுச் சொற்பளிங்கைப் பளப ளக்கும்
பருவயிர மணியாக்கிப் படைக்குங் கன்னுன்
நெட்டியிலை மட்டையெனப் பிறர் நினைக்கும்
நிகழ்ச்சியினை வியக்கும்வகைச் சாந்து பூசிக்
கட்டியதோர் மாளிகைபோல் காட்சிநல்கக்
கடைபோக வகுத்தமைக்குங் கலைஞன்கம்பன்

[வேறு]

27 ஊடும்பாவுமாய்ச் சொற்பொருள் பின்னிட
உணர்வும் இன்புமாய் வண்ணம் நிகழ்ந்திட
நீடும் காப்பிய ஆடைநெய் சேணியன்
நிகரி லாவொலி வண்ணங் குழைத்துயிர்
கூடும் வகைபுனை காவிய ஓவியன்
கோலத்தமிழ் மலர் மாலை தொடுப்பவன்
தேடும் கவிபபொருள் யாவையும் முட்டின்றித்
தேக்கி வழங்கிடும் வாணிகச் செம்மலே

[வேறு]

28 நற்றமிழ்ச் சொல்லின் தூய்மை
நயஞ்சிறப் பாழம் யாவும்
தெற்றெனக் காட்டி மக்கள்
சிந்தைகூர் இருளைப் போக்கும்
பெற்றியால் இலககியத்துள்
பேரொளி கம்பன் காதை
குற்றமும் குறைவும் இல்லாக்
குளிர் முழு நிலா அவன் நூல்

[வேறு]

29 பிறர்மொழியும் அயற்பண்பும் பேணிச் செய்த
பிணிககவியால் வெப்புற்ற தமிழ்த்தாய் மேனி
வறமமாறப் பெய்தமழை, மாருத் தென்றல்
வண்டமிழின் வளந்தவழும் மலை, மாமேகம்

திறம்மாறி மெலிந்ததமிழ் நிலைபெற் றோங்க
நேர்ந்ததொரு சஞ்சீவி மாம ருந்து
திறம்மாறிச் செல்பவரைத் திருத்துகின்ற
திசைக்கருவி செந்தமிழ்பூாய் கங்கை நீத்தம்

[வேறு]

30 உலகை மாகவி ஒருசில ருள்ளே
திலகமென் ருன்றோர் செப்புவர் ஒளிரும்
அலகிலா உவமை கற்பனைச் சுவையோடு
இலகுறு புலமை மலைகளுள் இமயம்

[வேறு]

31 வாலியின் வாய்நின்றுரைக்கும் வழக்கறிஞன்
வசிட்டன்பால் சார்ந்துரைசெய் தத்துவ ஞானி
சாலும்உரை கூனிவழி தருக்க வாதி
சாம்பவன்வாய் மொழிவழியோர் தருமவாதி
ஆலுமனு மன்வழியோர் அறநூல் வலலான்
அங்கதன்வாய் மொழிவழியோர் அரசத்தூதன்
சீலமுறு பரதன்வழி நடுவண் தேர்ந்த
சிலையிளவல் மொழிவழியோர் சேனைவீரன்

32 திரைசுருளும் நாடகம்போல் காட்சிஎல்லாம்
செஞ்சொல்கமழ் பாடலிலே தீட்டிக் காட்டி
உரையின்றி மெய்ப்பாட்டின் வாயிலாக
ஓவியம்போல் உளக்காட்சி நிகழச் செய்வான்
விரைவின்றிச் சிறுதொடரால் பாத்திரத்தின்
வீறெல்லாம் வினையோடு சுட்டிக்காட்டும்
கரையற்ற கல்விவலான், கவிவிளைக்கும்
கழனியெனக் காப்பியத்தைத தந்த வேந்தன்

[வேறு]

33 செம்பொன் உருக்கி நவமணிகள்
தீட்டிப் பதித்த மாலையினுள்
கொம்புத் தேனும் குளிர்மணமும்
கூடச் செய்த பான்மையினல்
கம்ப நாடன் கவிதையைப்போல்
கற்றோர்க் கிதயம் களியாதென்
றிம்பர் உம்பர் செல்வமெலாம்*
இழித்தன்று ரைத்தார் ஒருபுலவர்

34 கம்பன் பிறந்த நாடென்று
களித்தே மொழிந்தார் பாரதியார்
கம்பன் கவிதை நூலெமது
கையில் என்ருர் கவிமணியும்

கம்பன் இன்றேல் கல்வி வலார்
கவிஞர் உரைஞர் பல்லருக்கு
வம்பும் வளமும் வாழ் வோடே
வசையும் புகழும் இலையம்மா!

[வேறு]

35 ஊனுடம் பெடுத்தார்க் குள்ளப்
பண்பழிந் தொழியு மாயின்
வானுடன் பூதமைந்தும்
அடிமையாம் வரம் பெற்றாலும்
ஈனமுற் றழிவார் என்னும்
இணையிலாத் தத்துவத்தை
மானுடம் வென்ற தம்மா
எனவலி யுறுத்தி நின்றான்

[வேறு]

36 புகலும் சொல்லோ டணியாப்பிற்
புரட்சி செய்த பெரும்புலவன்
நிகரில் விருத்தக் கவியாலே
நெடியோன் என்ன நிலை பெற்றான்
தகவும்; தமிழின் சால்பும், யான்
சாற்றும் கல்வித் தகவில்லேன்
நகலிற் கினிதாச் சில நவின்றேன்
நவை நீத் துண்மை நாடுகவே!

[வேறு]

37 நல்லற மாம்செய்ந் நன்றி யறிவினுக்(கு)
எல்லை சொல்ல இலக்கிய மானவன்
கல்லும் உணர்வுறக் காப்பியஞ் செய்தவன்
மல்லல் மாக்கவி கம்பன் வாழியே!

---

8—7—67 ல மதுரைத திருவள்ளுவர்கழக வெள்ளிவிழாக கவியரங்கத்திற பாடப் பெற்றவை

# குழந்தை போன்ற குறள்

(வித்துவான் திரு. அடிகளாசிரியன்)

1 குழந்தையுங் குறளும் ஒன்றாகும்
குறித்து நீவிர் அறிந்திடணும்
குழந்தைகள் கூடி விளையாடும்
குறளும் பத்தாய்க் கூடியிடும்

2 சின்ன வடிவாம் குழந்தையெலாம்
சிறுசிறு பாட்டாம் குறட்பாக்கள்
வெள்ளை உள்ளம் குழந்தைகட்கே
வெண்டளை பெற்றன திருக்குறள்கள்

3 சின்ன மெல்லிய சொற்களையே
செப்பும் நல்ல சிறுகுழந்தை
சின்ன மெல்லிய சொல்லாலே
செய்யப் பட்டன திருக்குறள்கள்

4 அகரம் முதலாம் எழுத்துக்கள்
அனைத்துஞ் சொல்லும் சிறுகுழந்தை
‘அகரம் முதல’ எனத்தொடங்கி
அனைத்துஞ் சொல்லும் திருக்குறள்கள்

5 வண்மை பெற்ற குழந்தைகட்கே
வாய்த்த தந்தை தாய்வேறாம்
தெண்மை பெற்ற திருக்குறட்கோ
திருவள்ளுவரே தாய்தந்தை

6 குழந்தை போன்ற குறள்களுடன்
கூடி நாமும் விளையாடில்
தழைந்த உள்ளம் பெற்றிடலாம்
தமிழை நன்றாய்க் கற்றிடலாம்.



தஞ்சையில் — தமிழ்ச் சங்கம்.

அச்சிட்டோர் : மகாலிங்கம் அச்சகம், தஞ்சை.